ரிஜிஸ்டர் நெ. 2041 தனிப்பிரதி விலை ஒரு அணா.

குடி அரசு

வருட சந்தா முன்பணம்	— ரூ. 3—0
6-மாத சந்தா ,,	— ,, 1-12
வெளி நாட்டிற்கு ,,	— ,, 4—0

ஞாயிறுதோறும் வெளிவருவது.

ஆசிரியர், ஈ. வெ. இராமசாமி.

வியாபாரிகள் விளம்பரம் அங். 1 க்கு ரூ. 1.
கோர்ட் விளம்பரம் அங்குலம் 1 க்கு ரூ. 2.
நீடித்த விளம்பரத்துக்கு தனி விகிதம்.

மாலை 7 | ஈரோடு, பிரஜோத்பத்தி௵ புரட்டாசி௴ 11௳ (27—9—1931) | மலர் 22

ஏழு தலைமுறைகளாய் கையாண்டனுபவம் வாய்ந்ததும், வைத்திய மகாநாடுகளிலும், கண்காட்சிகளிலும் மதிப்பு பெற்றதுமான சிறந்த ஒளஷதங்கள் எங்களுடையது. எவ்வகை வியாதிக்கும் ஏற்றது. எல்லோராலும் புகழ்பெற்றது. உண்மையும் உத்திரவாதமுமான மருந்து.

நீங்கள் என்றுமழியாத இளப்பருவத்தை அடையவேண்டுமானால் பழனி சி. எம். சாமி

மகா வீரிய **தங்க பஸ்பம்** சாப்பிடுங்கள்

தாதுபுஷ்டியில் மன்மதனுக்கோப்பாவீர்கள். பரீட்சைக்கும் பலனுக்கும் உத்திரவாதம்

வயோதிக தசையாலும், வாலிபபருவதுர்க் கிருத்தியங்களாலும் நீங்கள் இழந்த பலம், தாதுநஷ்டம், போகசக்திக்குறைவு, மனஉற்சாகம் இவைகளை திரும்பக்கொடுத்து, இல்லற ஒற்றுமை, வீரிய விர்த்தி முதலியவைகளைக் கொடுப்பதில் இணையற்றது: 24 நாள் பஸ்பம் விலை ரூ 10

காமரூபிலேகியம் தாதுபுஷ்டிக்கு மிக உயர்ந்தது இதில் தங்கபஸ்பம் வைத்துச் சாப்பிடலாம் சேர் ரூ 15

குருதாளக பஸ்பம்—இருமலுக்கு

காசம், க்ஷயம், ஈளை, இளைப்பு, இருமல், கஷ்ட சுவாசம், கோழை, கபக்கட்டு இவைகள் எவ்வளவு நாட்பட்டதாயிருந்தாலும் சரி, 8-வித காசமும் அவசியம் தீரும். அனுபவத்தில் கைகண்டது. 24 நாள் புட்டி 1க்கு ரூ. 8.

குருநாக பஸ்பம்—மூலத்திற்கு

ஆப்ரேஷன் அவசியமில்லை. மூளை தானே கரையும். கீழ்மூலம், ரத்தமூலம், குத்தல், மூலமுளை மலபந்தம் முதலிய ஒன்பதும் அதிசீக்கிரத்தில் குணமாகும். உத்திரவாதமுள்ள சிறந்த ஒளஷதம். புட்டி 1-க்கு ரூ. 4.

ஏராளமான நற்சாட்சிகளைக் கேட்லாக்கில் பார்க்கலாம்.

மாதர்களுக்கு

இது தான் வேண்டியது

கெர்ப்ப எண்ணெய்

மாதாந்தர காலத்தில் உண்டாகும் வயிற்றுவலியை உடனே நிறுத்தும். சரியாய் பஹிஷ்டையாகும். கெர்ப்பாசயம், சினைப்பை இவற்றிலுள்ள சகல கெடுதல்களும் நீங்கி கெர்ப்பம் உண்டாகும். மிக்க அநுபவமானது. புட்டி 1க்கு ரூ. 2

அந்நிய தேசவாசிகள் மருந்திற்கு ஆர்டர் செய்யும்போது முன் பணம் ரூ. 5 அனுப்பவேண்டும்.

வைத்திய ஆசிரியர் C மலையப்பசாமி, நித்தியானந்த மெடிக்கல் ஹால், பழனி, S. I.

கைவல்யம் அல்லது கலைக்யானம்.

விலை அணா 0—8—0.

இராமாயண ஆராய்ச்சி அயோத்யாகாண்டம்.

விலை அணா 0—8—0.

கிடைக்குமிடம்—குடி அரசு பதிப்பகம், ஈரோடு.

வெளிவந்து விட்டது! வாங்கத்தவறாதீர்கள் !!

முந்துங்கள் !!!

நடைபெறப் போகும் ஆகஸ்டு௴ த்திற்குள் நடக்கும் பொது எலெக்ஷனுக்கு முன் வாங்குங்கள் !

புதிய பஞ்சாயத்துகளுக்கும், தாலூகா போர்டுகளுக்கும், டிஸ்டிரிக்ட்டு போர்டுகளுக்கும், இவைகளின் மெம்பர்களுக்கும், ஆங்கிலமறியாத பொது ஜனங்களுக்கும் வெகு முக்கியமான

சென்னை லோக்கல் போர்டு ஆக்டு.

(1930௵ வரையிலுமுள்ள சீர்திருத்தங்களுடன் கூடியது)

மிகவும் நுல்லியமானதும் எளிதில் புரியும்படியான அழகிய தமிழில்

M, S. பார்த்தசாரதி அய்யங்கார், B. A., B. L.,

(வக்கீல், அகில இந்தியா லா ஜர்னல் பத்திராசிரியர் திருவள்ளூர்) அவர்களால் மொழிபெயர்க்கப்பட்டுள்ளது. சொற்ப காப்பிகளே எம்மிடம் உள்ளன.

விலை ரூபா 2—0—0. வி. பி. செலவு ரூ. 0—6—0

மானேஜர்,

குடி அரசு புத்தகசாலை, ஈரோடு

‘சண்டமாருதம்’

சுயமரியாதைத்தமிழ் தினப்பதிப்பு.

ஆசிரியர்:- சொ. முருகப்பா.

நிறைந்த செய்தி! குறைந்த சந்தா!

ஆணித்தரமான அபிப்பிராயம்! அச்சமற்ற கண்டனம்!

இன்றே சந்தாதாரராகுங்கள்.

சந்தா விபரம்.

உள் நாடு.

வருடம் ஒன்றுக்கு	...	ரூ.	13—8—0
மாதம் ஒன்றுக்கு	...	ரூ.	1—2—0
தனிப்பிரதி ...	...	ரூ.	0—0—6

வெளி நாடு.

வருடம் ஒன்றுக்கு	...	ரூ.	18—0—0
ஆறுமாதம்	...	ரூ.	10—0—0

எல்லா ஊர்களுக்கும் ஏஜண்டுகள் தேவை

மானேஜர்

‘சண்டமாருதம்’

திருச்சிராப்பள்ளி.

குணமில்லாவிடில் பணம் வாப்பீஸ் செய்யப்படும்

சித்தரசம்

சகல வியாதிகளுக்கும் உள்ளுக்கும், வெளியிலும் உபயோகிக்க நிமிஷகணக்கில் குணமாகும்

புட்டி 1-க்கு ரூ. 1—0—0

சி. பி. சாமி, சித்தமருந்து செய்சாலை பழநி S. I.

“சன்மார்க்கன்”

உயரிய தமிழ் மாதப்பத்திரிகை.

ஆண்டுசந்தா.

உள்நாடு ரூ. 1—0—0.

வெளிநாடு ரூ. 1—4—0.

ஆசிரியர் (நாவலூற்று)

சி. சுவாமி சிவநேசம், “சன்மார்க்கன்” பழனி.

சில்க் அங்கவஸ்திரம்.

தூய்யவெள்ளை உடல்திக்கான பட்டு தினசரி துவைத்து உபயோகிக்கலாம். சலவையும் செய்யலாம். வருஷக்கணக்கில் உபயோகிக்கக்கூடியது. சம்பி அல்லது குண்டஞ்சுகரையுள்ளது. 1க்கு ரூ. அ.

2½ வீதி 5 முளம்பட்டு	,,	1-10.
ஷெ டசன்	,,	17-0.
2¼ 5 முளம் பட்டு	,,	1-6.
ஷெ டசன்	,,	15-0.
3 வீதி 8 முளம்வேஷ்டி	,,	3-8.
ஷெ டசன்	,,	40-0.

மானேஜர் S. K. R. வீவிங் பாக்டரி, கோட்டார், திருவிதாங்கூர், தென் இந்தியா.

“குடி அரசு” ஏஜண்டுகள்.

N. S. கந்தசாமி, திராவிடன் ஏஜண்ட் முசிரி.

*ராஜரத்னம், தமிழன் ஆபீஸ், ஆண்டர்சன் பேட்டை.

*காஸ்மாபாலிட்டன் கிளப் விருதுநகர்.

*A. V. பாலசுப்ரமணியம் 23, எடயதெரு, திருவாரூர்.

பி. சாமுவேல் பிள்ளை, ஜெனரல் நியூஸ் ஏஜண்ட் தூத்துக்குடி.

*எஸ். மாசிலாமணி பிள்ளை நியூஸ் ஏஜண்ட், பாலக்கரை திருச்சி.

S. குற்றாலலிங்கம் பிள்ளை நியூஸ் ஏஜண்ட் மீனாட்சிபுரம் திருநெல்வேலி.

S. P. கிருஷ்ணசாமி, நாகப்பட்டணம்.

P. பழனியாண்டி செட்டியார், நாகூர்.

T. சேத்துராயடு சித்திரக்காரத் தெரு, மதுரை.

K. கணபதி, சாக்கோட்டை கும்பகோணம்.

மானேஜர், ‘புதுவைமுரசு’ புதுச்சேரி.

P. R. C. எல்லப்பன், மரக்கடை வியாபாரம், கொசதெரு, காஞ்சீபுரம்.

A. S. முருகேசம், பஜார் திண்டுக்கல்.

*T. சுப்ரமணியபிள்ளை, 3, செங்கல்வராய முதலி தெரு, திருவல்லிக்கேணி, சென்னை.

A. R. M. சுந்திர பாண்டியன் கடை வீதி, அருப்புக்கோட்டை.

G. V. ராமசாமி பெரிய கடைவீதி, கரூர்.

*B. ரங்கசாமி, டைலர் பெரிய கடைவீதி, கோயமுத்தூர்.

ஹாஜி முகமது ஷேக் உசேன், 57. சுண்ணும்புக்காரத்தெரு, காரைக்கால்.

*M. ரத்னம், கிரோசினுயில் டிபோ, நெல்லிக்குப்பம்.

C. S. ஜோசப் 159 கேவல்ரி ரோடு, பெங்ளூர் Cant

S. ராமசாமி செங்குந்தர் தெரு, துறையூர்.

முத்துசாமி நாடார் ஹைஸ்கூல், பொறையார்.

P. S. ஜீவரத்னம் பிள்ளை, 2. மலாய்வீதி, ஸ்லேவ்ஐலண்டு, கொழும்பு.

A. S. பரமசிவம் நியூஸ் ஏஜண்ட், பம்பலபிட்டியா, கொழும்பு.

எட்வர்ட்பால் திருமலாபுரம்

செல்வராய கவுண்டர் திருப்பத்தூர்

*S. அப்பாதுரை மண்டி, ராசிபுரம்.

M. N. M. பாவலர் நியூஸ் ஏஜண்ட், திருப்பாபுலியூர்

A. M. பாலசாமி குமாரசாமி செட்டி வீதி செவ்வாய்ப்பேட்டை, சேலம்.

சிதம்பரம். எம். கலியாணசுந்திர முதலியார் கதர்ஸ்டோர் மேலவீதி

சாத்தான் குளம். பெரியசாமி நாடார் ஷாப் வியாபாரம்.

பட்டுக்கோட்டை. கே. சாரங்கபாணி கொண்டப்பநாயடுபாளையம்

மாயவரம். எம். கலியாணசுந்திர முதலியார் கதர்ஸ்டோர்,

கொழும்பு. S M. மீராமொய்தீன், 80—யார்க்வீதி, போர்ட்.

K. கணபதி பிள்ளை, செட்டித் தெரு, பருத்தித்துறை. கோட்டார்.

S. பூதலிங்கம், காரியதரிசி சுயமரியாதை வாசிப்புசாலை சாத்தூர்.

எம். ஏ. முத்துசாமி பிள்ளை, சுப்பிரமணியசாமி கோயில் வீதி.

* இந்த புள்ளியுள்ள விலாசதார்களிடம் குடி அரசு பதிப்பக புஸ்தகங்களும் கிடைக்கும்.

கல்வியும், மதமும்.

முற்கால போதனமுறை.

(Dr. R. P. பரான்ஜ்பே எழுதிய புத்தகத்தில் காணப்படும் சாரம்)

[சென்ற வாரத்தொடர்ச்சி]

பெண்களும் தாழ்த்தப்பட்டவர்களும்.

பொதுவாகவே எல்லா வகுப்பைச்சேர்ந்த பெண் மக்களும் கீழ் வகுப்பார் என்று தாழ்த்தப்பட்டவர்களும் வெகுகாலமாகவே எழுத்துவாசனை என்பதுகூட கற்பிக்கப்படாமல் மதத்தின் போக்கால் தடுக்கப்பட்டே வந்திருக்கின்றார்கள். ஆகையால் பெண்களும், தாழ்த்தப்பட்ட மக்களும் எந்த விஷயங்களையும் ஆராய உரிமையும் சௌகரியமுமில்லாமலும் தங்களுக்கு மற்றவர்களால் சொல்லப்படும் அபிப்பிராயம் தவிர வேறு விதமான அபிப்பிராயங்களைத் தெரிய முடியாமலும் அவர்களுக்கு எஜமானர்கள் மேற்பட்டவர்கள் என்பவர்கள் சொல்லுவதையெல்லாம் நம்பி தட்டிப்பேசாமல் ஒப்புக்கொள்ள வேண்டியவர்களானார்கள். அவர்களுக்கு விஷயஞானமென்பதும், ஒழுக்கம் என்பதும் புராணக் காலக்ஷேபங்கள் மூலமும் அவர்களது பெரியோர்களால் சொல்லப்படும் இதிகாசக்கதைகள் மூலமுமே தான் ஏற்படவேண்டியிருந்தது.

மற்றும் பக்தி சம்பந்தமான சில புராணப்பாடல்கள் பாடத்தெரிந்து கொள்ளுவதும் மதச்சடங்குகளில் சொல்லப்படவேண்டிய சில வாக்கியங்களைக் கற்றுக்கொள்ளவேண்டியதும் அவர்கள் கடமையென்று கருதினதால் அவற்றை மாத்திரம் தங்களுக்கு மேற்பட்டவர்கள் என்பவர்களிடமிருந்தே கற்றுவந்தார்கள்.

இவைகளைத்தவிர மற்றபடி அவர்களுக்கு அறிவு விசாலப்படும்படியான வேறு எவ்விதமான உரிமையும் போதனாமுறையும் இல்லாமலேபோய்விட்டது.

ஆகவே இவர்கள் தங்களுக்கு அக்கம் பக்கத்திலுள்ளவர்களுடைய அபிப்பிராயங்களின் மூலமே விஷயங்களைத்தெரிந்து கொள்ள வேண்டியவர்களாயிருந்ததால் மூடப்பழக்கவழக்கங்களும், குருட்டுத்தனமான நம்பிக்கைகளும் பக்திகளும் தேசத்தில் வளர்ச்சி பெற இவர்கள் ஆதாரமாயிருந்து வந்ததோடு இவர்கள் பழக்கம், வழக்கம், ஒழுக்கம், சுதந்திரம் முதலியவைகளில் எவ்வித மாறுதலும் அடைய முடியாமல் ஒரே நிலையில் இருத்தப்பட்டு அடக்கி ஆளப்பட வேண்டியவர்களாய் விட்டார்கள்.

பட்டணங்கள்.

பெரிய பெரிய பட்டணங்களில் மக்களின் வாழ்க்கை சற்று பரபரப்பாய் இருந்தாலும், அவர்களுக்கு தற்காலம் இருப்பது போன்ற போதனா முறைகள் அனுஷ்டிக்கப்படவேயில்லை. ஒரு சிலருக்கு மாத்திரம் தொழில் முறையில் தாங்கள் சந்திக்க நேரும் வெளிநாட்டார்களிடமிருந்தும், தாங்கள் பிரயாணம்செய்யும் வெளியூர்க்காரர்களிடமிருந்தும் ஏதோ சில புதிய விஷயங்களை அறிய நேர்ந்தது என்றாலும் பொதுவாக இந்தியாவுக்கு வெளியில் அவ்வப்போது நடைபெறும் மாறுதல்களைப்பற்றியும், புதிய அபிப்பிராயங்களைப்பற்றியும் இந்நாட்டாருக்கு ஒன்றுமே தெரிய முடியாமலிருந்தது. இந்து மதக்கொள்கைப்படி அன்னியதேசயாத்திரைகூட குற்றமானதாக்கப்பட்டு தடுக்கப்பட்டிருந்தது.

ஐரோப்பிய பாஷையை யாருமே கற்றிருக்கவில்லை. இந்தியாவில் முகம்மதிய ராஜ்யம் ஏற்பட்ட பிறகு அரபியன் பாஷையான அரபு பார்ஷியன் (பாரசீகம்) முதலிய பாஷைகளை சில இந்துக்கள் கற்றுக்கொள்ளநேர்ந்தது என்றாலுங்கூட அந்தக்காரணங்களாலும் மேல் நாட்டு அறிவு வளர்ச்சியைப்பற்றின சம்பந்தம் சிறிதும் ஏற்பட முடியவில்லை.

ராணுவக்கல்வி.

அடிக்கடி ஏற்பட்ட யுத்தங்களின் பயனாய் இராணுவப் பயிற்சிக்கு பல சந்தர்ப்பங்கள் ஏற்பட்டிருந்தும் கூட அக்கால இந்தியர்கள் கத்தி, துப்பாக்கி முதலிய யுத்த கருவிகளை தாங்களே செய்யக்கூட கற்றுக்கொள்ளாமல் வெளிநாட்டாரிடமிருந்தே வாங்கி உபயோகித்து வந்தார்கள். சமீப காலம் வரையிலுங்கூட யுத்ததளவாடங்கள் ஐரோப்பியர்களிடமிருந்தே வாங்கிவரப்பட்டன. இம்மாதிரியான அநேக முக்கியகாரியங்களில் இந்தியர்கள் கவலையில்லாமல் இருந்துவந்திருந்ததோடுகூட மதத்தின்பெயரால் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த ஜாதி முதலிய பாகுபாடு வித்தியாசங்களில் மாத்திரம் மிகுந்தகவலையெடுத்து அவைகளை வெகுபத்திரமாய்க்காப்பாற்றிவந்தார்கள்.

நாளடைவில் க்ஷீணதிசை அடைந்து அழிந்து போன இந்திய அரசர்கள் எல்லோருங்கூட இந்த ஒருவிஷயத்தில் மாத்திரம் அதாவது ஜாதி பாகுபாடு வித்தியாசங்கள் ஆகியவைகளை காப்பாற்றி நிலைநிறுத்துவதில் மாத்திரம் அதிக கவனம் செலுத்தியேவந்திருக்கிறார்கள்.

அன்னிய ஆக்ஷி.

பிரிட்டிஷ் ஆட்சி இந்தியாவில் ஆரம்பமாகும் காலம் வரை இந்திய கல்வியாகிய மக்களின் முன்னேற்றம், அறிவு, ஒழுக்கம், சுதந்திரம் ஆகியவற்றின் போதனா முறை இம்மாதிரியான நிலைமையில் தான் இருந்து வந்தது. இதனால்தான்,

இந்தியாவின் நாகரீக வளர்ச்சி, முற்போக்கு என்பவைகள் இந்தியாவுக்கு அன்னிய ஆட்சி ஏற்படுவதற்கு முன்னாலேயே தடைப்பட்டு முற்றுப்பெற்று விட்டது.

முகமதியர்கள் படையெடுப்புகளின் காரணமாகவும் பல மதப்பிரிவுகள் தோன்றினவேயன்றி அனுகூலம் ஏற்பட முடியவில்லை.

பிரிட்டிஷ் ஆதிக்கம் வலுப்பட்டு இங்கிலீஷ் பாஷையை இந்தியர்கள் கற்றுக்கொண்டதின் காரணமாக சிலருக்கு உத்தியோகம், அதிகாரம், பதவி முதலியவைகள் கிடைக்க வழியேற்பட்டதானாலும் அவை இந்துக்களுக்குள் உயர்ந்த ஜாதியார் என்பவர்களே சர்க்காராலும் பாதிரிமார்களாலும் ஏற்படுத்தப்பட்ட பள்ளிக்கூடங்களில் போய் படிக்கவேண்டியவர்களானார்கள். இதன் பயனாய் சிறிதே விஷய ஞானம் பெற முடிந்ததோடு முஸ்லீம்கள் ஆங்கிலம் கற்றுக்கொள்ள கலபத்தில் சம்மதிக்காததால் முஸ்லீம்களின் முன்னேற்றமும் தடைப்பட்டது, மாத்திரமல்லாமல் இந்துக்களுக்கும், முஸ்லீம்களுக்கும் அடிக்கடி சச்சரவேற்பட்டுக்கொண்டும் வருகின்றது.

மேல்நாட்டுக்கல்வி.

சுமார் 100 வருஷங்களுக்கு முன்பே அரசாங்கத்தார் மேல் நாட்டுக் கல்வியை இந்தியாவில் பரப்பும் கொள்கையைக் கைக்கொண்டார்கள். எதற்காக வென்றால், தங்கள் ஆட்சிக்குக் கீழ்த்தர சிப்பந்திகளை தாராளமாக தயாரிக்கவேண்டும் என்கின்றதான எண்ணத்தின் மீதேயாகும். ஆனபோதிலும் மேல் நாட்டாரில் ஒரு சிலருக்கு இங்கிலீஷ் பாஷையின் மூலம் இந்தியாவுக்குள் மேல் நாட்டு நாகரீகத்தை புகுத்தவேண்டும் என்கின்ற ஆசையும் இருந்தது.

கிறிஸ்துவப்பாதிரிமார்கள் இந்தியாவில் ஆங்கிலக்கல்வியை பரப்பப்பாடுபட்டதின் காரணமெல்லாம் கிறிஸ்துவ மதத்தை அக்கல்வியின் மூலமே இந்தியர்களுக்குள் புகுத்திவிடலாமென்கின்ற நோக்கமேயாகும். ஆரம்பத்தில் தான் இந்த நோக்கம் ஓரளவு சித்தி பெற்றது. பிறகு அது பயன்படவில்லை. தற்காலம் இந்தியாவிலுள்ள கிறிஸ்துவர்கள் தொகை 60 லக்ஷத்திற்குள்ளாகவே இருப்பது இதற்கு ஒரு உதாரணமாகும். இந்த அறுபது லக்ஷம் கிறிஸ்துவர்களும் ஆங்கிலப் படிப்பின் காரணமாகவே கிறிஸ்துவர்களானார்கள் என்று சொல்லிவிட முடியாது. அநேகம் பேர்கள் தங்களைத்தாழ்த்தப்பட்டவர்களாகப் பிறர் கருதுவதாலும், பஞ்ச காலங்களில் வயிற்றுக்கொடுமை காரணமாகவும், சுயநலக்காரணமாகவுமே மதம்மாறி கிறிஸ்துவர்களானார்கள்.

மதநடு நிலைமை.

அரசாங்கப்பள்ளிக்கூடங்களில்எல்லாம் மதநடுநிலைமை முறை கையாளப்பட்டு வந்ததென்றே சொல்லலாம். இதற்குக்காரணம் என்னவெனில் ஒரு அன்னிய அரசாங்கத்தார் உள்நாட்டு மதப்பூசல்களில் தலையிட்டால் தங்களது நிலைமை கஷ்டமானதாகிவிடும் என்பதை உத்தேசித்தே நடுநிலைமையை காட்டிக்கொள்ளவேண்டியவர்களானார்கள். ஆனால் பாதிரிகளால் நடத்தப்படும் பள்ளிக்கூடங்களில் எல்லாம் கிறிஸ்துவமத போதனை என்பது கட்டாயமாக பாவிக்கப்பட்டு நடத்தப்பட்டே வந்திருக்கிறது.

அதில் படிக்கும் இந்து, முஸ்லீம், பார்சி முதலிய மதப்பிள்ளைகளுக்கும் கிறிஸ்துவ வேதமாகிய பைபிள் ஒரு பாடமாக கற்பிக்கப்பட்டே வந்திருக்கின்றது. இதன் பயனாக இந்து மதத்தினிடம் பிள்ளைகளுக்கு பற்று குறைந்துபோயிருந்தாலுங்கூட கிறிஸ்துவமதத்தில் அதிகமான பற்று ஏற்பட்டுவிடவில்லை. கல்வி அபிவிருத்தியாகி அதன் அவசியம் தெரிய வந்தபிறகு இந்தியர்களேபள்ளிக்கூடங்களும், கலாசாலைகளும் ஏற்படுத்த முன்வந்து விட்டதால் பாதிரிமார்களின் பள்ளிக்கூடங்களுக்கு உள்ள செல்வாக்கும், ஆதிக்கமும் குறைந்து போய்விட்டது. இந்தியர்களால் தனித்தும் சர்க்காரிடம் உதவி பெற்றும் ஏற்படுத்தப்பட்ட பள்ளிக்கூடங்களும் கலாசாலைகளுந்தான் இப்போது அதிகமாகிக்கொண்டுவருகின்றன.

இரண்டாவதாக சர்க்காராலும், ஸ்தலஸ்தாபனங்கள் முதலிய பொது ஸ்தாபனங்களாலும் ஏற்படுத்தப்படுகின்ற பள்ளிக்கூடங்களும் அதிகரித்துவருகின்றன. சமீப காலம் வரையிலும் தனிப்பட்ட நபர்களால் ஏற்படுத்தப்படும் பள்ளிக்கூடங்களில் மதபோதனைகள் முக்கியமாகக்கருதப்பட்டிருக்கவில்லை மத்தியதரப்படிப்பு, மேல்தரப்படிப்பு ஆகியவைகளின் வளர்ச்சி அதிகரிக்க, அதிகரிக்க பிள்ளைகளுக்கு தேசிய வளர்ச்சி சம்பந்தமாகவும், அரசியல் ஆக்ஷி சம்பந்தமாகவும் ஆசாபாசங்களும், உணர்ச்சிகளும் கிளம்ப ஹேதுக்கள் உண்டாயின. மற்றும் அதுபோலவே மதசம்பந்தமான நம்பிக்கைகளிலும் மூடப்பழக்கவழக்க நடவடிக்கைகளிலும் கண்மூடித்தனமாய் பின்பற்றும் குணம் சிறிதுசிறிதாகக் குறைந்து எதையும் ஆராய்ச்சிசெய்து விவகரித்து உண்மையை அறிய ஆவல் உண்டாக்கி வருகின்றது. இதை அறிந்தபழமையில் நம்பிக்கையுள்ளவர்களிடமிருந்து ஆங்கிலக்கல்வியானது தெய்வ நம்பிக்கை அற்ற கல்வி என்பதாக ஆவலாதிகள் கிளம்ப ஆரம்பித்தன. ஏனெனில் பழைய மூடப்பழக்க வழக்க குருட்டு நம்பிக்கை ஆகியவைகள் எல்லாம் சன்மார்க்க நீதி முறையாகக் கருதப்பட்டு அவைகள் பள்ளிக்கூடப் பாடங்களோடு பிணைக்கப்பட்டிருந்ததால் அது நீங்கியதான ஆங்கிலக்கல்வியை குற்றஞ்சொல்லவேண்டியதாய் ஆகிவிட்டதோடு அவ்வைதீகர்கள், வாலிபர்களு

[தொடர்ச்சி 18ம் பக்கம் பார்க்க]

சீவகாருண்யச்சமயம் மகளிர் உரிமையை மறுக்குமா?

(தோழர் அ. இராகவன்)

இவ்வுலக ஆக்கத்திற்கே ஓர் நிலைக்களனாய் விளங்கும் பெண்மக்களுக்கு உரிமைவழங்கவேண்டுமா? வேண்டாமா? என்னும்ஓர் பெரும்ஆராய்ச்சி நமது இந்திய நாட்டிலே இது போழ்து பெரிதும் நடைபெற்று வருகின்றது. இதைக்கண்டு, "ஆணின் ஒருபாதியாகிய, பெண்ணிற்கு அவர் தம் நியாயமான உரிமைகளை வழங்க இத்துணை ஆராய்ச்சியா? பெண்ணின் உரிமையை மறுக்கும் இந்தியருக்கு ஆங்கிலேயர் எப்படி உரிமை வழங்க இசைவர்" என்று பிறநாட்டறிஞர் பலர் எள்ளி நகையாடுகின்றனர். யாண்டு பெண்டிர், உரிமை குன்றி அடிமை வாழ்க்கையில் அழுந்திக் கொண்டிருக்கின்றார்களோ ஆண்டு தான் சமுதாயம் முழுவதும் குன்றி வருகின்றதென்பது அறிஞர்கள் கண்ட அனுபவம். இருபாலரும் உரிமையெய்தி சமத்வமாய் ஒத்து வாழும் சமூகந்தான் உயர்வடையும். இந்நிலவுலகிலே பெண்சாதியின் உரிமையை விலங்குகளும்கூட மறுக்காதிருக்கும்பொழுது ஆறறிவுடையதென்றுகூறும் மனிதர்கள் மகளிர் உரிமைக்குக்கேடுசூழ்ந்து வருவது எத்துணைகொடுமையாகும். இது பற்றியே அறிஞர் ஒருவர்

'பெண்ணுரிமைக்குக்கேடு எவ்வுலகில்விளைந்திருக்கிறது? அஃறிணையுலகிலா? ஆறறிவுடையமக்கள் உலகிலா? வெட்கம்! வெட்கம்! புல் செடி கொடிகளில் ஆணினம் தன் பெண்ணினத்தின் உரிமைதகைந்திருக்கிறதா? ஆண்பறவை பெண்பறவையின் உரிமை கெடுத்திருக்கிறதா? எவ்விலங்கு காதல் தனது பெண்ணினத்தின் உரிமை உடைத்திருக்கிறதா? அஃறிணை உலகில் பெண்ணுரிமைக்குப் பழுது நிகழ்ந்ததில்லை. பாழான ஆறறிவுடைய உயர்திணை யுலகிலே அவ்வுரிமைக்குப்பழுது நேர்ந்திருக்கிறது'

என்று கூறியுள்ளார். உலகிலுள்ள ஒவ்வொரு நாடும் பெண்களுக்கு உரிமை நல்கியபின்னரே சுதந்தரமெய்திச்சுகவாழ்வு பெற்றதென்பது சரித்திரவாயிலாய் நாம் காணும் உண்மை. அஃதிவ்வாறிருந்தும் இந்தியநாட்டின் விடுதலைக்கென்று உழைக்கும் ஒருபெரும் தேசியமஹாசபை பெண்ணுரிமையை ஒருசிறிதும் பேணாது இந்திய நாட்டின் சுதந்தரத்தை எளிதில்பெற்றுவிடலாமென்று எண்ணுவது எத்துணை குறுகிய நோக்கமானது என்றறிக

அத்தேசிய மஹாசபையில் பெண்ணிற்கு உரிமை நல்கக்கூடிய ஒரு திட்டமும் இல்லாமையானும் பெண்ணுரிமையை வேரறுக்கும் தலைவர்களின் ஆட்சியின் கீழ் அம் மகாசபை அகப்பட்டுக்கொண்டிருத்தலானும் அம்மகாசபை இந்தியநாட்டிற்கு விடுதலையைக்கொண்டு வரமுடியாதென றும, அஃது ஒரு சமயம் விடுதலையைக்கொண்டு வந்தாலும் அது உண்மையான விடுதலையாகாதென்றும் அறிந்தே ஆங்காங்கு பெண்ணுரிமைபேணும் பல பல இயக்கங்கள் தோன்றின. அத்திபூத்தாற்போன்று ஆங்காங்கே ஆடவர்களின் எதிர்ப்பை ஒரு சிறிதும் பொருட்படுத்தாது கல்விகற்ற ஒரு சில பெண்மணிகள் தங்கள் ஜாதியின் உரிமைக்குப்பாடுபட ஆரம்பித்தார்கள். ஆனால் கடவுள், வேதம், சமயம், சமயத்தலைவர் முதலியனபலவும் பெண்கள் உரிமைக்கு எதிரிடையாகயிருக்கவே அவைகளையெல்லாம் அன்னோர் மறுக்கவோ, எதிர்க்கவோ அழிக்கவோ, ஆற்றலற்று அவ்வியக்கங்களெல்லாம் மாய்ந்தொழிந்தன. சீர்திருத்த விருப்பங்கொண்டு முன் வந்த செல்வியர் பலரும் செல்வாக்கிழந்தனர். இதன் பிறகுதான் தன்னந்தனியராய் தனிகர் ஈரோட்டு இராமன் தன் மதிப்பியக்கம் எனும் தனிப்பேரியக்கங் கண்டார். அது பெண்ணுரிமையாகிய மறுமணம், காதல் மணம், சொத்துரிமை, விவாஹரத்து, பாலிய விவாஹ மறுப்பு முதலிய விழுமிய கொள்கைகளை தம் நோக்கமாகக்கொண்டுழைக்க ஆரம்பித்ததோடு தம் கொள்கைகளுக்கு எதிரிடையாக இருக்கும் கடவுள், வேதம், சமயம், சமயஆச்சாரிகள் முதலிய பலவற்றையும் எதிர்த்து அவைகளையெல்லாம் நிர்மூலப்படுத்துவதும் தம் கொள்கைகளென்று சொல்லவே அறிஞர்பலர் தாராளமாய் வந்து ஆதரிக்கவும எளிதில் நாடெங்கும் பரவவும் ஆரம்பித்து நாட்டில் அதன் செல்வாக்கு உயரவே ஒவ்வொரு சமயத்தலைவரும் "எனது சமயந்தான் பெண்ணுக்கு பெரிதும் உரிமை நல்கிய சமயம" "எனதுமதந்தான் பெண்ணின் உரிமையை வழங்கும் மதம்" என்று கூப்பாடுபோட ஆரம்பித்தார்கள். ஆனால் ஸ்மார்த்த சமயத்தலைவர்களோ பகிரங்கமாய் தம் சமயம பெண்ணுரிமைக்கு எதிரிடையிருக்கின்றது என்று கூற ஆரம்பித்துவிட்டார்கள். உண்மையில் அஃதோர் சீவகாருண்யமதமுமன்று அதனால் தன்மதிப்பியக்கத்தால் அம்மதம அதிசீக்கிரம் அழிக்கப்பட வேண்டியது அவசியமே. ஆனால் உலகிலுள்ள பல்வேறுமதங்களிலும் 'சீவகாருண்ய நெறியை திறம்படபேணும் சமயம் சைவமே' என்று கூறப்படும் செந்தமிழ் நாட்டின் தென் கோடியிலுள்ள ஒரு சில மக்களால் அனுஷ்டிக்கப்படும் சைவ சமயத்தை ஆராய்ந்தாலோ

'எவ்வுயிரும் பராபரன்
சந்நிதியதாகும்
இலங்கு முயிர் உடலனைத்தும்
ஈசன் கோவில்'

என்று கூறப்படுகிறது. எனவே எல்லாஉயிரினிடத்திலும் ஈசன் வீற்றிருப்பதால் எல்லா உயிர்ப்பிராணியையும் ஈசனென எண்ணி (தன்னுயிர் போல் எண்ணி) வாழல் சைவர்களின் கடப்பாடாயிருக்கிறது. இசசெய்யுளைப்பார்த்து நாம் மகிழ்வதோடு சைவர்கள் தங்களால் போற்றப்படும் கடவுளை ஒரு பெண்ணாகக்கண்டு வணங்குவதும் மகிழத்தக்கதே. எடுத்துக்காட்டாக,

"காணும் பல பல தெய்வங்கள்
வெவ்வேறு
பூணும்பலபல பொன்போலத்
தோன்றிடும்
பேணும் சிவனும் பிரமனும்
மாயனும்
காணும் தலைவி நற்காரணிகாணே'
(திருமந்திரம்)

என்ற செய்யுளும் 'சத்தியாய்ச்சிவமாகி' என்ற செய்யுளும் இன்னும் பலவும் ஆதாரமாகக்காட்டப்படுவதோடு செல்வத்தைக்கொடுக்கும் கடவுள் 'லக்ஷ்மி' என்று கூறும் தெய்வம் பெண்ணாகவும் கல்வியைக்கொடுக்கும் கடவுள 'சரஸ்வதி' என்னும் தெய்வம் பெண்ணாகவும் இன்றளவை சைவர்களால் போற்றப்படுவதாகவும் இன்னோரன்ன பல உதாரணங்களை எடுத்துக்காட்டலாம், பெண்ணுரிமையைப் பெரிதும் எதிர்ப்போற்றும் சைவப்புலவர் உயர்திரு கலியாணசுந்தர முதலியாரவர்களும்

'பெண்மை என்பது அமைதித்தன்மை என்றுமேலே சொல்லப்பட்டது. அமைதிநிலை இறைமை என்பது. அவ்விறைமையுடைய தாயை வெறும் பெண்ணென்று கூறுவது? கூடாது. அவளைப்பெண்தெய்வமென்று போற்றுதல்வேண்டும். பெண் தெய்வம், பெண் தெய்வம், பெண்தெய்வம்'

'முழுமுதற்பொருள் தண்மைசெம்மையெனும் இரண்டு சக்திகளாக உலகை இயக்குகிறது என்று நூல் தொடக்கத்தில் குறிக்கப்பட்டிருக்கிறது. அத்தன்மையின் கூறு பெண் உலகு பெண்பிறந்து, உலகவளர்ச்சிக்குத் துணைபுரிந்து மீண்டும் அத்தன்மைத தெய்வமாகிறாள்'.

'பெண் மகளாகத்தோன்றினாள் மனைவியாக வாழ்ந்தாள், தாயாகததொண்டுசெய்தாள், இப்பொழுது தெய்வமாகக்காட்சியளிக்கிறாள். உலகீர்! அக்காட்சி காணுங்கள். தெய்வம் தெய்வமென்று எங்கு ஓடுகிறீர்? நூற்களை ஏன் ஆராய்கிறீர்? இதோ தெய்வம், பெண் தெய்வம், காணுங்கள் கண்டு வழிபடுங்கள், பெண்மை என்பு தோல்போர்த்த உடலன்று. அவ்வுடலுள்ளேயுள்ள நுண்மை, இறைமை, பெண்மை என்க. அத்தகைய பெண்மைவாழ்க'

என்று கூறியுள்ளார். பெண்ணைத் தெய்வமாகக்கொண்டு தொழுவம் சைவர் பெண்ணிற்கு எத்தகைய உரிமையைக் கொடுத்துள்ளார்கள்? தெய்வத்தை கல்லாக (விக்ரஹமாக) வைத்துத்தொழும் சைவர் பெண்களையும் அவ்வுணர்ச்சியற்ற கல்லாக (தெய்வமாக) எண்ணி பெண்டிர் துணைவனையிழந்தால் உணர்ச்சியற்ற கற்தெய்வம்போல் நடத்திவருவதும், அக்கல் தெய்வம்போல் எண்ணி பெண்ணிற்கு கல்வி கற்றுக்கொடுக்காமலும், பசித்தால் சாப்பிடவழியற்றும், தம்மிஷ்டம்போல் விரும்பிய இடத்திற்குச் செல்லவிடாது வீட்டிற்குள் பூட்டிவைத்திருப்பதும் பெண்களை மிக இழிவாய் நடத்திவருவதும் பெண்களைக்கல்லாக (தெய்வமாக) திரு. வி. கல்யாணமுதலியாரவர்கள் கூறியபடி போற்றிவருகிறார்களென்பது மெய்யே. இதைத்தவிர பெண்ணிடம் சைவர்கள் எத்தகைய சீவகாருண்யமும் காட்டவில்லை என்பது நாமறிந்த உண்மையாகும். ஏட்டிலும் பாட்டிலும் 'பெண்டிர்க்கு சைவம் உரிமை கொடுத்திருக்கிறது' என்று செய்யுளின் பொருளை புரட்டிப்பண்டிதர்கள் கூறலாமேயொழிய சைவர்கள் பெண்களிடத்தில் சீவகாருண்யம் காட்டவில்லையென்பது மட்டுமல்ல. பெண்களிடத்தில் சீவகாருண்யம் காட்டி அவர் தம் உரிமைக்காக பாடுபடும் அறவோர்களையெல்லாம் நிந்தித்து அவர்களால் ஆற்றப்படும் சீவகாருண்யத்தொண்டிற்குத் தங்களாலியன்ற இடையூறியற்றி வருவதோடு விதவாவிவாஹம், கலப்பு மணம் முதலியனபுரியும் வாலிபர்களைச்சமூகபகிஷ்காரம் செய்யவும் அவர்களுக்குத் தங்களாலியன்ற இன்னல்கள் பலபுரிந்துவருவதும் அனுபவத்தில் நாடோறும நாமகண்டுவரும் மறுக்கமுடியா உண்மையாகும்.

சைவத்தின் பெருமையை இடைவிடாது புகழ்ந்துவரும் சைவர்கள் வீட்டிலே பெண்கள் விலங்கினும் கடையராய் இன்றளவும் மதிக்கப்பட்டுவருகின்றார்களென்றால் அது ஒரு சிறிதும் மிகையாகா. ஒவ்வொரு சைவன் வீட்டிலும பெண்மணிகள் கணவன் சாப்பிட்ட எச்சி இலையிலேதான் சாப்பிடவேண்டும் என்பது கட்டாயவிதி. இவ்விதி பெண்கள் திருமணஞ் செய்யப்பட்ட நாளிலிருந்து அவளிறக்கும் பரியந்தம செய்ய வேண்டிய முக்கிய கடமைகளிலொன்று. இதுவே கற்புடைய பெண்டிரின் 'லட்சணமாகும்'. கணவன் எச்சிலையில் மனைவி சாப்பிடுவதே அவள் கற்பிற்கும், அவள் அனுபவிக்கப்போகும் மோக்ஷத்திற்கும விததாக

ரோஜா முத்தையா ஆராய்ச்சி நூலக அறக்கட்டளை

இருப்பதினால்தான் எச்சிலிலை சோற்றிற்காக புருடன் வந்து சாப்பிடும் வரை மனைவி காத்திருக்கவேண்டும். புருடன் பல அசந்தர்ப்பங்களால் சாப்பிடவேண்டிய நேரத்திற்கு 3, 4 மணி கழித்துவந்தாலும் பெண் பசியால் எத்துணை சோர்வுற்றாலும் புருடன் வரும் நேரத்தை எதிர்பார்த்து காத்துக்கொண்டிருக்க வேண்டியதே, அந்தோ! சைவர்கள் வீட்டில் பெண்டிரிடம் எத்துணை சீவகாருண்யம் காட்டப்படுகிறது. வெட்கம், வெட்கம் இச்சீவகாருண்யமற்றகொடுஞ்செயலையொழிக்க எந்தச்சைவத்தலைவராவது முயன்றனரா? எந்தச் சைவப்பத்திரிகையாவது கிளர்ச்சி புரிந்ததா? இல்லை, இல்லை. இன்னும் பல சைவர்கள் வீட்டில் புருடன் அயலூருக்குச் சென்றிருந்தால் அவன் சென்றிருக்கும் திசைக்கு நேராகக் கால் நீட்டி படுத்தலும் கூடா. அவன் ஊரிலில்லாத சமயம் நல்ல சேலையும், பூவுமணிந்து திலதமும் இடக்கூடாதாம். இக்கட்டுப்பாடுகள் பட்டினங்களில் வசிக்கும் சைவர்கள் வீட்டில் குறைந்திருந்தாலும் கிராமங்களில் (சைவர்கள் வீட்டில்) இன்றளவும் நடந்தே வருகிறது. இன்னும் கணவன் பெயர், மாமன், சின்னமாமன், பெரியமாமன், மாமி, சின்னமாமி, பெரியமாமி, மைத்துனன், கொழுந்தன் முதலியோர்களின் பெயர்களைக்கூடக் கூறக்கூடாதென்பதோடு அவர்கள் பெயரின் முதலெழுத்து வரும் எந்தவார்த்தையும் கூறல்கூடாது. உதாரணமாக எமது பாட்டியாரின் கணவன் பெயர் கணபதியா பிள்ளை, அதினால் எனது பாட்டியார் கண், கல், கனவு, கம்பு முதலிய எந்தவார்த்தைகளையும் கூறார். கந்தசாமி என்று கூறவேண்டுமானால் திருச்செந்தூர் சாமி பெயரைச் சொல்லு என்பார். சண்முகமா? என்றால் இல்லையென்பார் பின் வேலாயுதமா? என்றால் அதுவும் இல்லையென்பார். அதன் பிறகு சிறிது யோசித்து இராமசாமி பிள்ளையின் மூத்தமகன் பெயரைச் சொல் என்பார். கந்தசாமி என்று சொல்லிவிட்டால் அவ்வம்மையார் தான் பி. ஏ. பரீக்ஷையில் தேறிவிட்டது போன்று மகிழ்ந்து ஆமாம் அப்பெயர்தான் என்பார். சைவர்கள் இத்தகைய மூடக்கட்டுப்பாடுகளுக்குள்ளே தம் வீட்டுப் பெண்களை வைத்துக்கொண்டு எமது சமயந்தான் பெண்டிற்குப்பேதிய உரிமை நல்கியிருக்கிறது என்று கூப்பாடு போடுவதில் யாது பயன்.

பெண்கல்வி:— பெண் உரிமைக்காக ஆண்மக்கள் அதிகமாய் உழைக்கவும், அதற்காகப் போராடவும், மேனாடுகளில் நாம் அதிகமாய்க் காண முடியா. பெண்களே தம் உரிமைக்காக தைரியமாய் முன்வந்து போராடுகின்றார்கள். காரணம், அவர்கள் கல்வி கற்றவர்களாயிருப்பதே. நமது நாட்டிலே சைவத்திருநெறியைச் சேர்ந்த கொடியர்கள் முதலாவது பெண் கல்வியின் வாயில் மண்ணையள்ளிப் போட்டு மகளிரைவிலங்காக்கி-என்-பிள்ளைபெறும் யந்திரமாக்கி தங்கள் வழிபிலாட்டி கணவன் மொழியே வேதவாக்கென்று கடைப்பிடித்தொழுகும்படி செய்துவிட்டனர். கல்விக்குத் தெய்வமாகிய 'சரஸ்வதி'' யம்மாவின் சாதியார்களாகிய பெண்டிர்கள் இன்று நிரக்ஷர குட்சிகளாய், மூடர்களாய் வாழ்ந்து வருகின்றார்கள். இன்று சீர்திருத்தவாதிகளின் இடைவிடா உழைப்பின் பயனாய்ப் பெண் கல்விக்கு எதிரிடையாக வாதிப்போர் தொகை குறுகி விட்டதென்றாலும் சைவர்கள் தம் பெண் மக்களுக்கு நன்றாய்க் கல்வி கற்பிக்க முயற்சிக்கின்றார்கள் என்று கூறமுடியாது. சைவர்கள் பெண் கல்வியில் சிறந்தை கொண்டிருந்தால், பழுத்தசைவர்கள் மிகுந்த, சைவக்கோட்டை யென்று கூறப்படும் திருநெல்வேலி ஜில்லாவில் பெண்களுக்கென்று ஒரு ஹைஸ்கூலாவது இல்லாதிருக்குமா? சிறு ஜனத்தொகையையுடைய கிறிஸ்துவர்களுக்கென்று எத்தனை காலேஜ், எத்தனை ஹைஸ்கூல்கள், எத்தனை ஹையர் எலிமெண்டரி ஸ்கூல்கள், ஏழைக்கிறிஸ்துவர்கள் மிகுந்த இத்திருநெல்வேலி ஜில்லாவிலே எத்தனை பி. ஏ. பட்டம் பெற்ற பெண்கள், எத்தனை ஸ்கூல் பைனல் படித்த பெண்கள், நூற்றுக்கணக்காய்-ஏன்-ஆயிரக்கணக்காயிருக்கின்றார்கள். இச்ஜில்லாவில் சைவப்பெண்களில் எத்தனைபேர் பி. ஏ. பட்டம் பெற்றிருக்கின்றார்கள் என்று வினவில் சைபர் (0) என்றுதான் கூறவேண்டும். சில நண்பர் குலசேகரன் பட்டினத்தைச் சேர்ந்த அறிஞர் சி. டி. நாயகம் அவர்கள் தம் மகளை பி. ஏ. பட்டதாரியாக்கியிருக்கின்றார்கள் என்று கூறலாம். அப்பெரியாரும் அவர் தம் துணைவியாரும் சைவ மனப்பான்மையை யுடையவர்களாயிருந்தால் ஒரு பொழுதும் தம் புதல்விக்கு இத்தகைய உயர்தரக் கல்வியை யூட்டியிருக்கமாட்டார்கள். அவர்கள் உண்மையான சுயமரியாதை வீரர்களின் மனப்பான்மையுடையவர்களாயிருந்ததினால்தான் தம் புதல்வி உயர்தரக்கல்வி பெறச் செய்தனர். இப்பொழுது அதுபோல் ஏனைய பெண்களும் கல்விபெற உழைத்து வருகின்றார்கள். அவ்வழியில் அரும்பாடுபட்டுவரும் ஸ்ரீமதி சி. டி நாயகம் அவர்களுக்குப் பெண்களுலகம், என்றும் நன்றிபாராட்டக் கடமைப்பட்டுள்ளது. அஃதல்லாமல் திருநெல்வேலி ஜில்லாவிலே ஸ்கூல் பைனல் பாஸ் பண்ணிய பெண்மணிகள் இரண்டு மூன்று பெயராவது இருப்பார்களா? என்பது, சந்தேகம். ஆங்கிலக்கல்வியல்லாமல் தமிழிலாவது கூறத்தக்கற்ற பெண்கள் உரிமைக்காக சொற்பொழிவுகளாற்றத்தக்க சில பெண்மணிகளும் கூட இரார்கள் என்பதே எனது திடமான அபிப்பிராயம். இந்த நிலையில் சைவர்களிருந்து கொண்டு தங்கள் சமயம் பெண் கல்விக்கு ஆதரவு கொடுக்கிறதென்றே சைவர்கள் பரந்த நோக்கமும் சீவகாருண்யக்கொள்கையுமுடையவர்கள் என்றே கூறல் வீண் பிதற்றலேயாம். மக்களினத்தை விலங்கினமாக்கும். ஒரு கூட்டத்தார் எங்ஙனம் சீவகாருண்ய முடையவர்களாவார். வள்ளுவர், சைவர்களின் திருமறை யென்றுக கூறும் திருக்குறளில்

'விலங்கொடுமக்களனைய
ரிலங்குநூல்கற்றாரோடேனையவர்'

என்று கூறுவதை அறிந்தாவது விலங்குத் தன்மையை யுடைய கல்லாத பெண்ணுலகை கல்வி மயமாக்க முயற்சிப்பாராக. அஃதன்றி பத்திரிகைகளிலும், புத்தகங்களிலும் 'சைவம் எத்துணை உரிமை நல்கியிருக்கிறது. ஒளவையைப்பார், காரைக்காலம் மையைப்பார' என்ற வாய்வேதாந்தம் பேசி நாட்டை ஏமாற்றுங்காலம் மலையேறிப்போய்விட்டதென்று அறிந்து பெண் கல்விக்கு உழைப்பார்களாக. சைவர்கள் பேசிலும், எழுத்திலும் வல்லவர்கள்தான், செய்கையில் ஆன்ஞோர் சைபர்(0)என்று உலகம் பரிகசிக்கும். இழிந்த பட்டத்தை மாற்ற ஆங்காங்கு முயற்சிப்பார்களாக.

சைவச்சோதரர்களே! நீங்கள் மதனிற்கு எந்த உரிமையும் கொடுக்கவேண்டாம் ஆங்காங்கே பெண்கள் "ஹைஸ்கூல்கள்" ஏற்படுத்தி கல்வியைப் பரபபிவிடுவீர்களாயின் நீங்கள் பெண்களுக்குரிய எல்லா உரிமைகளையும் நல்கிய அறவோர்களாவீர்கள். ஓர் ஆண்டிற்கு பெண் சாமிகளுக்கு கொடுக்கும் காணிக்கை, நகை, அபிஷேகச்செலவுகள், பட்டாடை, திருக்கலியாணச்செலவுகளனைத்தையும் நிறுத்திவிட்டு அதில் மிச்சப்படும் பணத்தைப் பெண் கல்விக்குச்செலவழிப்பீர்களாயின் உங்கள் வீடுகளிலெல்லாம் "சரஸ்வதி என்னும் தெய்வதை" காணலாம, அதில்லாமல் எத்தனை ஆண்டுகள் பூஜித்தாலும் நீங்கள் சரஸ்வதியைக் காணமாட்டீர்கள். சரஸ்வதி யென்னும் தெய்வதிற்கு 'சுயமரியாதை கிடையாதா? உண்டு அதினால்தான் நீங்கள் எத்துணை அன்புடன பூஜித்தாலும் தனது ஜாதியாராகிய பெண்களின் கல்வி உரிமைக்கு பகைமையுற்றும் ஆண்களின் கண்களின் முன் தோன்றாமலிருக்கின்றாள் என்று கூறுவது மிகையாகாது. (தொடரும்)

கும்பகோணத்தில் இரு சுயமரியாதைத் திருமணங்கள்.

கும்பகோணம் அழகப்ப முதலியார் தெரு தோழர் தி. சா. கோவிந்தசாமி அவர்கள் இல்லத்தில் 16-9-31 தேதி புதன்கிழமையன்று திருச்சி திரு. கே. சாமியா புதல்வர் திருச்செல்வர் டி. எஸ. நடேசம் அவர்கட்கும் கூத்தூர் திரு. டி. எஸ். குமாரசாமி புதல்வி திருச்செல்வி சாரதாம்பாள் அவர்கட்கும், தஞ்சை திரு. கிருஷ்ணசாமி புதல்வர் திருச்செல்வன் டி. கே. கண்ணையா அவர்கட்கும் கூத்தூர் திரு. சோமசுந்திரம் புதல்வி திருச்செல்வி திருபுரசுந்தரி அவர்கட்கும் எவ்வித புரோகித கலப்புமின்றி அர்த்தமற்ற சடங்குமின்றி சுயமரியாதை இயக்க முறைப்படி திருமணம் நடைபெற்றது. திருமண வைபவத்திற்கு திருச்சி, ஈரோடு, தஞ்சை, மாயூரம், சுவாமிமலை, சாக்கோட்டை, நாச்சியார் கோவில், பட்டுக்கோட்டை முதலிய வெளியிடங்களிலிருந்தும் பல அன்பர்கள் வந்திருந்தனர். உள்ளூர் பிரபலஸ்தர்களும் சுயமரியாதை வாலிப சங்கத்தார்களும் மணமக்கள் உறவினருமாக ஆண்களும் பெண்களும் நூற்றுக்கணக்காகவந்திருந்தார்கள். திருமண அழைப்பில் குறிப்பிட்ட காலத்தில் மணமக்கள் தங்கள் ஒப்பந்தத்தை சபை முன் படித்து மலர் மாலை சூடி மாங்கல்யம் பூட்டிக்கொண்டார்கள். தோழர் கா. கு. நீலமேகம் அவர்கள் எழுந்து, இத்திருமண நிகழ்ச்சியிலேற்பட்ட மாறுதலைப்பற்றியும், மாறுதலடைய வேண்டிய அவசியத்தைப்பற்றியும், திருமணம் என்ற பெயரால் நாம் புரோகிதர்கட்கும் அர்த்தமற்ற பழக்க வழக்க சடங்குகட்கும் எத்தனை காலமாக அடிமைபடுத்தப்பட்டு அவமானப்படுத்தப்பட்டு வந்திருக்கிறோமென்பதைப்பற்றியும், திருமண சுதந்திரம் மணமக்கட்கு வழங்கவேண்டிய அவசியத்தைப்பற்றியும் மிகவிளக்கமாகப்பேசியமர்ந்தார். பின் தோழர்களான அ. பொன்னம்பலம் அவர்களையும் கே. வி. அழகர்சாமி அவர்களையும் "சீர்திருத்தத்திருமணம்" "மதமும் மக்களும்" என்பதுபற்றி பேசும்படி தோழர் கா. கு. நீலமேகம் அவர்கள் கேட்டுக்கொண்டார். அதன்படி தோழர்கள் அ. பொன்னம்பலம், கே. வி. அழகர்சாமி ஆகிய இருவரும் மூன்று மணி நேரம் மிக விளக்கமாகவும் விரிவாகவும் பேசி மணமக்களைப் பாராட்டினர். மணமக்களாலும் தோழர் நீலமேகம் அவர்களாலும் வந்தனோபசாரம் கூறி சந்தனதாம்பூலம் பழவகை வழங்கினார்கள். பின் யாவருக்கும் சமபந்தி விருந்து ஒன்று நடைபெற்றது. மாலை 5 மணிக்கு தோழர் கே. வி. அழகர்சாமி, அ பொன்னம்பலம் ஆகியவர்கள் ஈரோட்டிற்கு ரயிலில் பயணமானார்கள்.

தற்கால, ரஷியாவின் கல்வி முறை.

திருமதி காமாட்சியம்மாள் M. A. L. T., ஈ. வெ. இராமசாமி சொற்பொழிவு.

எஸ். இராமநாதன் M.A.B.L. தலைவர்.

ஈரோடு மஹாஜன ஹைஸ்கூலில் ஸ்டூடென்ஸ் லிட்டரரி அசோசியேஷன் என்னும் மாணவர் இலக்கிய சங்க வருஷ ஆரம்பநாள்விழா 17-9-31 தேதி மாலை திரு எஸ். இராமநாதன் எம். ஏ. பி. எல். அவர்கள் தலைமையில் கொண்டாடப்பட்டது. அது சமயம் ஈரோடு கவர்ன்மெண்ட் பெண்கள் போதனாமுறை தலைமை உபாத்தியாயினி திருமதி காமாக்ஷி அம்மாள் எம். ஏ. எல். டி. அவர்கள் ஆங்கிலத்திலும், திரு ஈ. வெ. இராமசாமி தமிழிலும் உபன்யாசம் செய்தார்கள்.

திருமதி காமாக்ஷியம்மாள் ரஷியாவின் கல்விமுறை என்பதுபற்றி பேசியதாவது.

ரஷியா தேசத்தில் 1917ம் வருஷத்தில் நடைபெற்ற பயங்கர புரட்சியின் காரணமாக பழைய கல்வி முறைகள் அழிக்கப்பட்டு நவீன முறைகள் கையாளப்பட்டன. உலக முழுவதும் புதிது, புதிதாய் கண்டு பிடிக்கப்பட்டுவரும் முறைகள் அனைத்தையும் பரிசீலனை செய்து அவைகள் தீவிரமாய் கையாளப்பட்டன. புரட்சிக்குமுன் ஏற்படுத்தப்பட்டிருந்த பள்ளிக்கூடங்களில் அக்காலத்தில் ஏதேச்சாதிகாரம் செலுத்திவந்த ஜார்மன்னருக்கு கீழ்படிந்து நடக்கவும் அக்காலத்து பரவியிருந்த கிரேக்க சர்ச் மதத்தின் பாதிரிமார்களுக்கு அடங்கியிருக்கவும் பயன்படத்தக்க வழியில் கல்வி கற்றுக்கொடுக்கப்பட்டன. புரட்சியின் பயனாக இவ்வித பழையகாலத்து அடிமைப்படிப்பு ஒருங்கே கைவிடப்பட்டது. புதிதாய் ஏற்படுத்தப்பட்ட பள்ளிக்கூடங்களில் குழந்தைகள் மூன்று வயது முதல் பதினாறு வயது வரையில் விடாமல் படித்துவர ஏற்பாடுகள் செய்யப்பட்டன. ஒவ்வொரு பிள்ளையும் அதனுடைய மனநிலைமைக்குத்தகுந்த படிப்பு பெறுவதற்கு உரிமை உண்டு என்று கருதப்படுகிறது. ரஷியா தேசத்திலுள்ள பள்ளிக்கூடங்களில் ஆண், பெண் பாலர்கள் வித்தியாசமில்லாமல் சேர்ந்தாற்போல் கல்வி போதிக்கப்பட்டு வருகிறார்கள். பட்டமோ, அல்லது யோக்கியதா பத்திரமோ சன்னதோ பெறும் நோக்கத்துடன் அக்கல்வி போதிக்கப்படவில்லை. ஆனால் காரியத்தில் ஒரு தொழில் முறையை பின்பற்ற ஒவ்வொருவரையும் தயாரிக்கவேண்டும் என்னும் நோக்கத்துடனேயே கல்வி போதிக்கப்படுகிறது. தொழிலாளியாயிருப்பதின் கௌரவத்தையும், தொழிலாளிகள் ஒருவருக்கொருவர் கூட்டுறவு பாராட்டவேண்டியதின் அவசியத்தையும் நன்கு வலியுறுத்தப்படுகிறது. பள்ளிக்கூடங்களின் மூலம் யந்திரசாலைகளுக்கு தேர்ச்சி பெற்ற தொழிலாளிகளையும், கிராமங்களுக்கு நவீன விவசாய முறைகளைக் கற்ற குடியானவர்களையும் கவர்ன்மெண்டு ஆபீசுகளுக்கு நிர்வாகத் தகுதியுள்ள உத்தியோகஸ்தர்களையும் பயிற்சி செய்து அனுப்பப்படுகிறது. பிள்ளைகளுக்கு வயது வந்தவுடன் சமதர்ம கொள்கைகளையும், சமதர்ம ஆட்சிமுறைகளையும், கற்றுக்கொடுத்து அவர்களது பிற்காலத்தில் அறிவுடனும், அன்புடனும், தைரியத்துடனும், பொது வாழ்க்கையில் கலந்துகொள்ளுமாறு செய்யப்படுகிறது. ரஷிய கல்வி முறையில் கவனிக்கப்படவேண்டிய முக்கிய அம்சம் என்னவென்றால் அந்ததேசத்தில் எந்தப்பள்ளிக்கூடத்திலும், பிள்ளைகளை அடிப்பது என்பதோ, அல்லது வேறு மாதிரியில் தண்டிப்பது என்பதோ கிடையவே கிடையாது. பிள்ளைகளுக்கு பள்ளிக்கூட நிர்வாகத்தில் சுயராஜியம் வழங்கியிருக்கிறார்கள். உபாத்தியாயர் கொஞ்சம் கடுமைபடுத்தினால் பிள்ளைகள் கூட்டம்கூடி அந்த உபாத்தியாயரை நீக்கிவிடவேண்டுமென்று தீர்மானிப்பதும் அந்தத்தீர்மானப்படி அந்த உபாத்தியாயர் நீக்கப்படுவதும் உண்டு. பிள்ளைகள் குற்றம் செய்தால் அவர்கள் விசாரணை செய்து அவர்கள் குற்றம் செய்வதற்கு காரணமாயிருந்த மனோபாவனையை திருத்துவதற்காக அதற்கென ஏற்படுத்தப்பட்டிருக்கும் பள்ளிக்கூடங்களுக்கு அனுப்பப்படுவார்கள்.

ரஷியா தேசத்தில் போதிக்கப்படும் கல்வியை மூன்றுபிரிவாக வகுக்கலாம்;- 1 பொதுக்கல்வி, 2 தொழிற்கல்வி, 3 ராஜியக்கல்வி.

பொதுக்கல்வி.

பொதுக்கல்வியென்பது மூன்று வயது முதல் 16 வயதுவரையுள்ள ஆண், பெண் இருபாலருக்கும் போதிக்கப்படுகிறது இதில் முதல் பாகம் 4 வருஷத்திற்கு பள்ளிக்கூடங்களுக்குப் போகாமலும், புஸ்தகங்கள் இல்லாமலும், விளையாட்டு மூலமாகவும், பழக்கங்கள் கற்றுக்கொடுக்கும் மூலமாகவும் கல்வி போதிக்கப்படுகிறது. பிறகு ஒன்பது வருஷத்திற்கு பள்ளிக்கூடங்களில் கல்வி கற்பிக்கப்படுகிறது. இந்த ஒன்பது வருஷங்களில் முதல் நான்கு வருஷங்களுக்கு எழுதப்படிக்க கணக்குப் போடவும் சைன்ஸ் ஆரம்பக்கல்வியும் கற்பிக்கப்படுகின்றன. அடுத்த ஐந்து வருஷத்திற்கு ஒவ்வொருபிள்ளையும் தேகத்தினால் பாடுபட்டு உழைக்கவும், சமூக வாழ்வில் ஈடுபடவும் இயற்கையின் தத்துவங்களை கண்டு உணரவும் போதிக்கப்படுகிறது. பாஷை, இலக்கியம், சரித்திரம், பூகோளம், பொருளாதாரம் முதலியவையும் கற்பிக்கப் படுகின்றன. இதற்குப் பிறகு தான் தொழிற்கல்வி ஆரம்பிக்கப்படுகிறது. தொழிலில் ஈடுபடுவதற்கு முன் ஒவ்வொருவரும் 14 வருஷம் பொதுக்கல்விகற்கவேண்டுமென்பது ரஷிய போதனா முறையின் நோக்கம்.

தொழிற்கல்வி.

தொழிற்கல்வியானது எல்லாவித தொழிலுக்கும் பயிற்சி செய்விக்கப்படும் நோக்கத்துடன் கற்பிக்கப்படுகிறது. சர்வ கலாசாலைகளும், தொழிற்கல்வி ஸ்தாபனங்களிலேயே சேர்க்கப்பட்டிருக்கின்றன. இவற்றில் கீழ்தர வகுப்புப் பள்ளிக்கூடங்களில் சாதாரண தொழிலாளிகளுக்கு வேண்டிய விஷயங்கள் மாத்திரம் கற்பிக்கப்படுகின்றன. இரண்டாவது வகுப்புப் பள்ளிக்கூடங்களில் உயர்தர தொழிலுக்கு வேண்டிய பயிற்சிகள் செய்விக்கப்படுகின்றன. மூன்றாவதாக சர்வகலாசாலைகளில் கணித சாஸ்திரிகள், வானசாஸ்திரிகள், விஞ்ஞான ஆராய்ச்சியாளர்கள், இஞ்ஜினீர்கள், வைத்தியர்கள், உபாத்தியாயர்கள், சரித்திர ஆராய்ச்சிக்காரர்கள் முதலியவர்கள் உற்பத்திசெய்யப்படுகிறார்கள். சர்வ கலாசாலைகளுக்கு மேல்வகுப்பாக சில ஆராய்ச்சிசாலைகள் ஏற்படுத்தப்பட்டிருக்கின்றன. அவற்றின் மூலம் தொழில் அபிவிருத்திக்கு ஏற்ற ஆராய்ச்சிகள் நடைபெற்று நவீன முறைகள் கண்டுபிடிக்கப்பட்டு அனுபவத்துக்குக் கொண்டுவரப்படுகின்றன. இவற்றைத் தவிர அன்னிய நாட்டாருடன் அறிவு ஆராய்ச்சி விஷயமான சம்பந்தம் ஏற்படுத்திக்கொள்வதற்குச் சில ஸ்தாபனங்கள் ஏற்படுத்தப்பட்டிருக்கின்றன. அவற்றின் மூலம் அயல்நாட்டாருடன் புஸ்தகங்கள் மாற்றிக்கொள்ளவும், அன்னியநாட்டிலிருந்து ருஷியாவுக்கு விஜயம்செய்யும் ஆராய்ச்சியாளருடன் நெருங்கிப் பழகவும், வசதிகள் அளிக்கப்படுகின்றன. இவற்றிற்குத் தலைமை ஸ்தானம் மாஸ்கோ நகரிலிருக்கிறது.

ராஜீயக்கல்வி.

இது அரசாங்க அமைப்பைப்பற்றி போதிக்கும் கல்வியல்ல. ராஜீயக்கல்விக்கு அர்த்தம் ராஜீய ஸ்தாபனங்களின் மூலம் எழுத்துவாசனை தெரியாமல் அறியாமையில் மூழ்கிக் கிடக்கும் கோடிக் கணக்கான வயது வந்த பொதுஜனங்களுக்குக் கல்வி போதிப்பதாகும். அப்படிப்பட்ட கல்வி ஸ்தாபனங்கள் நான்கு வகைப்படும். முதலாவது காக்ஷிசாலைகள். ரஷ்யாவிலுள்ள காக்ஷிசாலைகளெல்லாம் கல்வி இலாகாவைச் சேர்ந்தவை. கிராமங்களிலிருந்து காக்ஷிசாலைக்கு வேடிக்கை பார்க்கவரும் படிப்பில்லாத பொதுஜனங்களுக்கு அறிவு புகட்டுமாறு காக்ஷிசாலைகளிலுள்ள அற்புதங்களை ஒழுங்குபடுத்திவைத்து அவற்றை விவரித்துச் சொல்லுவதற்காக உத்தியோகஸ்தர்கள் நியமிக்கப்பட்டிருக்கிறார்கள். இரண்டாவதாக சினிமா படக்காக்ஷிகளெல்லாம் கல்வி இலாகா மூலமாகவே ஜனங்களினிடையே கல்வி பெருகுமாறு அமைக்கப்பட்டுள்ளன. மூன்றாவதாக கம்பியில்லாத் தந்தியின் மூலம் அறிவு பரப்பப்பட்டுவருகின்றது. நான்காவது புஸ்தகசாலைகள். புஸ்தகசாலைகளில் இருபதினாயிரம் தனித்த இடங்களிலிருந்தும் ஐம்பதினாயிரம் இடம்விட்டு இடம்மாறிக்கொண்டேயும் வருகின்றன புஸ்தகசாலைகளை பொதுஜனங்கள் தீவிரமாக உபயோகப்படுத்தும்பொருட்டு அதிகாரிகள் முயற்சி செய்துவருகிறார்கள். இவைகளைத் தவிர நூதன போதனா முறைகளைப் பரீட்சித்துப் பார்ப்பதற்கென சிலப் பள்ளிக்கூடங்கள் நிருவப்பட்டிருக்கின்றன. அந்நிய தேசங்களில் நூதனமாகக் கண்டுபிடிக்கப்படும் முறைகளை அப்படியே கண்மூடித்தனமாக ஒப்புக்கொள்ளாமல் இந்தப் பள்ளிக்கூடங்கள் மூலமாக அனுபோகத்தில் பரிசீலனை செய்யப்பட்டு வெற்றி கிடைத்த பிறகே மற்ற பள்ளிக்கூடங்களில் அனுஷ்டிக்கப்படுகின்றன. இம்மாதிரி பரீட்சைக்கென நாற்பது பள்ளிக்கூடங்கள் ஏற்பட்டிருக்கின்றன. பாடங்களில் திருத்தம், போதிக்கும் முறையில் மாற்றம், புத்தகங்கள், தொழில்கல்வி, மாணவர்களின் தேக சௌக்கியப்பாதுகாப்பு முறை முதலியவற்றில் சீர்திருத்தம் இவைகளையெல்லாம் இந்தப் பள்ளிக்கூடங்களிலேயே பரீட்சித்துப் பார்க்கப்படுகின்றன. கல்வி முறையைப்பற்றிய சகல விஷயங்களையும் ஒழுங்குபடுத்துவதற்கென்று ஒரு மத்திய ஆராய்ச்சிசாலை 1923-ல் ஏற்படுத்தப்பட்டிருக்கிறது.

நிர்வாகம்,

சோவியட் ராஜ்யத்தில் 6-சோவியட் குடியரசுகளும், 9-சுயேச்சைக் குடியரசுகளும் அடங்கியிருக்கின்றன. மத்திய அரசாங்கத்தில் கல்வி இலாக்காவே கிடையாது. ஆகையால் ஒவ்வொரு குடி அரசும் கல்வி விஷயத்தில் பூரண சுயேச்சையுடனிருக்கிறது. மத்திய கவர்ன்மென்

ரோஜா முத்தையா
ஆராய்ச்சி நூலக அறக்கட்டளை

டார் தேசத்திலுள்ள கல்வி இலாகா அதிகாரிகளை கூட்டி ஒவ்வொருவருஷமும் மூன்று மகாநாடுகள் நடத்துகிறார்கள். இந்த மகாநாடுகளில் ஒருவருக்கொருவர் தங்களுடைய அநுபவங்களை ஒத்திட்டுப்பார்த்து கல்வி முறைகளைத் திருத்திக்கொள்ள வசதிகள் ஏற்படுகின்றன. ஒவ்வொரு குடி அரசிலும் கல்விக்கென ஒரு பிரதிநிதி நியமிக்கப்பட்டிருக்கிறார். அவருக்கு உதவியாக 9 அங்கத்தினர்களடங்கிய ஒரு நிர்வாக சபையும நியமிக்கப்பட்டிருக்கிறது. இவர்கள் நேரில் ஆராய்ச்சிசாலைகள், புஸ்தகசாலைகள், காட்சிசாலைகள், நாடகக்கொட்டகைகள், சினிமா சங்கீதக்கொட்டகைகள் புஸ்தக விளம்பரங்கள் முதலிய விஷயங்களை நேரே கவனித்து வருகிறார்கள். இவர்களுக்குக் கீழ் 8 இலாக்காக்கள் வேலை செய்கின்றன. ஒவ்வொரு இலாகாவிற்கும் ஒரு தலைவரும, ஒரு நிர்வாகசபையும் அவரவர்களுக்கு தனித்தனி வேலையும நியமிக்கப்பட்டிருக்கின்றன. ஒவ்வொரு மாகாணத்திற்கும ஒரு டைரக்டரும, ஒவ்வொரு ஜில்லாவிற்கும் ஒரு தலைவரும் நியமிக்கப்படுகிறார்கள். தாலூகா கிராமங்களுக்கு மத்திய நிர்வாக சபையார் மூலம இன்ஸ்பெக்டர்கள் அனுப்பப்படுகிறார்கள். முக்கிய உத்தியோகஸ்தர்களெல்லாம் நிர்வாகசபையாராலேயே நியமிக்கப்படுகிறார்கள். நிர்வாக சபையார் பொதுஜனப் பிரதிநிதிகளால் நியமிக்கப்படுகிறார்கள்.

உபாத்தியாயர்கள்.

ருஷ்யாவிலுள்ள உபாத்தியாயர்களெல்லாம் கட்டுப்பாட்டுடன் வேலை செய்கிறார்கள். அவர்களுக்குப்பொதுவாக ஒரு யூனியன் ஏற்பட்டிருக்கிறது. அதில் 7 லட்சம் அங்கத்தினர்கள் தற்சமயம் சேர்ந்திருக்கிறார்கள். ஒவ்வொரு அங்கத்தினரும் தன்னுடைய சம்பளத்தில் நூற்றுக்கு 2 வீதம் சந்தா செலுத்த வேண்டும். கல்வியைச் சேர்ந்த எல்லா முக்கிய விஷயங்களிலும் இந்த யூனியன் அபிப்பிராயத்தை கலந்து கொண்ட பிறகே மத்திய நிர்வாக சபையார் முடிவு செய்கிறார்கள். கல்வி விஷயத்தில் ஏற்படும திட்டங்களும், சட்டங்களும் மத்திய நிர்வாக சபையாரால் முதலில் தயாரிக்கப்பட்டு பிறகு உபாத்தியாயர் யூனியனின் அபிப்பிராயத்திற்கும், சம்மதத்திற்கும் அனுப்பப்படுகின்றன. இம்மாதிரி கவர்ன்மெண்டாருக்கும் உபாத்தியாயருக்கும் ஏற்பட்டிருக்கும ஒத்துழைப்பின் மூலம் கல்வி நிர்வாகத்தில் சமரசமும் ஊக்கமும் பெருகி வருகின்றன. உபாத்தியாயர்களின் நன்மையையே கவர்ன்மெண்டார் பிரதானமாகக்கருதியிருப்பதாக உபாத்தியாயர்களின் மனதில் நம்பிக்கை ஏற்பட்டிருக்கிறது. ஆனால் தேசம் தற்காலமிருக்கும் நெருக்கடியான நிலைமையில் உபாத்தியாயர்களுக்குப் போதிய உதவிசெய்ய கவர்ன்மெண்டாரிடம் பணம் இல்லையென்பதை உபாத்தியாயர்கள் உணர்ந்திருக்கிறார்கள். துருக்கிஸ்தானத்திலிருந்து சைபேரியாவுக்கு கவர்ன்மெண்டார் ரயில் பாதை ஏற்படுத்திக்கொண்டிருக்கிறார்கள். இந்த ரயில் பாதை தேச முன்னேற்றத்திற்குமுக்கிய அவசியம். ஆகையால் தற்சமயம் பணத்தட்டு ஏற்பட்டிருக்கிறதென்று உபாத்தியாயர்கள் உணருகிறார்கள். தாங்கள் அதிகசம்பளம்பெறவிரும்பிய போதிலும் இப்பொழுதிருக்கும பண முடையில் அது சாத்ய மில்லையென்றும் கவர்ன்மெண்ட் தங்களுக்குச் சொந்தமாயிருப்பதால் பிறகு சாத்யமாகும் பொழுது தங்கள் குறையை பூர்த்தி செய்வார்களென்றும் உபாத்தியாயர்கள் நம்புகிறார்கள். தேசமுன்னேற்றத்திற்காக தாங்கள் தற்சமயம் தியாகம் செய்வதாகவும் அதன் மூலம் தாங்கள் ஒவ்வொரு வருஷமும் முன்னேறிப்போவதாகவும் ருஷியதேசத்து உபாத்தியாயர்கள் உறுதியாக நம்பியிருப்பதால் அவர்களுடைய வாழ்க்கையில் சந்தோஷமும, ஊக்கமும பெருகி வருகிறது. ஒவ்வொரு வருஷமும அந்தந்த வருஷத்து பண நிலைமையைப் பொருத்து உபாத்திமார் சம்பளங்கள் நிச்சயிக்கப்படுகின்றன.

கிராமப் பள்ளிக்கூடங்களில் உபாத்தியாயர்களுக்கு இலவசமாக குடியிருக்க வீடும, அவர் குடும்பத்திற்கு இலவசமாக வைத்திய சிகிச்சையும் மருந்தும் கொடுக்கப்படுகின்றன. உபாத்தியாயர் வேலை நியமனத்தைப்பற்றியும், வேலையிருந்து நீக்குவதைப்பற்றியும் அந்தந்த இடத்திலுள்ள உபாத்தியாயர் யூனியனும், கல்வி இலாகா நிர்வாக சபையும, சேர்ந்து தீர்மானிக்கின்றன.

கல்வி அபிவிர்த்தியின் மூலம் தனது தேசிய வளர்ச்சியை பெருக்கிக் கொள்ள முடியுமென்று ருஷ்யா தேசமானது மற்ற தேசங்களைவிட நிச்சயமாக உணர்ந்திருக்கிறது. ஆகையால் பள்ளிக்கூடங்களை புண்ணிய ஸ்தலங்களாகவும், உபாத்திமைத் தொழில் செய்பவர்களை புண்ணிய சீலர்களாகவும ருஷ்யா தேசம் கருதுகிறது. ருஷ்யா தேசத்து கல்வியின் நோக்கம். அத்தேசத்து மக்கள் ஒவ்வொருவரையும் தேசிய வாழ்வில் உபயோகமுள்ள மாதிரியில் ஈடுபடுத்துவதாகும. ஆகையால், உபாத்தியாயர்களின் வேலை மிகவும் முக்கியமானதாகக் கருதப்படுகிறது. கல்வியறிவின்மையை நீக்க தீவிரமான பிரயத்தனம் செய்யப்படுகின்றது. இம்முயற்சியில் சென்ற பத்து வருஷங்களில் உலக சரித்திரத்தில என்றும் ஏற்படாத வெற்றி ருஷ்ய தேசத்தாருக்குக் கிடைத்திருக்கிறது. இவ்வளவு பூரண வெற்றி கிடைப்பதற்கு ருஷ்யா தேசம் மகத்தான தியாகம் செய்திருப்பதுதான் காரணம்.

இந்தச் சிறு உரைகள்தான் ருஷ்யாவின் தற்கால கல்வி முறை என்கின்ற தலையின்கீழ் நான் பல ஆதாரங்களிலிருந்து அறிந்தபடி தெரிவித்தேன் என்று சொல்லி முடித்தார்.

பிறகு திரு. ஈ. வெ. இராமசாமியவர்களைப் பேசும்படி கேட்டுக்கொண்டதற்கிணங்க அவர் பேசியதாவது:—

திரு. ஈ. வெ. இராமசாமி.

அறிவில் சிறந்த தலைவர் அவர்களே! சகோதரர்களே!! சகோதரிகளே!!!

இங்கு இன்று இந்தக் கூட்டமானது இந்தப் பள்ளிக்கூடத்துப் பிள்ளைகளின் அறிவுப் பெருக்கத்திற்காக ஏற்படுத்தப்பட்டிருக்கும் ஸ்டூடன்ஸ் லிட்டரரி அசோசியேஷனின் இவ்வருஷ ஆரம்பக் கொண்டாட்டத்திற்காக கூட்டப்பட்டதாகும். இதில் தலைமை வகிக்கும் கனவான் திரு. எஸ். ராமநாதன் எம். ஏ. பி. எல். அவர்கள் கல்வி அறிவில் தேர்ச்சிபெற்ற ஒரு பெரிய பண்டிதராவார். இப்போது இங்கு எனக்கு முன் முதலாவதாக உபன்யாசஞ்செய்த உபன்யாசகர் திருமதி சி. பி காமாக்ஷியம்மாள் எம். ஏ. எல். டி. அவர்களும் கல்வியறிவில் தேர்ச்சிபெற்ற ஒரு பண்டிதையாவார்கள். இங்கு கூடியிருக்கும் கனவான்களும் அனேகமாக கல்வியில் தேர்ச்சிபெற்ற பெரிய பெரிய பி. ஏ. க்களும் எம். ஏ. க்களும் எல். டி. களுமாயிருக்கின்றார்கள். இந்தச் சமயத்தில் இங்கு செய்யப்படவேண்டிய உபந்யாசமும் கண்டிப்பாகக் கல்வியைப்பற்றியதாகவே இருக்க வேண்டியது பெரிதும் பொருத்தமானதாகும்.

ஆகவே இப்படிப்பட்ட சமயத்தில் இங்கு உபன்யாசம் செய்ய அழைக்கப்பட்டிருக்கும் நானோ, இப்படிப்பட்ட கல்வி இல்லாதவனும், ஆங்கிலத்தில் ஏதுமே கற்காதவனுமாய் இருக்கின்றேன். ஆதலால் நீங்கள் என்னிடமிருந்து முந்திய உபன்யாசகர்கள் உபன்யாசித்தது போன்ற அருமையான விஷயங்கள் எதையும் எதிர்பார்க்க முடியாது என்பதை முதலில் தெரிவித்துக் கொள்ளுகிறேன். நான் கல்வி என்பதைப்பற்றி ஏதாவது பேசுவதென்றால் பள்ளிக்கூடத்தின் மூலமோ, புஸ்தகத்தின் மூலமோ கற்ற கல்வி என்பதைப் பற்றி ஏதுமே பேசமுடியாது. ஆனால் ஏதோ எனது பிரத்தியட்ச அனுபவத்தின்மூலம் கேள்விமூலம் கல்வி என்னும் விஷயமாய் நானகொண்ட ஏதாவது சில அபிப்பிராயங்களைப் பற்றித்தான் சிறிது பேசமுடியும். ஆனால் அவை அனேகமாகப் பள்ளிக்கூடக் கல்விக்கும் புஸ்தகக் கல்விக்கும் மாறுபட்ட அபிப்பிராயமாக இருந்தாலும் இருக்கலாம். ஆதலால் நீங்கள் நான் சொல்வதை ஆதாரமாய்க்கொள்ளாமல் ஒரு தனி மனிதனின் கேள்வி அனுபவ அபிப்பிராயம் என்கின்ற முறையில் கவனித்து அதை அலசிப்பார்த்து ஒப்புக் கொள்ளத்தக்க விஷயம் ஏதாவது இருக்கின்றதா என்று கவனித்து அவற்றுள் உங்களுக்கு பிடித்தது ஏதாவது இருந்தால் எடுத்துக்கொண்டு மற்றதைகுப்பையில் தள்ளிவிடுங்கள். அந்த உணர்ச்சியோடு தான் மற்றும் எந்த விஷயத்தையும் கவனிக்கவேண்டுமென்பது முறையானாலும் சிறப்பாக நான் சொல்லும் விஷயத்தை நடுநிலையில் இருந்து நன்றாய் யோசித்துப் பார்த்தபிறகே அதை மதியுங்கள் என்று தெரிவித்துக் கொள்ளுகிறேன்.

கல்வி

முற்கால கல்வி

சகோதரர்களே! கல்வி விஷயத்தில் இந்த சகாப்தத்தில் இருக்கும் மக்கள் மிகவும் மேன்மை பெற்றவர்களே ஆவார்கள். ஏனெனில் முந்திய சகாப்தத்திற்கும் பிந்திய சகாப்தத்திற்கும் கல்வி கற்பிப்பதில் எவ்வளவோ வித்தியாசங்கள் உண்டு. முதலாவது நம் சகாப்தத்திற்கு முந்திய காலத்தில் இன்ன இன்னார் தான் கல்வி கற்க்க உரிமையுடையவர்கள் என்கின்ற நிபந்தனை இருந்தது. இன்ன இன்ன விஷயந்தான் கற்பிக்கப்படலாம் என்கின்ற நிபந்தனையும் இருந்தது. இதோடுமாத்திரமல்லாமல் இன்ன இன்னார்தான் கல்விகற்பிக்கப்பட உரிமையுடையவர்கள் என்கின்ற நிபந்தனையும், இன்ன இன்னவர்களுக்கு எழுத்துவாசனையே கற்பிக்கப்படக்கூடாது என்கின்றதான நிர்ப்பந்தமும் இருந்துவந்தது. இந்த மாதிரியான நியமங்களினாலும், நிர்ப்பந்தங்களினாலும் கல்வி என்பது 'மூடுமந்திரம்' போன்று ஒருரகசியப் பொருளாகவே இருந்து வந்தது. இந்தக்காரணங்களால் முற்காலங்களில ஆயிரத்தில் ஒருவர் இருவரே கல்வி கற்றவர்கள் என்று சொல்லும் படியான மாதிரியில் இருந்துவந்ததோடு கல்விகற்றவர்கள் என்பவர்களே எல்லா மக்கள்மீதும் எல்லாக் காரியத்திலும் ஆதிக்கம் செலுத்துபவர்களாய் இருந்துவந்தார்கள். அன்றியும் மேல் சொல்லப்பட்ட இந்த நிபந்தனைகளும், ஆதிக்கங்களும், எல்லாம்மக்களபிரிவில் ஒருதனிபிரிவார் மாத்திரம்அதுவும் பிறவிகாரணமாய் உரிமைகொண்டாடத்தக்கதாய் இருந்து வந்ததே அல்லாமல் மற்றபடி பொதுத்தகுதியைக் கொண்டதாகவோ, எல்லோருக்குமே சமஉரிமையைக் கொண்டதாகவோ, சிறிதும் இருந்துவரவில்லை

சாதாரணமாய் நமது இந்தியாவை முழுதும் எடுத்துக்கொண்டு பழைய கல்விபோதனாமுறைஎன்பதைஒருமுறையாக வைத்துப்பார்ப்போமானால் இந்தியாவில் உள்ள 35 கோடி மக்களில் $17\frac{1}{2}$ கோடி மக்களான பெண்களுக்கு எந்தக்காரணத்தைக்கொண்டும கல்விகற்பிக்க முடியாததாகும். மற்றொருபிரிவில் 7 கோடி ஜனசமூகம் ஆகிய தாழ்த்தப்பட்டமக்கள் என்பவர்கள் விஷயத்திலும் படிப்பு என்பது நினைப்பதற்கே முடியாதகாரியமாய் இருக்கும். மற்றும் பார்ப்பனர்கள், அரசர்கள், வியாபாரிகள் என்கின்ற வெகு சிறிய கூட்டத்தார்கள் மாத்திரம் கல்வி கற்க உரியவர்களா

வார்கள். அவர்களிலும் கல்வி கற்பிப்பதில் பிரிவுக்குப்பிரிவு வித்தியாசமிருக்கும்.

இன்றைய கல்வி.

ஆனால் இன்றைய கல்வி போதனை விஷயத்தில் இவ்வித வித்தியாசங்கள் ஏதும் இல்லாமல் யாருக்கும் யாவரும் கல்வி கற்பிக்கப்படலாம் என்கின்றதொரு நியமம் இருந்துவருகின்றது. ஆகையினால் நான் முந்திய சகாப்தங்களைவிட பிந்திய சகாப்தம் கல்வி விஷயத்தில் பாராட்டக்கூடியது என்று சொன்னேன். ஆனபோதிலும் கல்வியின் இன்றைய லட்சியமும் கற்பிக்கும் போதனாமுறையும் பாராட்டக்கூடியது என்பதாகச் சொல்லிவிடமுடியாது.

ஏனெனில் கல்வி என்பது ஒருமனிதனுக்கு கற்பிக்கப்படவேண்டிய அவசியமெல்லாம் ஒருவன் தனது வாழ்நாளில் சுதந்திரத்தோடு வாழ்வதற்கு தகுதிப்படுத்துவது என்பதேயாகும். அல்லது உலகில் நல்வாழ்க்கை வாழத்தகுதியுடையவனாக்குவது என்பதாகும்.

அதாவது ஒவ்வொரு காரியத்திற்கும் மற்றவர்களை எதிர்பார்த்தோ, மற்றவர்கள் ஆதிக்கத்தில் இருந்தோ அல்லது தனக்கு மற்றவர்கள் வழிகாட்டவேண்டியதிலேயோ மனிதன் இல்லாமல் சுதந்திரத்தோடு சுயஞானத்தோடு வாழத்தகுதியுடையவனாக வேண்டும் என்பதேயாகும். அன்றியும் கல்விகற்பிக்கும் கடமையில் இருக்கும் ஒவ்வொருவரும் கல்வியின் அவசியத்திற்கு இந்தக்காரணங்களைத்தான் சொல்லுகின்றார்கள். கற்பிக்கப்படுபவர்களும் இந்த எண்ணத்தின் மீதுதான் தாங்கள் கற்பதாக கருதிக்கொண்டிருக்கிறார்கள். ஆனால் கல்வியின் பயன் இந்த லக்ஷியத்திற்கு அனுகூலமாயிருக்கின்றதா என்பதை சற்றுயோசித்துப்பாருங்கள்.

பொதுவாக எந்ததேசத்திலுமே மக்களுக்குக் கல்விகற்பிக்கும்பொறுப்பில்இருப்பவர்கள் எல்லோரும் கல்வி போதிக்கும்விஷயத்தில்ஒருவிதமான உள்கருத்தை வைத்துதான் அதை கல்வியின் மூலம் போதிக்கும் முயற்சியில் இருந்து வருகின்றார்கள். அந்த மாதிரியான உள் கருத்தை போதிப்பதில் கல்வியானது மக்களுக்கு அறிவுக்கும் வாழ்க்கையில் சுதந்திரமாய் வாழ்வதற்கும் பயன்படுகின்றது என்கின்ற கொள்கையை விட தாங்கள் கொண்ட உள் எண்ணத்தையேமிகமுக்கியமாய் கருதுகின்றார்கள். உதாரணமாக ஒரு தேசத்தார் தேசபக்திக்கு ஏற்ற கல்வி இருக்கவேண்டும் என்று கருதுகிறார்கள். மற்றொரு தேசத்தார் மத பக்திக்கு ஏற்றதான கல்வி வேண்டுமென்று கருதுகிறார்கள். மற்றொருவர் வீரம் ஏற்படவேண்டுமென்று கருதுகிறார்கள். இன்னொருவர், அந்த நாட்டு பழமையான பழக்க வழக்கம் ஏதோ ஏற்படுவதற்குத் தகுந்ததாயிருக்கவேண்டுமென்று கருதுகின்றார்கள். மற்றும் சிலர் கடவுள் பக்தி புகட்டுவதற்கு அனுகூலமாய் பார்க்கின்றார்கள். இப்படியாகவே பல உட்கருத்துக்களை பிரமாதமாய் கருதி கல்வி முறை ஏற்படுத்துவதில் கல்வியின் உண்மையான பிரயோஜனம் ஏற்படாமலே மறைந்துபோய்விடுகின்றது.

கல்வியும் மதமும்.

இந்தக் காரணங்களால் கல்வி கற்றவர்கள் எல்லாம் அறிவாளிகளாய் இருக்கமுடியாமல் எந்த உள் காரணத்தை வைத்து கற்பிக்கப்பட்டார்களோ அதற்கு மாத்திரமே பயன்படுகின்றவர்களாக ஆகிவிடுகின்றார்கள். கல்வி கற்பிப்பதில் இக்குறைபாடுகள் தவிர மற்றொரு பலமான கெடுதி என்னவென்றால், கல்வி கற்பிப்பதில் மதத்தின் ஆதிக்கம் வந்து புகுந்து அறிவுக்காக கல்வி என்பது மாறி முட்டாள் தனமும், விசாரணை அற்ற தன்மையும் வருவதற்கே கல்வி பயன்படும்படியாக ஆகிவிடுகின்றது. இது இன்று உலகத்தில் இரண்டொரு தேசம் தவிர மற்ற தேசங்களிலெல்லாமே நடந்துவரும் சம்பவமாகும்.

இதற்கு காரணமென்னவென்றால், கல்வியின் பொறுப்பு எல்லாம் மதங்களினுடையவும், மத ஸ்தாபனங்களினுடையவும் ஆதிக்கத்தில் சிக்கி மத போதகர்கள், மத குருக்கள் மதத் தலைவர்கள் ஆகியவர்களால் நடத்தப்பட்டு வருகின்றவைகளாய் இருப்பதே காரணமாகும்.

மதத்திற்கும், உலக இயற்கைக்கும் எப்போதுமே சம்பந்தம் இருப்பதில்லை. ஏனெனில் அனேகமாய் எல்லா மதங்களுமே உலக இயற்கையின் மீது ஆதிக்கம் செலுத்தி அதை வழிமறித்து கண்மூடித்தனமான செயற்கையில் திருப்புவதையே ஜீவநாடியாய் கொண்டிருக்கின்றது. அதனால் மதம் கலந்தபடியால் இயற்கை அறிவுக்கும் ஆராய்ச்சிக்கும் இடமில்லாமலே போய்விடுகின்றது. எப்படி எனில் மதங்கள் என்பவைகள் எல்லாம், ஆயிரக்கணக்கான வருஷங்களுக்கு முன் இருந்தே காணப்படுவைகள் ஆகும்.

ஆகவே, மத சம்பந்தமான கொள்கைகள் அபிப்பிராயங்கள், முதலியவைகள் எல்லாம் அந்தக்காலத்திய உலக நிலை, அறிவு நிலை; ஆராய்ச்சி சவுகரிய நிலை, கல்வி நிலை ஆகியவைகளுக்கு ஏற்ற வைகளாகவே இருக்கும், ஆதலால் அவை இந்தக்கால அறிவு, ஆராய்ச்சி சவுகரியம் முதலியவைகளுக்கு ஏற்றதாக இருக்க முடியாது இந்த குறைபாடானது உலக தோற்றத்தின்-மனித வாழ்க்கையின் ஒவ்வொரு தன்மையிலும் இருக்க வேண்டியதாகிவிட்டது. ஆதலால் கல்வியும் மதமும் கலந்தால் அறிவு சூன்யமாக வேண்டியதைத்தவிர வேறில்லை.

பகுத்தறிவும்-மதமும்

உதாரணமாக தற்கால நிலைமையின் பயனாய் ஏற்பட்ட ஆராய்ச்சி சவுகரியத்தை கைகொண்ட ஒருவான சாஸ்திரி கிரகணத்திற்கு காரணம் சொல்லுவதாய் இருந்தால், அவன் பூமியுடையவும், சூரியனுடையவும் நடப்பைக்கொண்டு கணக்குபோட்டு பார்த்து ஒன்றின் நிழலால் மற்றொன்றின் ஒளி இன்ன காலத்தில் இன்ன அளவுக்கு மறைக்கப்படுகின்றது என்று சொல்லுவான். இதே விஷயத்தைப்பற்றி மத சாஸ்திரியை கேட்டால் அவன் சூரிய, சந்திரன்களுக்கு ஏற்பட்ட சாபத்தின் பயனாய் ராகு, கேது என்னும் இரண்டு கெட்ட கிரகங்களால் ஏற்படும் பீடைகள் என்று சொல்லுவான்.

இதில இருக்கும் மற்றொரு ஆச்சரியம் என்னவென்றால், ஒரே ஆசாமி வானசாஸ்திரியாய் இருந்து பாடம் கற்பிக்கும்போது பூமியின் நிழலால் மறைக்கப்படுகின்றது என்றும் மத சாஸ்திரியாய இருந்து பாடம் கற்பிக்கும்போது சூரியன், சந்திரன் என்னும் தேவர்களை ராகு, கேது என்னும் பாம்புகள் விழுங்குகின்றன என்றும் சொல்லுவான்.

இதுமாத்திரமல்லாமல் வானசாஸ்திரியாய் இருந்து சூரியக்கிரகணத்தன்மையைப் பிரதியட்சப்பாடமாக சில சாதனங்களைக் கொண்டு பிள்ளைகளுக்குப் பாடம் கற்பித்துவிட்டு வீட்டுக்குப் போனவுடன் ராகு கேது பாம்புகள் விழுங்குகின்றன என்பதற்குத் தகுந்தபடி தோஷபரிகாரத்திற்கு ஸ்நானம் செய்யவும் தர்ப்பணம் செய்யவும் சங்கல்பம் செய்துகொள்ளவும் சாந்தி செய்யவுமான காரியத்தில் ஈடுபடுகின்றான். ஆகவே கல்வியுடன் மதத்தையும் கலக்குவதால் மனிதனுடைய பகுத்தறிவும் அறிவு சுதந்திரமும் எவ்வளவு கேவலமான நிலைமைக்கு வந்துவிட்டது என்பதை நினைத்துப்பாருங்கள்.

[தொடர்ச்சி 14ம் பக்கம் பார்க்க]

100000.

லக்ஷம் ரூபாய் இனாம்!

புதியமாதிரி ராட்டின இயந்திரப் பரிசுக்கு அக்டோபர் 31ௗ வரை வாய்தா.

இப்போது இருந்துவரும் நூல் நூற்கும் ராட்டினமானது நூற்கும் விஷயத்தில் அதிக நேரமும் கொஞ்ச உற்பத்தியும் ஆவதின் மூலம் நூற்பவர்களுக்கு பிரயாசை அதிகமாகவும் கூலி குறைவாகவும் கிடைத்து வருவதை உத்தேசித்து புதுமாதிரியான, அதாவது கொஞ்ச நேரத்தில் கொஞ்ச பிரயாசையில் அதிக நூலும் அதிக கூலியும் கிடைக்கும்படியான அபிவிர்த்தியுள்ள ஒரு புது மாதிரியான ராட்டின யந்திரத்தைக்கண்டு பிடித்து குறிப்பிட்ட காலத்துக்குள் கொடுப்பவர்களுக்கு ஒரு லட்ச ரூபாய் (100000 ரூ.) இனாம் கொடுப்பதாக உயர்திரு. காந்தியவர்கள் கொஞ்ச நாளைக்கு முன்பு வெளிப்படுத்தியிருந்தார். இதுவரையில் அம்மாதிரியான ஒரு அபிவிர்த்தி இயந்திரம் யாராலும் கண்டு பிடிக்கப்படாததால் அப்பரிசுக்கு இன்னமும் சிறிது காலம் வாய்தா அதிகமாகக்கொடுக்கப்பட்டிருப்பதாய் ஆமதாபாத் குஜராத் வித்தியா பீடத்தார் தெரிவிக்கிறதாக தினசரிப்பத்திரிகைகளில் காணப்படுகின்றது. அதாவது,

"100000 ரூ. பரிசுக்காக புதியராட்டின யந்திரம் கண்டுபிடிப்பவர்கள் அதை அக்டோபர் மாதம் 31 தேதிக்குள் குஜராத் வித்தியா பீடத்திற்கு அனுப்பிக்கொடுக்கலாம்" என்பதாகும்.

ஆகவே திரு. காந்தியவர்கள் கொஞ்ச நேரத்தில் அதிகமான சாமான் உற்பத்தியும் பணவரும்படியும் கிடைக்கும்படியான கொள்கையை விரும்புகின்றாரா? இல்லையா? என்பதும் அவர் விரும்புகின்றபடி ஏதாவது ஒரு சாதனம் கண்டுபிடிக்கப்பட்டுவிட்டால் அது யந்திரமாகக் கருதப்படக்கூடியதாகாதா என்பதையும் அதனால் இயந்திர முற்போக்கை திரு. காந்தி ஒப்புக்கொள்ளுகின்றார் என்பது விளங்கவில்லையா? என்பதையும் அந்தப்படி ஏற்படும் இயந்திரத்தின் பயனாய் அதாவது அப்புதிய இயந்திரம் ஒரு நாளைக்கு கால் ராத்தல் நூல் நூற்பதற்கு பதிலாக ஒரு மணிக்கு கால் ராத்தல் நூல் நூற்கும்படியானதாக ஏற்பட்டிருந்தால் அதன் பயனாய் அவ்வியந்திரம் ஒரு நாளைக்கு 8 பேர் செய்கின்ற வேலையை ஒரே ஆள் செய்யும்படியானதாக ஆகி பாக்கி "ஏழுபேர்கள் கூலி வாயில் மண் விழாதா" என்பதையும் காந்தி பக்தர்களின் இயந்திர பகிஷ்கார கதர் பக்தர்கள் கவனித்துப்பார்த்து பிறகு இயந்திர முறையைக் கண்டிக்க வேண்டுகிறோம்.

கதரின் பிற்போக்கு.

கடலூரில் திரு. S. இராமநாதன் உரை.

சென்ற 13-9-31ல் கடலூரில் திரு S இராமநாதன் தலைமையில் நடைபெற்ற பொதுக்கூட்டத்தில் அவ்வூர் காங்கிரஸ் வாலிபர்கள், திரு. ஈ.வெ. இராமசாமிக்கு படித்துக்கொடுக்கும் ஒரு உபசாரப்பத்திரமென்ற பெயரால் ஒரு துண்டுப் பிரசுரம் வழங்கினார்கள். அத்துண்டுப்பிரசுரத்தில் கதரைப்பற்றி சில சந்தேகங்கள் தங்களுக்கிருப்பதாகவும், அதை விளக்கவேண்டுமென்றும் கேட்கப்பட்டது. அந்த சந்தேகங்களை விளக்கவேண்டி திரு. எஸ். இராமநாதன் பேசியதாவது:—

இன்றையதினம் உங்களிடையே வழங்கப்பட்டிருக்கும் துண்டுப்பிரசுரத்தின் மூலம் கதரைப்பற்றி இரண்டு கேள்விகள் கேட்கப்படுகின்றன. ஒன்று, சுயமரியாதை இயக்கம் கதர் இயக்கத்தை எதிர்த்து நிற்பதின் தாத்பரியமென்னவென்பது, இரண்டாவது, கதர் கொள்கையை நிராகரிக்கும் நாங்கள் ஏன் தற்சமயம் கதர் கட்டியிருக்கிறோமென்பது.

எங்கள் அனுபோகம்

முதலாவது, கேள்வியை எடுத்துக்கொண்டு சுயமரியாதை இயக்கத்திற்கும், கதர் இயக்கத்திற்கும் இவ்வளவு நேரடியான எதிர்ப்பு நேரிட்டிருப்பதற்கு காரணம் என்னவென்பதை ஒவ்வொருவரும் தீர ஆலோசித்துப் பார்க்க வேண்டியது அவசியமேயாகும். இன்றைய தினம் கதருக்கு விரோதமாக பிரசாரஞ் செய்யும் நானும் எனது தலைவர் திரு. இராமசாமியும் ஏற்கனவே கதர் இயக்கத்தில் தீவிரமாய் ஈடுபட்டிருந்தோமென்பதையும் கதர் வேலையில் எங்களுக்கு ஏற்பட்டிருக்கும் அனுபோகத்தைவிட தமிழ்நாட்டில் வேறு எவருக்கும் ஏற்பட்டிருக்காது என்பதையும் நீங்கள் ஒத்துக்கொள்ளுவீர்கள். இந்த தென்னாற்காடு ஜில்லாவிலேயே பற்பல விடங்களில் கதர் உற்பத்தி சாலைகளையும், விற்பனை க்கடைகளையும் ஏற்படுத்த நாங்கள் எடுத்துக்கொண்ட முயற்சியை நீங்கள் நேரில் கண்டிருக்கிறீர்கள்.

ஆனபோதிலும் இன்று இந்தக்கூட்டத்தில் உங்கள் முன் கதருக்கு விரோதமாக நாங்கள் பேசத்துணிவதற்கு காரணம் எங்கள் கதர்த் தொண்டு மூலம் எங்களுக்கு ஏற்பட்ட அனுபோகமேயாகும். மதத்தின் பெயரால் கண்ணை மூடிக்கொண்டு வைதீகர்கள் சடங்குகள் செய்வதுபோல் சிலர் தேசியத்தின் பெயரால் குருட்டுத்தனமாய் கதர் வேலை செய்து வருகிறார்கள். ஆனால் நாங்கள் செய்த கதர் வேலையில் எங்கள் அறிவைச் செலுத்தி கதர் திட்டத்தின் போக்கையும், கதர் வேலையால் ஏற்பட்ட நன்மை தீமைகளையும் ஆராய்ந்து பார்த்தோம். அப்படி செய்த ஆராய்ச்சியின் பயனாய் சில உண்மைகளைக் கண்டுபிடித்தோம். அந்த உண்மைகள் தற்காலத்திய இந்திய மக்களின் மனப்பான்மைக்கும், குருட்டு நம்பிக்கைகளுக்கும் மாறுபட்டிருக்கின்றன. இருந்தாலும் நாங்கள் கண்ட உண்மையை எடுத்துச்சொல்லுவதே எங்கள் கடமையென்றுணர்ந்திருக்கிறபடியால் இன்று உங்கள் முன் உங்களுடைய மனதுக்கு கசப்பாகத் தோன்றுகிற வார்த்தைகளையும் பேசமுற்பட்டிருக்கிறோம்.

கதர் இந்திய முற்போக்குக்கு தடை.

கதர்வேலையில் ஈடுபட்டு கதர் திட்டத்தின் போக்கையும், கதர் இயக்கத்தின் அடிப்படையான கொள்கையையும் ஆராய்ந்து பார்த்ததில் கதர் என்பது இந்தியரின் முற்போக்கைத் தடுத்து, அவர்களுடைய வாழ்க்கையை பிற்போக்கடையச்செய்யும் ஒரு சாதனமென்றே கண்டுகொண்டோம். உலக சரித்திரம் இதை மெய்ப்பிக்கிறது. மனிதர்கள் ஆதியில் காட்டு மிராண்டிகளாய் தனிமையில் காடுகளில் திரிந்து, காய் கிழங்குகளைத் தின்று, இலை பட்டைகளை உடுத்தி கல், மரங்களை வணங்கி வாழ்ந்து வந்தனர். பின்னர் அவர்களிடம் அறிவு தோன்றி நாகரீகம் வளர, வளர, சிலர் ஒன்று சேர்ந்து வேட்டையாடவும் ஆடுமாடுகள் மேய்க்கவும், காடுகளை வெட்டி நிலத்தைப் பண்படுத்தி விவசாயஞ் செய்யவும், கிராமங்களில் கும்பல் கும்பலாக குடியேறி வசிக்கவும் தலைப்பட்டார்கள். காடுகளில் திரிந்த காலத்தில் அவர்கள் உபயோகப்படுத்தியது தங்கள் சரீரத்தில் இயற்கையாய் அமைந்துள்ள நகம், பல் முதலிய ஆயுதங்களேயாகும். கிராமங்களில் குடியேறிய பிறகு கத்தி, கோடறி போன்ற ஆயுதங்களை உபயோகப்படுத்த கற்றுக்கொண்டார்கள்.

இந்த ஆயுதங்களை உற்பத்தி செய்ய குடிசைத்தொழில்களும் ஏற்பட்டன. இம்மாதிரி தனித்தனியே காடுகளில் திரிந்து வந்த மனிதர்கள் குடும்பம், குடும்பமாய் கிராமங்களில் குடியேறி தொழிலபிவிருத்தி செய்து கொண்டதின்மூலம் மனித சமூகம் முன்னேற்றமடைந்தது என்னும் உண்மையை சரித்திரம் அறிந்த எவரும் மறுக்க முன் வரமாட்டார்கள். ஆனால் சமூகமுன்னேற்றமானது கிராம வாழ்க்கையிலும், குடிசைத்தொழிலிலும் முடிவடைந்து விடவில்லை. கிராமத்தொழிலுக்கு அவசியமான சில சாதனங்களை சிலர் பெருவாரியாக செய்து வியாபாரம் செய்யத்தொடங்கினர்.

யந்திர உற்பத்தி.

இதன் மூலம் சில கிராமங்களின் ஜனத்தொகை பெருத்து பட்டணங்களாயின. அப்படியேற்பட்ட பட்டணங்களில் உற்பத்திசெய்யப்பட்ட சாமான்களுக்கு ஏராளமான கிராக்கியேற்பட்டதால் அந்தசாமான்களை பெருவாரியாக உற்பத்தி செய்வதற்கு தொழிற்சாலைகள் ஏற்பட்டன.

தொழிற்சாலைகளில் மனிதசக்தியின்மூலம் உற்பத்தி செய்வதைவிட யந்திரங்களின் மூலம் சாமான்களை உற்பத்தி செய்வது சுலபமென்று கண்டுபிடிக்கப்பட்டபடியால் தொழிற்சாலைகளில் பெரிய பெரிய யந்திரங்கள் ஏற்படுத்தப்பட்டன. தொழிற்சாலைகளின் மூலம் மனித தேவைக்குவேண்டிய சாமான்களை வெகு சுலுவில் செய்து கொள்ள முடிந்தமையால் கிராமத்திலுள்ள கைத்தொழில்கள் நசித்து யந்திரத்தொழில்கள் விருத்தியடைந்தன. இப்படி ஏற்பட்ட யந்திரவளர்ச்சியின் மூலம் மனிதசமூகம் முன்னேற்றமடைந்ததாகவே உலகிலுள்ள அறிவாளிகள் பலரும் கருதுகின்றனர்.

மனிதர் காடுகளில் திரிந்த காலத்தைக்காட்டிலும் கிராமங்களில் வசித்தகாலம் எப்படி முன்னேற்றமடைந்ததாக கருதுகின்றோமோ அதேமாதிரியே மனிதர் கிராமத்தில் குடிசைத்தொழில் செய்யுங்காலத்தைவிட பட்டணங்களில் யந்திரத்தொழில் புரியுங்காலம் மேன்மைப்பட்டதென நாம் கருதவேண்டும். மனிதர்கள் காடுகளில் அலைந்த காலங்களில் தங்கள் நகம், பல், கை, கால் முதலிய அவயவங்களைக் கொண்டும், கிராமங்களில் வசித்த காலங்களில் கத்தி, கோடறி, அரிவாள், சம்மட்டி, மண்வெட்டி முதலிய சிறுசிறு ஆயுதங்களைக் கொண்டும், பட்டணங்களில் குடியேறிய பிறகு நீராவி, மின்சாரம், முதலிய சக்திகளால் ஓட்டப்படும் இயந்திரங்களைக்கொண்டும் பாடுபடுகிறார்கள்.

மக்கள் கூட்டுறவு.

காடுகளில் வசித்தபோது அவரவர்கள் தன்னந்தனியாகவும், குடிசைகளில்வசித்தபோது பெண்டுபிள்ளைகளுடன் சிறுசிறுகுடும்பங்களாகவும், பிறகு பட்டணங்களில் வசிக்கும்பொழுது பெரிய பெரிய சமூகங்களாகவும் வாழ்ந்து வந்திருக்கிறார்கள். நாளாவட்டத்தில் மனித வாழ்க்கையில் முன்னேற்றமேற்படுவதென்பது அவர்கள் தனித்தனியாய் வாழ்வதைவிடுத்து கூட்டங்கூட்டமாய்ச்சேர்ந்து தங்களுக்குள் ஐக்கியத்துடனும் கூட்டுறவுடனும் தொழில் முறையை பெருக்கிக்கொள்வதேயாகும்.

ஆகையால் யந்திரப்பெருக்கத்தையும், மனித கூட்டுறவு வளர்ச்சியையும் அதிகரிக்கும்படியான இயக்கத்தையும் மனித முன்னேற்றத்தை ஆதரிக்கும் இயக்கமாக நாம் கருதவேண்டும். யந்திரப்பெருக்கத்தைத் தடைப்படுத்தி பட்டணங்களில் நடைபெறும் கூட்டு வாழ்வைவெறுத்து குடிசைத் தொழிலையும் தனிவாழ்வையும் புகழ்ந்து கூறும் எந்த இயக்கத்தையும் மனித முன்னேற்றத்தைத்தடைப்படுத்தும் இயக்கமாகவே நாம்கருதவேண்டும். இந்த உண்மையைத் தெளிவாகக் கண்டவர்கள் காந்தீயத்தின் பெயராலும் தேசீயத்தின் பெயராலும் காங்கிரஸ் தீர்மானங்களின் மூலமும் சர்க்கா சங்க வேலைத் திட்டத்தின் மூலமும் இந்திய தேசத்தில் ஆதிக்கம்பெற்று வரும் கதர் இயக்கத்தை மனித முன்னேற்றத்தைத் தடைப்படுத்தும் இயக்கமென்று தைரியமாக எடுத்துக்கூற கடமைப்பட்டுள்ளார்கள்.

கதரை எதிர்த்தேதீருவோம்.
திரு. காந்தியை டாமரமக்கள்

(தொடர்ச்சி 12ம் பக்கம் பார்க்க

குடி அரசு

ஈரோடு 1931 செப்டம்பர் 20உ

புதுக்கோட்டை.

—:0:—

இச்சென்னை மாகாணத்திலிருக்கும் சுமார் $2\frac{1}{2}$ கோடி மக்கள் உள்ள தமிழ் நாட்டில் புதுக்கோட்டை சமஸ்தானம் ஒன்றுதான் தமிழ் மன்னர் ஆட்சியில் இருந்து வருகிறது என்று சொல்லக்கூடியதாகும்.

ஆனாலும் அதுவும் வெகு காலமாகவே பார்ப்பன ஆதிக்க ஆட்சிக்கே அடிமையாயிருந்து வந்திருக்கின்றது என்பதை யாரும் மறுக்க முன்வரமாட்டார்கள். ஆட்சி முறை மாத்திரம்தான் பார்ப்பன ஆதிக்கத்திலிருந்ததென்று சொல்லிவிட முடியாது. அச்சமஸ்தான பட்டத்திற்கு வரும் அரசர்கள் வாரிசிலும் அரசு செலுத்தும் முறையிலும் பார்ப்பன ஆதிக்கம் புகுந்து அச்சமஸ்தானம் பார்ப்பனர்கள் இஷ்டப்படி ஆட்டுவிக்கப்பட்டதாய் இருந்து வந்திருக்கின்றது.

புதுக்கோட்டை ராஜ்யபார பட்டத்திற்கு வரவேண்டியவர் அரசரின் குமாரர் என்பது அச்சமஸ்தானத்தின் சட்டமாயிருந்தாலும் பார்ப்பனீயத்தின் காரணமாகவே வருணாச்சிரமக் கொள்கை தாண்டவமாடி அரச குமாரருக்கு பட்டமில்லாமல் வேறு ஒருவருக்குப் பட்டம் ஏற்பட்டது. அந்தப்படி வேறு ஒருவருக்கு ஏற்பட்ட பட்டமும் ஒரு சிறு குழந்தைக்கு ஏற்பட்டதால் அக்குழந்தை பெரியதாகி பட்டம் ஏற்க இனியும் 10 வருஷ காலத்திற்கு மேலாகவே செல்லக்கூடிய நிலைமை உண்டாகி அதற்கு பார்ப்பனர் ஒருவர் ரீஜண்டாக நியமிக்கப்பட்டு அவ்வரசாட்சியானது பார்ப்பனீய ஆட்சி என்று சொல்லும்படியாகவே இதுவரை அரசாட்சி நடந்து வந்திருக்கின்றது.

அச்சமஸ்தானத்திற்கு வெளியில்-அதாவது பிரிட்டிஷில் எப்படி பார்ப்பனர் பார்ப்பனரல்லாதார் என்கின்ற உணர்ச்சி ஏற்பட்டதோ அதுபோலவும், இம்மாகாணத்திலுள்ள மற்ற சுதேச சமஸ்தானங்களில் எல்லாம் எப்படி அவ்வுணர்ச்சி ஏற்பட்டதோ அது போலவும் புதுக்கோட்டையிலும் சற்று ஏற்பட்டு அச்சமஸ்தான உத்தியோகங்களில் சிலவற்றையாவது இரண்டொரு பார்ப்பனரல்லாதாருக்கும் கொடுக்கவேண்டியதாயிற்று.

இந்தக்காரணமே அதாவது பார்ப்பனரல்லாதாருக்கு அரசாங்கத்தில் சில உத்தியோகங்கள் கொடுக்கும் காரணமே எப்படி அச்சமஸ்தானத்திற்கு வெளியிலுள்ள மற்ற இடங்களிலும் தேசீயம் என்றும் காங்கிரஸ் என்றும் கூப்பாடு போட்டு பாமர ஜனங்களையும் முட்டாள் ஜனங்களையும் அரசாங்கத்திற்கு விரோதமாக கிளப்பி விட்டும், கஞ்சிக்கு வகையற்ற ஆட்களைப் பிடித்து கூலி கொடுத்தும் பார்ப்பனரல்லாத அதிகாரிகளையும் பிரதிநிதிகளையும் அரசாங்கத்தையும் வையும்படி தூண்டிவிடப்படுகின்றதோ அதுபோலவே புதுக்கோட்டையிலும் அவ்வரசாங்கத்தின் மீது வெறுப்பு உண்டாகும்படியாகவும் அங்குள்ள பார்ப்பனரல்லாத அதிகாரிகள் மீதும் ஜனப்பிரதிநிதிகள் மீதும் துவேஷம் உண்டாகும்படியும் தாராளமாய் பார்ப்பனர்களால் 'தேசீய' பிரசாரமும், 'காங்கிரஸ்' பிரசாரமும் செய்யப்பட்டுவந்திருக்கின்றதையும், யாரும் மறுக்க முடியாது. உதாரணம் வேண்டுமானாலும் பல எடுத்துக்காட்டலாம்.

அச்சமஸ்தானத்தில் பார்ப்பனரல்லாதாருக்கு உத்தியோகம் கொடுக்க ஏற்பட்டது முதல் இதுவரை சமஸ்தானத்திற்கு விரோதமாய் பிரசாரம் செய்யப்பட்டதாகவும், ஜனங்களை கிளப்பி விட்டதாகவும், திருவாளர்கள் சுந்திரேசய்யர், சாமிநாதய்யர், விஸ்வநாதய்யர், சுப்ரமணிய அய்யர், ராமகிருஷ்ணய்யர், நாகரத்தினமய்யர், சென்னை எஸ். சத்தியமூர்த்தி அய்யர் முதலிய அனேக பார்ப்பனர்கள் மீதே புதுக்கோட்டை அரசாங்கம் நடவடிக்கை எடுத்து இருப்பதும், இன்னும் சில பார்ப்பனர்களை சமஸ்தானத்துக்குள் இருக்கக் கூடாதென்றும், பிரவேசிக்கக்கூடாதென்றும், போடப்பட்ட தடை உத்திரவுகள் அமுலில் இருப்பதும், போதுமான அத்தாக்ஷியாகும்.

இந்தப்படி பார்ப்பனரல்லாதாருக்குள் இதுவரை ஒருவராவது அவ்வரசாங்கத்தின்மீது துவேஷம் உண்டாகும்படியாக பிரசாரம் செய்ததாகவோ மக்களை தூண்டி விட்டதாகவோ நமக்கு தெரிந்த அளவில் எவரும் இருந்ததாக சொல்லமுடியவில்லை. நாம் பார்த்தவரை எந்தப்பத்திரிகைகளிலும் வெளிவரவுமில்லை. இந்த நிலையில் இதுவரை அங்கு நடந்துவந்த தேசீய காங்கிரஸ் பிரசாரத்தின் பயனாய் அங்குள்ள பொது ஜனங்களுக்கு அரசாங்கத்தினிடம் ஒருவித வெறுப்பு ஏற்பட்டிருந்த சமயத்தில் சமஸ்தானத்தில் புதிதாக வரியும் உயர்த்தப்பட்டுவிட்டது.

இத்தவரி உயர்த்தப்பட்ட சமயமானது சற்று பொருளாதார நெருக்கடியுள்ள சமயமாய் இருந்தபடியால் ஜனங்களுக்கு ஏற்கனவே அரசாங்கத்தின்மீது ஏற்படுத்தப்பட்டிருந்த வெறுப்புக்கு இவ்வரி உயர்வானது புகைந்துகொண்டிருக்கும் நெருப்பின்மீது நெய் வார்த்தது — ஊதிவிட்டதுபோல் ஆகிவிட்டதால் ஜனங்கள் சற்று ஆத்திரமடைந்து வரி உயர்வுக்கு எப்படியாவது பரிகாரம் தேடவேண்டியவர்களானார்கள். ஜனங்களின் ஆத்திரத்தோடு கூடிய இந்த முயற்சியை சமாளிக்கத்தகுந்த ராஜதந்திரம் சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கு இல்லாத காரணத்தாலும் சம்மந்தப்பட்ட அதிகாரிகள் பார்ப்பனர்களாய் இருந்துகொண்டு அச்சமஸ்தானத்தில் பெருவாரியாய் இருக்கும் பார்ப்பனரல்லாத மக்களிடம் அனுதாபமில்லாமலும் ஏழைகளின் கஷ்டத்தை கவனிக்காமலும், தகுந்தபடி சமாதானம் சொல்லி திருப்தி செய்யாமலும் இருந்ததாலும், மேல் குறிப்பிட்டபடி அரசாங்கத்தின் மீது ஏற்கனவே வெறுப்பு ஏற்பட்டு இருந்ததோடு அரசாங்க ஆட்சிக்கு பார்ப்பன அதிகாரிகளும் ஆதிக்கமுமே காரணம் என்பதாக பொது ஜனங்கள் கருதி குழப்பத்தில் பிரவேசித்து இருக்கலாம் அல்லது இந்த குழப்பமானது அரசாங்க அதிகாரிகளின் மீதும், காரியாலயங்களின் மீதும் பிரயோகமாகும் போது அதிகாரிகள் பெரிதும் பார்ப்பனர்களாயிருந்தபடியால் அவர்கள் மீதும் தங்கள் கண்ணோக்கங்கள் செலுத்தப்பட்டிருக்கலாம்.

இதன் பயனாய் பார்ப்பன அதிகாரிகளும், பார்ப்பனரல்லாத அதிகாரிகளும் கஷ்டப்பட்டார்கள் என்று சொல்வதனாலும் இக்கலகத்தை "தூண்டி விட்டவர்" என்று பார்ப்பனர்களால் கட்டுப்பாடாய் பிரசாரம் செய்யப்பட்டும பார்ப்பனரல்லாத அதிகாரியான போலீசு கமிஷனருக்கே தான் அதிகமான கஷ்டமும், உயிருக்கே ஆபத்தை ஏற்படும் படியான பலாத்கார செய்கைகளின் பலன்களும் ஏற்பட்டிருக்கின்றன. அரசாங்க காரியாலயங்களும் தாக்கப்பட்டன.

இந்த நிலையில் இனி இச்சம்பவங்களின் உண்மையை நடுநிலைமையில் இருந்து அறிய முற்படவேண்டியது நியாயம் என்பதையும் இச்சம்பவத்திற்கு தகுந்த பரிகாரம் செய்யப்படவேண்டியது அவசியம் என்பதையும் யாவருமே மறுக்கமாட்டார்கள்.

மேல்கண்ட சம்பவ சம்பந்தமாக, சம்பவத்திற்கு பின் நடந்த நடவடிக்கைகள் எப்படிப்பட்டது என்பதை முதலில் சற்று யோசிப்போம். அதென்னவென்றால் அங்கு ஏற்கனவே ஆதிக்கத்தில் இருந்த பார்ப்பனர் எல்லாம் ஒன்றுகூடி அச்சம்பவங்களுக்கு உண்மையாய் இருந்த காரண காரியங்களை நன்றாய் மறைத்து சம்பவத்திற்கு கொஞ்சமும் சம்பந்தப்பட்டிராததான "பார்ப்பனர், பார்ப்பனரல்லாதார் உணர்ச்சி" என்றும் "அதற்கு சுயமரியாதை இயக்க பிரசாரமே காரண'மென்றும் ஒரு கதை கட்டிவிட்டு இக்கலக விசாரணை என்பதை ஆதாரமாய் வைத்துக்கொண்டு பார்ப்பனரல்லாதார் முன்னேற்ற உணர்ச்சியை அடியோடு ஒழிக்கவும், சுயமரியாதை இயக்கத்திற்கு எதிர்பிரசாரம் செய்யவும் ஆன காரியங்களுக்கு உபயோகித்துக்கொண்டார்கள்.

மேலும், அந்த சமஸ்தானத்தில் இனி எந்த எந்த பார்ப்பனரல்லாதார் முன்னுக்கு வரக்கூடுமோ, அரசாங்கத்தில் உத்தியோகம், பதவி, பெருமை முதலியவைகள் அடையக்கூடுமோ, அப்பேர்ப்பட்ட கனவான்களையெல்லாம் இந்த சாக்கைக்கொண்டே ஒழித்துவிடலாம் என்று கருதி அவர்கள் பேரிலேயே "கலகத்துக்கு இவர்களே ஆஸ்பதமானவர்கள்" என்பதான பழிகளை சுமத்தி அவர்களையெல்லாம் கஷ்டத்தில் கொண்டுவந்து விடத்தக்க ஏற்பாடுகளும் செய்தார்கள்.

இதன் பயனாய் திருவாளர் முத்துச்சாமி வல்லத்தரசு பி. ஏ., பி. எல்., எம். எல். சி. உள்பட அனேக பார்ப்பனரல்லாத பிரமுகர்களையும் பிடித்து சிறையில் அடைக்கச் செய்து விட்டார்கள். "காளைமாடு கன்றுபோட்டது என்றால் கன்றைப்பிடித்து தொழுவத்தில் கட்டு" என்று சொல்லும் தன்மைபோல் திடீரென்று திருவல்லத்தரசை பிடி

த்து ஜெயிலில் அடைத்தார்கள்.

திரு. முத்துச்சாமி வல்லத்தரசு அவர்கள் குற்றவாளியாய் இருந்தால் தண்டிப்பதில் பாரபக்ஷம் காட்டும்படி நாம் யாருக்கும் யோசனை சொல்ல வரவில்லை. ஆனால் ஒரு பொருப்புள்ள கனவானை பெரும் பதவிக்குவா அருகதை உள்ளவராய் இருக்கும் கனவானை ஏதோ ஒரு கலவரம் நடந்ததற்காக என்று அவரேதான் காரணஸ்தராய் இருந்தாரென்று ஒரு கதை கட்டிவிட்டதின் பயனாய் சிறையில் போட்டு அடைத்துக்கொண்டு "கலகத்தைப் பற்றி விசாரணை செய்து நியாயம் வழங்குகின்றோம் என்று சொன்னால்" இச்செய்கைகளால் எப்படி சரியான நீதி கிடைக்க மார்க்கம் உண்டாகும் என்று நம்பக்கூடும்.

பார்ப்பனரல்லாத பிரமுகரான திரு. முத்துசாமி வல்லத்தரசை ஜெயிலில் வைத்துவிட்டு 'கலகத்திற்குக் காரணம் பார்ப்பனர் பார்ப்பனரல்லாதார் உணர்ச்சியும் சுயமரியாதைப் பிரசாரமுமதான்' என்ற கற்பனையைப் பரப்பிவிட்டு விசாரணை ஆரம்பித்தால் விசாரணையில் கலகத்திற்கு உண்மையான காரணம் வெளியாகக்கூடுமா என்பதை வாசகர்கள்தான் யோசித்தறிய வேண்டியது.

முத்துசாமி வல்லத்தரசை ஜெயிலில வைத்த உடனே அங்குள்ள பார்ப்பனரல்லாதார் எல்லோருமே பயந்து இருப்பார்கள் என்பதிலும் அங்குள்ள பார்ப்பனர்கள் எல்லோருமே தைரியங்கொண்டு எதுவேண்டுமானாலும் சொல்லலாம் என்று துணிந்திருப்பார்கள் என்பதிலும் சிறிதாவது சந்தேகத்திற்கு இடமிருக்கமுடியுமா என்று கேட்கின்றோம்.

கலகவிசாரணை அதிகாரிமுன் சாட்சிகொடுத்த பார்ப்பனர்கள் அத்தனைபேரும் அனேகமாய் ஒரே பள்ளிக்கூடத்தில் உட்கார வைத்து பாடஞ் சொல்லிக்கொடுத்த பிள்ளைகளைப்போலும் ஒரு கிராம்போன் தட்டை திரும்பத் திரும்ப கேட்டால் எப்படி இருக்குமோ அதுபோலும் பெரிதும் ஒரேமாதிரியாகவே சாட்சி சொல்லி இருக்கின்றார்கள்.

அரசாங்கமானது தனது விசாரணையில் பாரபட்சமில்லாமல் இருப்பதை நன்றாய்க் காட்டிக்கொள்ள முயற்சி செய்திருக்குமானால் ஒன்று பார்ப்பனர் பார்ப்பனரல்லாதார் என்ற காரணத்திற்காக கலகம் நடந்தது என்பதாக அரசாங்கத்தார் நினைத்துவிட்டார்கள் என்று ஜனங்கள் நம்பும்படியான தன்மையில் திரு முத்துச்சாமிவல்லத்தரசை சிறைப்படுத்தாதிருந்திருக்க வேண்டும். அல்லது அந்தமாதிரி ஜனங்கள் கருதக்கூடாது சர்க்காரார் இன்னமும் ஒருமுடிவுக்கும் வரவில்லை என்று ஜனங்கள் நம்பவேண்டும் என்று அரசாங்கம் நினைத்திருந்தால் பிராமணரிலும் சிலரை சிறைப்படுத்தித்தங்கள் நடுநிலைமையை காட்டிக்கொண்டிருக்க வேண்டும்.

அந்தப்படி பார்ப்பனத்தலைவரான திருசாமிநாதய்யரைபோலவேறு ஒருதலைவரையோ பிடித்திருந்தால் கிராம்போன் பெட்டிபோன்ற பார்ப்பன சாக்ஷியங்கள் ஒன்றுகூட தலைகாட்டி இருக்கமாட்டாது. அல்லது வேறுமாதிரியாக வாவது இருந்திருக்கும் என்பதோடு பார்ப்பனரல்லாதார் சாட்சிகளும் பயமில்லாமல் வந்து உண்மையைச் சொல்லியிருக்கும். அப்படிக்கில்லாமல் பார்ப்பனரல்லாதார் பிரமுகரைமாத்திரம் சிறைப்படுத்தியதால் உண்மை வெளியாவதற்கே மார்க்கமில்லாமல் போய்விட்டதென்று பயப்படவேண்டியதாய்த்தான் இருக்கின்றது.

இப்பொழுதும் ஒன்றும் காலம் கடந்துவிடவில்லை. ஏதோ ஒருவழியில் பொது விசாரணை நடந்துவிட்டது. அதைப்பற்றிய அறிக்கையும் வெளியாகியிருக்கலாம்.

இனிமேல் கோர்ட் நியாயஸ்தல விசாரணை நடக்கவேண்டியிருக்கின்றது. இவ்விசாரணையில் உண்மை வெளியாகவேண்டியிருக்கின்றது. நடுக்கண்ட நியாயத்தை உலகம் எதிர்பார்த்துக் கொண்டிருக்கின்றது. இந்த நிலைமையில் "அரசாங்கம்பார்ப்பனர்களுக்கு அனுகூலமாய் இருக்கின்றது, பார்ப்பனரல்லாதாருக்கு விரோதமாயிருக்கின்றது" என்று பாமரமக்களுக்குள் எண்ணம் ஏற்படாமலிருக்கவேண்டியது அவசியமாகுமாதலால் திரு. வல்லத்தரசை வெளியிலவிட்டு அவர்மீது சட்டப்படி நடவடிக்கை எடுத்துக்கொள்ளவோ அல்லது அரசாங்கம் இருகட்சிக்கும் பொதுவாய் இருக்கிறதென்று கருதுவதற்காக பார்ப்பனர்களிலும் முக்கியமான ஒருவரை அடைத்துவைக்கவோ செய்யவேண்டியது நடுநிலைமை நியாயம் வழங்கப்படவேண்டியதை உத்தேசித்து அவசியமான காரியமாகும் என்பதைத் தெரிவித்துக் கொள்ளவே இதை எழுதுகிறோம்.

நாகபட்டணம் தாலூகா

முதலாவது சுயமரியாதை மகாநாடு.

நாளது 1931௵ அக்டோபர்௴ 3, 4ந்தேதிகளில்
நாகபட்டணம் கோர்ட்டு கம்பவுண்டுக்கெதிர்த்த
மைதானத்தில் புதிதாய் அமைத்திருக்கும்
"சமத்துவப்பந்தலில்"
உயர்திருவாளர்

W. P. A. சௌந்திரபாண்டியன், M. L. C.,

அவர்கள் தலைமையில் மிகவிமரிசையாய்
மகாநாடு நடைபெறும்.
சுப்பையா விசாலாக்ஷி அம்மையார் அவர்கள்
மகாநாட்டை ஆரம்பித்து வைப்பார்கள்.

அதுசமயம் பல ஜில்லாக்களிலிருந்து பிரபலத்தலைவர்களும், தொண்டர்களும், வருவதாகத் தெரிவித்திருப்பதாலும், நிகழ்ச்சிக் குறிப்பிலுள்ள பெரியோர்களின் சொற்பெருக்கை அனைவரும் கேட்டு நம் நாட்டு நலன்களை அறிந்து தேசமுன்னேற்றத்தில் ஈடுபடுவதுடன் தாங்கள் தங்கள் நண்பர்களுடன் வந்திருந்து சிறப்பாய் மகாநாட்டை நடத்தும்படிக் கேட்டுக்கொள்ளுகின்றோம்.

பிரவேசக்கட்டணம்.

உபசரணைக்கழக அங்கத்தினர்களுக்கு	ரூ.	2—0—0
பிரதிநிதிகளுக்கு	ரூ.	1—0—0
விசிட்டருக்கு	ரூ.	0—4—0

குறிப்பு:—வெளியூர் பிரதிநிதிகளுக்கு சாப்பாடு முதலிய சௌகரியங்கள் செய்யப்பட்டிருக்கிறது. படுக்கைகொண்டுவரவும்.

நிகழ்ச்சிக் குறிப்பு.

3—10—1931 சனிக்கிழமை.

மகாநாட்டுத் தலைவர் உயர்திருவாளர் W. P. A. சௌந்திரபாண்டியன், M. L. C., வெளியூர் பிரதிநிதிகள், தலைவர் E. V. ராமசாமி முதலியவர்களை ரயில் நிலயத்தில் வரவேற்றல்.

மகாநாட்டுத் தலைவர் முதலியவர்களை ரயில் நிலயத்திலிருந்து மகாநாட்டு "சமத்துவ பந்தலுக்கு" ஆறு குதிரைகள் பூட்டிய ரதத்தில் ஊர்வலமாக அழைத்துச்செல்லல்.

கூத்தூர் சமதர்ம வாசகசாலை மாணவ மாணவிகளாலும், மற்றவர்களாலும், சுயமரியாதைப்பாடல்.

சுப்பையா, விசாலாட்சி அம்மையார் அவர்களால் மகாநாடு ஆரம்பம்.

வரவேற்புக்கழகத்தலைவர் சொற்பொழிவு. பிறகு

12-மணிக்கு உணவுக்காகக் கலையும். பிறகு 3 மணிக்கு மகாநாடு ஆரம்பம். தோழர்கள் P. அம்மைநாதன், கிருஷ்ணமூர்த்தி, பழனிவேலு முதலியவர்களால், சுயமரியாதைக்கீதம்.

மகாநாட்டுத் தலைவர் தேர்தல்.

மகாநாட்டுத் தலைவர் சொற்பெருக்கு.

விஷயாலோசனைக்கழக அங்கத்தினர்கள் தேர்தல்.

தோழர்கள் E. V, இராமசாமி, நாகம்மாள், S. இராமநாதன் M. A. B. L., முருகப்பர், மரகதவல்லி, திருச்சி T. V. சோமசுந்திரம் B. A. B. L., T. P. வேதாசலம் B. A. B. L., S. குருசாமி, குஞ்சிதம் B. A., M. சிங்காரவேலு B. A. B. L., (மதாரஸ்) இ. ஆ. டெ. விஸ்வநாதம், K. V. அழகர்சாமி, அ. பொன்னம்பலம், சுலோசனு, S. V. லிங்கம், C. நடராஜன், சாமி சிதம்பரனுர், சிவகாமி, திராவிடன் ஆசிரியர், பண்டித முத்துசாமி, முதலியவர்களின் சொற்பொழிவு.

இரவு 6-30 மணிக்கு விஷயாலோசனைக்கழகக் கூட்டம்.

8-மணியிலிருந்து 9-30 மணி வரை உணவு நேரம்

4—10—1931 ஞாயிற்றுக்கிழமை

சுயமரியாதைப்பாடல், மகாநாட்டுத் தீர்மானங்கள்.

12-மணியிலிருந்து 3-மணி வரை பகல் உணவு நேரம்

மகாநாட்டுத் தலைவரின் முடிவுரை. வந்தனோபசாரம்.

T. P. ஆறுமுகம்,
S. P. கிருஷ்ணன்,
காரியதரிசிகள்.

M. K. குப்புசாமி,
வரவேற்புக்கழகத்தலைவர்.

(8-ம் பக்கத் தொடர்ச்சி)

மகாத்மாவென்றுமரியாதைசெய்கிறகாரணத்தால்அவரைக்குற்றம் கூறுகிறவர்கள்பாமரமக்களின்வெறுப்புக்குப் பாத்திரமாக வேண்டிவரும். காங்கிரஸ்சபையானது அரசியல்மாறுதலைக் கோரும் சில வகுப்பாரின் ஆதரவைப்பெற்றிருப்பதால் அவ்வகுப்பார் எங்களுடைய எதிர்ப்பிரசாரத்தைக் கண்டு கோபங்கொள்ளுவது சகஜமேயாகும். இப்படிப்பட்ட எதிர்ப்புகள் எவ்வளவு ஏற்பட்ட போதிலும் கதர் இயக்கமானது இந்திய மக்களை பிற்போக்கடையச்செய்கிறது என்கிற முடிவான அபிப்பிராயம் எங்களுக்கு ஏற்பட்டிருக்கிறபடியால் எங்கள் சக்திக்குத் தகுந்த அளவுக்கு கதருக்கு எதிரிடையாக வேலை செய்து தீரவேண்டுமென்றே நாங்கள் முன்வந்திருக்கிறோம்.

கதரைப்பற்றிய முழு விபரத்தையும் பரிசீலனை செய்ய இந்தக்கூட்டத்தில் போதிய அவகாசமில்லாதபடியால் கதரைக்கட்ட வேண்டுமென்று வற்புறுத்தும் தேசீய வாதிகளின் பொது மக்களிடை பரப்பிவரும் உண்மைக்கு மாறான சில எண்ணங்களைமட்டும் விளக்கிக்காட்டலாமென எண்ணுகிறேன்.

தப்புக்கணக்கு.

கதரைப்பற்றி பிரசாரஞ்செய்ய முற்படுகிறவர்கள் அன்னிய ஆடை இறக்குமதியால் இந்தியாவிற்கு வருஷம் 60 கோடி ரூபாய் நஷ்டமாகிறதென்றும், இந்த 60 கோடிபெருமானமுள்ள அன்னியத்துணியானது இந்தியநாட்டிலேயே விளைந்த பஞ்சை அன்னிய நாட்டார் குறைந்த விலைக்கு வாங்கிக்கொண்டு போய் அந்தப்பஞ்சையே தங்கள் நாட்டில் நூற்று, நெய்து, துணியாகமாற்றி அந்தத் துணியையே திரும்பவும் நம் நாட்டில் கொண்டு வந்து அதிக விலைக்கு விற்று ஏராளமான லாபம் சம்பாதிக்கிறார்களென்றும்சொல்லுகிறார்கள். நமது பஞ்சைக்கொண்டு அந்நியநாட்டார் நம்மிடத்திலே லாபம் சம்பாதிக்கிறார்களென்று பாமரமக்களிடம் பிரசாரம் செய்கிறார்கள். இது உண்மைக்கு மாறானகூற்று.

நமது நாட்டில்சுமார் 60லக்ஷம் பாரம் பஞ்சு உற்பத்தியாகிறது. இந்த 60 லக்ஷம் பாரத்தில் சுமார் 3ன்றில் 1 பாகம் தான் நமது நாட்டு பஞ்சு ஆலைகள் மூலம் துணி செய்வதற்காக நமது நாட்டிலேயே செலவழிக்கப்படுகிறது. பாக்கியிருக்கும் 3ன்றில் 2 பாகத்தை அந்நிய நாட்டார் விலை கொடுத்து வாங்கிக்கொண்டு போகிறார்கள். அப்படி வாங்கிக்கொண்டு போகும் அந்நிய நாட்டாரில் முக்கியஸ்தர்கள் ஜப்பான், சீனா முதலிய தேசத்தாரே யொழிய இங்கிலீஷ்காரர்கள் அல்ல. ஆனால் நமது நாட்டில் இறக்குமதியாகும் துணியில் பெரும்பாகம் இங்கிலாந்திலிருந்தே வருகிறது. அப்படி இங்கிலாந்திலிருந்து இறக்குமதி செய்யப்படும் துணியானது நமது இந்திய நாட்டு பஞ்சால் செய்யப்பட்டதல்ல. ஏனென்றால் நமது நாட்டுப் பஞ்சால் யந்திரத்தில் அவ்வளவு மெல்லிய நூல் நூற்க முடியாது.

அமெரிக்கா, ஈஜிப்ட் முதலிய தேசங்களில்விளையும் நீண்டநார்களுள்ளபஞ்சுகளை இங்கிலீஷ்காரர் தங்கள் நாட்டுக்குக்கொண்டு போய்அவற்றிலிருந்துஉற்பத்தி செய்யப்பட்ட மெல்லிய நூல்களையும் துணிகளையும் நமது நாட்டுக்குகொண்டுவந்துவிற்கிறார்கள். அவர்கள் கொண்டுவரும் மெல்லிய ரகங்களை நம் நாட்டிலேயே உற்பத்தி செய்யவேண்டுமானால் நாமும் அதற்குத் தகுந்த பஞ்சை ஈஜிப்ட், அமெரிக்கா தேசங்களிலிருந்து வரவழைத்துக்கொள்ள வேண்டும். இன்றைய தினமும் நமது நாட்டில் சில ஆலைகளில் அம்மாதிரி வெளிநாட்டு பஞ்சுகளை வரவழைத்துத்தான் மெல்லிய ரகங்களை உற்பத்திசெய்கிறார்கள்.

இது ஒருபுறமிருக்கநமதுநாட்டிலிருந்து வெளியேற்றப்பட்ட நமது விவசாயிகளால் உற்பத்தி செய்யப்பட்ட பஞ்சானது ஜப்பான் முதலியஅன்னியநாடுகளில் துணியாகமாற்றப்பட்டு சீனா, ஜப்பான் முதலிய தேசத்து ஜனங்களிடம் விற்பனை செய்யப்படுகிறது. அதில் ஒரு சிறுபாகமே நமது நாட்டிற்கு இறக்குமதி செய்யப்படுகிறது.

பகிஷ்காரத்தின் ஆபத்து.

சுதேசியத்தின் பெயரால்இந்த நாடுகளைநாம்பகிஷ்கரிப்போமானால்அவர்கள்அதற்கு பதிலாக நம்மிடமிருந்து பஞ்சுவாங்குவதைநிறுத்தி விடுவார்கள் அப்பொழுது நம்நாட்டு பஞ்சை வாங்குவோரில்லாமல் போய்விடும். நமது ஏழை விவசாயிகள்வாயில்மண் விழும். இப்படி பகிஷ்கார இயக்கம் ஆரம்பிப்பதைவிட்டுவிட்டு நமது செல்வநிலையைபெருக்குவதற்காக அந்நியநாட்டாருக்குபஞ்சு ஏற்றுமதி செய்து கொண்டும், நமது நாட்டு பஞ்சாலைகளை அபிவிருத்தி செய்து கொண்டும் வந்தோமேயானால் கூடிய சீக்கிரத்தில் தொழில் முறையில் இங்கிலாந்து தேசத்தோடு கூட போட்டி போடும் உன்னத நிலைமையைநாம் அடைவோமென்பதுதிண்ணம்.

இன்றையதினமும்இந்தியநாட்டுக்குவேண்டியதுணியில்மூன்றில் 2 பாகத்திற்கு மேல் நமது நாட்டில் நமது ஆலைகள் மூலமே உற்பத்தி செய்து கொள்ளுகிறோம். இந்திய ஜனங்களின் உடைகளுக்காக வருஷம் 1-க்கு 600 கோடி கஜம் துணி அவசியமாகிறது. இதில் 190 கோடி அதாவது 3-ன்றில் 1 பாகத்திற்குக் குறைவாகவே பகிஷ்கார இயக்கம் ஆரம்பிக்குமுன் வெளிநாடுகளிலிருந்து நமது நாட்டிற்கு இறக்குமதி செய்யப்பட்டது. நம்முடைய தேவைக்கு வேண்டிய துணியில் 3-ன்றில் 2 பாகத்திற்குமேல் நம்முடைய நாட்டிலேயே உற்பத்தி செய்து கொள்ளுகிறோம்.

நாம்செய்ய வேண்டியது.

இன்றையதினம் வெளிநாடுகளுக்கும், கொஞ்சம் துணி ஏற்றுமதி செய்து வருகிறோம். ஆகவே பஞ்சு ஆலைத்தொழிலில் நாம் மற்ற தேசத்தாரை விட பின்னிட்டிருக்கவில்லை. தற்சமயம் ஏற்பட்டிருக்கும் வியாபார மந்தத்தின் மூலமும், தொழிலாளிகள் அடிக்கடி வேலை நிறுத்தம் செய்வதின் மூலமும், ஆலைக்காரர்கள் கதவடைப்புகள் மூலமும், நமது பஞ்சு ஆலைகளில் சரிவர வேலை நடை பெறுவதில்லை. இந்த சங்கடங்கள் நேரிடாதபடி நம் தொழில் முறையை சீர்திருத்தம் செய்து கொண்டு நம் தேசத்தில் தற்சமயம் ஏற்பட்டிருக்கும் ஆலைகளையே தீவிரமாக நடத்த முற்பட்டோமேயானால் இந்தியா தேசத்தின் தேவைக்கு வேண்டிய துணி முழுவதையும் நாமே உற்பத்தி செய்வதோடு கூட அந்நிய நாட்டாருக்கும் ஏராளமாக ஏற்றுமதி செய்யும் சக்தியும் நமக்கு உண்டாகிவிடும். இதற்கென புதிய மில்கள்-வாங்கவோ முதல் சேர்க்கவோ அவசியமில்லை. இவ்விதமான முற்போக்கு வேலையைதைரியமாய்ச்செய்யாமல் பகிஷ்காரம், பகிஷ்காரம் என்று கூச்சலிடுவதும், ராட்டை சுழற்றுவதும், தக்ளி சுற்றுவதும், முற்படுவது அறிவற்ற செயலாகும். இம்மாதிரி குருட்டு இயக்கங்களால் நமது நாட்டின் செல்வ நிலை சீர்கேடு அடைவதும் தவிர ஏழைத்தொழிலாளர்கள் பாடும் திண்டாட்டமாகி விடுகிறது.

பகிஷ்கார இயக்கத்தின் மூலம் இந்தியத்தொழிலாளர்கள் கஷ்டப்படுகிறார்களென்பதை உங்கள் ஊரிலேயே நிதர்சனமாகக் காணலாம். இந்தத் தென்னாற்காடு ஜில்லாவிலும் இதன் சுற்றுப்புறங்களிலும் ஏராளமான தரிகாரர்களுண்டு. கைத்தரிகள் மூலம் கைலிகள், Madras handkerchieves முதலிய ரகங்கள் நெய்யப்பட்டு மலேயா முதலிய அன்னிய நாடுகளுக்கு ஏராளமாக ஏற்றுமதி செய்யப்பட்டு வந்தது. இந்த வியாபாரத்தின் மூலமாக ஆயிரக்கணக்கான நெசவுகாரர்கள் கவலையின்றி ஜீவித்து வந்தனர். இந்தக் கூடலூரிலேயே நடந்து வரும் இத்தொழிலைப்பற்றி நான் விவரித்துக்கூறவேண்டியதில்லை. பகிஷ்கார இயக்கத்தால் இந்தத்தொழிலுக்கு ஆபத்து நேரிட்டிருப்பதையும் நெசவுகாரர்களில் அநேகர் பிச்சை எடுத்து சாப்பிடவேண்டிய நிலைமையை அடைந்திருப்பதையும், நீங்கள் கண்முன் பார்க்கிறீர்கள்.

கைலி (லுங்கி) நெசவானது அன்னிய நூலைக்கொண்டு நமது நாட்டுக் கைத்தரிகளின்மூலம் நமது நாட்டு நெசவுக்காரர்களால் செய்யப்பட்டுவருகிறது இந்தத்தொழிலைக் கதரியக்கமும் பகிஷ்கார இயக்கமும் எதிர்த்து நிற்கிறது. மெல்லிய நூல்களால் நெய்யப்படவேண்டிய கைலிகளுக்கு அந்நிய நூல்கள்தான் உபயோகப்படுத்தவேண்டும். நமது நாட்டு ஆலைநூல்களில் அந்நிய நூல்களைப்போல நயமும், வலுவும் இன்னும் ஏற்படுத்தப்படவில்லை. ஆகையால் அந்நிய நூல்களை உபயோகிக்காவிடில் இந்தக் கைலிகளுக்கு வெளிதேசங்களில் ஏற்பட்டிருக்கும் கிராக்கி குன்றிவிடும். நமது நாட்டிலேற்பட்டிருக்கும் பகிஷ்கார இயக்கத்தின் பயனாக அந்நியநாட்டார் நாம் கைலி வியாபாரம் செய்யும் மலேயா முதலிய நாடுகளிலேயே நம்முடன் போட்டிபோட ஆரம்பித்திருக்கிறார்கள். இதனால் நமது வியாபாரம் குன்றி தரிகாரர்கள் வேலையில்லாமல் திண்டாடவேண்டியதாயிற்று. பகிஷ்காரக்கூச்சல் போடும் தேசபக்தர்களுக்கு அவர்கள் கூச்சலால் வேலையிழந்து பட்டினிகிடக்கும் தொழிலாளிகளை ஆதரிக்கும் சக்தியில்லை ஆகையால் இந்தக் கூச்சலுக்குச் செவிகொடுக்காமல் கைலித் தொழிலை விருத்திசெய்யவேண்டியது இந்த ஊர்வாசிகளின் கடமையாகும்.

ரோஜா முத்தையா ஆராய்ச்சி நூலக அறக்கட்டளை

"கதர் கட்டலாமா?"

சுயமரியாதை இயக்கத்தைச் சேர்ந்தவர்கள் கதர்கட்டலாமா வென்று இன்றைய தினம் உங்களிடம் வழங்கப்பட்ட துண்டுப் பிரசுரத்தில் கேட்கப்பட்டிருக்கிறது. சுயமரியாதை இயக்கமென்பது மனிதனுடைய பகுத்தறிவு ஒன்றையே பிரதானமாகக் கொண்டுள்ளது. எந்தவிஷயத்திலும் ஒவ்வொருவரும் தங்களுடைய அறிவை உபயோகித்து அவரவர்களுக்கு சரி என்று ஏற்பட்ட நிச்சயத்தின்படியே நடக்கவேண்டுமென்பது நமது எண்ணம். ஆகையால் நமது இயக்கத்தில் எவ்வித பலவந்தத்திற்கும் இடமில்லை. பகிஷ்கார இயக்கத்தால் அந்நிய ஆடைகளை அவிழ்த்தெறியச் செய்வதையும், துணியை எரிப்பதையும், மறியல் செய்வதையும் தங்கள் வேலைத்திட்டமாய்க்கொண்டுள்ளார்கள். இம்மாதிரியான காரியங்கள் ஆத்திரத்தினுலும், வெறுப்பினுலும், துவேஷத்தினுலுமே செய்யப்படுகின்றன. ஆனால் சுயமரியாதை இயக்கத்தைச் சேர்ந்தவர்களுக்கு எவரிடத்திலும் ஆத்திரமோ, வெறுப்போ, துவேஷமோ தோன்றக் காரணமில்லை.

கதர்கட்டுவதானது தேசமுன்னேற்றத்திற்கு தீங்கிழைப்பதாகும் என்று நாம் முழுமனதுடன் நம்பியபோதிலும் இன்றைய தினம் கதர் கட்டியிருப்பவர்களுக்கு அவரவர்கள் மனதிலும் கதர் இயக்கமானது தீங்கிழைப்பது என்று படும்வரையில் அவர்கள் கதரை விட்டு விடவேண்டுமென்று நாங்கள் விரும்பவில்லை. மேலும் ஏற்கனவே கதரைப் பணம்போட்டு வாங்கி வைத்திருப்பவர்கள் அதை எரிந்துவிட வேண்டுமென்று நாங்கள் விரும்பவில்லை. பணம்போட்டு வாங்கின சாமானை எரிவதோ, அல்லது பாழ்படுத்துவதோ என்றால் அது பயித்தியக்காரத்தனமாகும். இந்தக்காரணத்தினால் தான் எங்களிலும் சிலர் இன்னும் கதர் கட்டிக்கொண்டிருக்கிறார்கள். ஆனால் அவர்களும் தங்கள் மனதில் கதரின் தீங்குகளை உணர்ந்த பிறகு, புதிதாய் கதர் வாங்க மாட்டார்களென்பது நிச்சயம்.

"மணி குமாரி"

தோழர் இராமசுப்பிரமணியம் நீலாவதி அவர்களின் பெண் குழந்தைக்கு "மணிகுமாரி" எனப் பெயர் குறிப்பிட்டிருப்பதாக நமது நிருபர் அறிவிக்கிறார்.

சாரதா சட்டத்திருத்த மசோதாவுக்கு ஆதரவு.

கூட்டத்திற்கு மூன்று பேரே வந்திருந்தனர்.

மன்னார்குடி தேசிய உயர்தர பள்ளிக்கூடத்தில் பிராமண மகா சபையின் ஆதரவில் 17-9 31-ல் அன்று இந்திய சட்டசபையில் இப்போது ராஜா பகதூர் ஜி. கிருஷ்ணமாச்சாரியாரால் கொண்டுவரப்பட்டிருக்கும் சாரதாசட்டதிருத்த மசோதாவை ஆதரிப்பதற்கு மூன்றே பேர் வந்திருந்தனர். கூட்டம் நடைபெறவில்லை என ஒரு நிருபர் எழுதுகிறார்.

கோவிற்பட்டி

ஆதிதிராவிட சுயமரியாதைச் சங்கம்.

மேற்படி சங்கத்தின் சார்பில் ஒரு பொதுக்கூட்டம் நடைபெற்றது. அவ்வமயம் தோழர் பாக்கியம் அவர்கள் தலைமைவகித்தார். தோழர் லெக்கையா அவர்கள் தீண்டாமை என்ற பொருள்பற்றியும், தோழர் ஜேசையா அவர்கள் ஆதிதிராவிடர்கள் முன்னேற்றம் என்பது பற்றியும், தோழர் மகாராஜன் அவர்கள் கடவுள் என்பது பற்றியும் தெளிவாகப்பேசினார்கள் என ஒரு நிருபர் எழுதுகிறார்.

முஸ்லீம் நிலைமை.

மௌலானா ஷௌகத்அலி கருத்து

மௌலானா ஷௌகத்அலியை ராய்ட்டர் நிருபர் பேட்டி கண்டு பேசியபோது அவர் பின்வருமாறு தெரிவித்தார்:-

வகுப்புப் பிரச்சினை சம்பந்தமாக ஒரு ஒப்பந்தத்திற்கு வரும் பொருட்டு அடுத்தவார ஆரம்பத்தில் தலைவர்கள் ஒருவரை ஒருவர் சந்தித்துப் பேசுவதற்கு நான் ஏற்பாடுகள் செய்யப்போகிறேன். சென்ற மகாநாட்டில் முஸ்லீம் நிலைமை எவ்விதம் ஏற்பட்டுள்ளதோ அதனின்றும் நிலைமை வேறு எவ்வித மாறுதலும் அடையவில்லை

சண்டமாருதம்

தாதி தேவை.

சுமார் 30 வயதிற்குட்பட்டவரும், சுகாதார முறையும், சிசுக்களை வளர்த்து அனுபோமும் தெரிந்திருக்கவேண்டும். சாப்பாட்டுடன் சம்பளமும் தரப்படும், விவரத்திற்குஎழுதவும்.

Y X

C/o குடி அரசு

ஈரோடு.

வேண்டுகோள்.

குடி அரசில் பிரசுரிக்க ஏராளமான வியாசங்களும், சேதிகளும் பல நண்பர்களால் எழுதி அனுப்பப்படுகின்றன. அவைகளை யெல்லாம் பிரசுரிக்கப் பல காரணங்களால் சவுகரியப்படாமல் இருப்பதோடு போதிய இடமும்இல்லை.

ஆகையால், நிருப நேயர்கள் மனஸ்தாபப்படக்கூடாது என்று கேட்டுக்கொள்ளுகிறோம்.

மேனேஜர்.

சுயமரியாதைத் திருமணங்கள்

ஆண்டிப்பட்டியில் 16-9-31 ல் திரு வெ. சங்கம்மரெட்டியாருக்கும் திருமதி ராமக்காளுக்கும் திரு கோவிந்தசாமி ரெட்டியாருக்கும் திருமதி அங்கம்மாளுக்கும் திரு. குருசாமி ரெட்டியாருக்கும் திருமதி அலர்மேலு அம்மாளுக்கும் திரு. அழகப்ப ரெட்டியாருக்கும் திருமதி மீனம்பாளுக்கும் திரு. குருவப்பரெட்டியாருக்கும் திருமதி பாலாம்பாளுக்கும் முறையே சுயமரியாதை திருமணங்கள் நடைபெற்றதென ஒரு நிருபர் எழுதுகிறார்.

குண்ணத்தூர்.

திருமங்கலம் தாலுகாவைச் சேர்ந்த குண்ணத்தூர் கிராமத்திற்கு அடுத்த இரங்கபாளையத்தில் திரு. கே. எல். ஏ. ஏ. அழகர் சாமிக்கும், திருமதி அலமேலு அம்மாளுக்கும், திரு. கே. எல். ஏ. ஏ. லக்ஷ்மணனுக்கும், திருமதி வெங்கிட்டம்மாளுக்கும், திரு எம். என். ஆர். நாராயணசாமிக்கும் திருமதி கொண்டம்மாளுக்கும் 9 9-31ல் முறையே சுயமரியாதைத்திருமணங்கள் நடந்தேறியதென ஒரு நிருபர் எழுதுகிறார்.

திவான்பகதூர் பி. கேசவப்பிள்ளை,

சி. ஐ. இ. எம். எல். சி. அவர்கள் எழுதுவதாவது:-

"பண்டிட் எஸ். எஸ். ஆனந்தம் அவர்களால் செய்யப்பட்ட மருந்துகளை சிலகாலமாக என்னுடைய குடும்பத்தில் உள்ளவர்களுக்கு மிக்க அனுகூலத்துடன் உபயோகித்து வந்திருக்கின்றேன். என் மகளுக்கு நரம்புத்தளர்ச்சியினால் ஏற்பட்ட தலைநோயை அவருடைய மகா சந்தனாதித் தைலம் குணப்படுத்தியது........"

வைத்திய பாஸ்கர பண்டித S. S. ஆனந்தரின்

மகா

சந்தனாதித்தைலம்

(24 வருடங்களாக உலகத்தில் பிரசித்தி பெற்றது)

இத்தைலம் மூளை பலவீனத்தையும் நரம்புத்தளர்ச்சியையும் மிக விரைவில் நீக்கி புதிய சக்தியைக் தரவல்லது. கண்களுக்கு ஒளியையும், குளிர்ச்சியையும் அளிப்பதில் நிகரற்றது. ஞாபகசக்தியை அதிகப்படுத்துவதில் ஒப்புயர்வற்றது. இன்றே ஒரு புட்டி வாங்கி உபயோகித்துப்பயனடையுங்கள். வீணே போலித் தைலங்களுக்கு காசை யிரையாதீர்கள்.

6 அவுன்சு ரூ. 1-0-0. 12 அவுன்சு ரூ. 1-14-0.

இனும்.

விலாசம் தெரிவிப்போருக்கு சுகவழி என்ற புத்தகமும் கேட்லாக்கும் இனும்.

தந்திவிலாசம்:— 'மருத்துவன்' சென்னை. டெலிபோன் நெ. 2584

தமிழ் வைத்தியசாலை, 221, தங்கசாலைத்தெரு, சென்னை.

(8-ம் பக்கத்தொடர்ச்சி)

அதிலும் நமது மதசம்பந்தமான அபிப்பிராயங்களும், குறிப்புகளும் மிக மிகப் பழமையானதினால் காட்டுமிராண்டித்தனமான காலத்து எண்ணங்களையும் அதன் முடிவுகளையும் இன்று எவ்வளவோ தெளிவான காலத்தில் கட்டிக்கொண்டு அழுவதுடன் அதைக் கல்வியுடன் கலக்கி கல்வியையே பாழ்படுத்தி விட்டோம்.

உபாத்தியாயர்கள்.

இன்றைய கல்வியில் முக்கியமாக நமது நாட்டுக் கல்வியில் இருக்கின்ற ஆபத்தும் பயனற்ற தன்மையும் எதனால் என்று பார்ப்போமானால் நமது கல்வி போதகர்கள் எல்லாம் மதத்தின் சாக்கினால் மேன்மையடைந்து வருகின்றவர்களாகவே ஏற்பட்டுவிட்டதாகும். மதம் என்னும் உலோகத்தினால் ஒரே அச்சில் உருக்கி வார்க்கப்பட்ட உருவங்களேதான் இன்று பெரிதும் உபாத்தியாயாகளாக அமைந்து இருக்கின்றார்கள். இம்மாதிரி உபாத்தியாயர்களிடம் படிக்கும் பிள்ளைகளுக்குக் கல்வியினால் எப்படி அறிவும் சுதந்திர ஞானமும் உண்டாகமுடியும் என்பதை யோசித்துப் பாருங்கள்.

அறிவுவேறு மதம்வேறு என்று பிரித்துவிடவேண்டும். அறிவை உண்டாக்கிவிட்டுப்பிறகு அந்த அறிவின் மூலம் மதத்தைக் கொள்ளும்படி செய்யவேண்டும். அப்படிக்கில்லாமல் மதத்தைப் புகுத்தி அதன்மூலம் அறிவை வளரவிடாமல் செய்துவிட்டால் சுதந்திரஞானம் எப்படி ஏற்படும்?

இரண்டும் இரண்டும் ஐந்து என்றால் எப்படி ஐந்து? என்று கேட்கக்கூட உரிமை இல்லாதமுறையில் கல்வி கற்பித்தால் கணக்கில் ஒரு மனிதன் தேர்ச்சிபெற முடியுமா? அதுபோலவே இயற்கை விஷயங்களில் காட்டுமிராண்டிக் காலமுதல் கர்ண பரம்பரையாக கேட்டுவந்த சேதியையே சொல்லிக்கொண்டு அதையே போதித்துவந்தால் அதன் மூலம் எப்படி இயற்கை அறிவு ஏற்படுத்தமுடியும்?

பிள்ளைகளுக்கு சுதந்திர ஞானம் பரவச்செய்யும் கல்விக்காக சில தப்புகள் செய்யவேண்டிவந்தாலும் அனுமதிக்கத்தான் வேண்டும். ஆனால் அத்தப்பிதத்தை அனுமதிக்கும் முறையில் வேண்டுமானால் நாம் சற்று ஜாக்கிரதையில் இருந்து அந்தப் பித்தத்தினால் ஏற்பட்ட பயனைக்கொண்டு பிரத்திட்ச அனுபவ அறிவுபெறத் தகுதியாக்கவேண்டும். உபாத்தியாயர்களின் புத்திசாலித்தனத்தை இங்குதான் பார்க்கவேண்டுமேயொழிய எதிரொலிபோல் கூப்பாடுபோட்டு உருப்போடவும் கண்மூடித்தனமாய் விஷயங்களைப் பதியவைக்கவும் சிறிதும் இடம் கொடுக்கக்கூடாது.”

ஆகவே நமது கல்வியின் ஜீவநாடி எல்லாம் லக்ஷியத்திலும் போதனு முறையிலும் தான் இருக்கின்றது. உபாத்தியாயர்கள் பகுத்தறிவாளர்களாய் இருக்கவேண்டும். அறிவின் முடிவின்படி நடப்பவர்களாய் இருக்கவேண்டும்.

பிரார்த்தனை.

இன்று இங்கு இந்த விழா துவக்கப்படும் முன் நிகழ்ச்சி குறிப்பில் குறிப்பிட்டிருந்த பிரார்த்தனை என்னும்பேரால் ஒரு பொய்நடிப்பு நடிக்கப்பட்டதானது உங்களுக்குத்தெரியும். பிரார்த்தனை என்று தலைவர் சொன்னவுடன் சில பிள்ளைகள் வந்தார்கள் கைகட்டினார்கள் கண்களை மூடிக்கொண்டார்கள் ‘ஜனகணமன ....’ என்று எதையோ சொன்னார்கள். அதுபோலவே சிலபெண்கள்வந்தார்கள் கைகட்டினார்கள். கண்மூடினார்கள் ஏதோ பாஷையில் எதையோ சொன்னார்கள் இதற்கு பெயர் பிரார்த்தனையாம் இது பக்திக்காக செய்யப்படுவதாம், மேலும் இது கடவுளுக்கு ஆகவாம். நண்பர்களே! இதில் எதாவது அறிவோ நாணயமோ இருக்கின்றதா? என்பதை நிதானமாய், பொறுமையாய் யோசித்துப்பாருங்கள். தயவு செய்து ஆத்திரப்படாதீர்கள்.

கடவுள் என்பதும் பக்தி என்பதும் பிரார்த்தனை என்பதும் எவ்வளவு முக்கியமானதாகவும் உண்மையானதாகவும் இருக்கவேண்டுமென்று சொல்லுகின்றீர்களோ அந்தக்குணம் எல்லாம் மேற்குறிப்பிட்ட இந்த பிரார்த்தனையில் இருந்ததா? பாருங்கள். சாதாரணமாக கிராமபோனுக்கு உள்ள அறிவு போன்ற சிறுவர்கள் அவர்களுக்கும் அவர்களுக்கு இந்த பிரார்த்தனைப் பாட்டு சொல்லிக்கொடுத்தவர்களுக்கும் புரியாத ஒருபாட்டை இந்த சபையில் உள்ள சுமார் ஒரு ஆயிரம் பேருக்கும் புரியாத பாஷையில் நாடகத்தில் நடிப்பதுபோல் வந்து சொல்லிவிட்டுபோவது என்றால் இதற்கு சமயாக எதைசொல்லுவது?

அநேகமாக நமது பிரார்த்தனைகள் என்பதெல்லாம் புரியாதபாஷை புரியாத சொற்கள், புரியாத கருத்துக்கள் கொண்ட பாடல்களாகவும் வாக்கியங்களாகவும் இருக்கின்றனவே தவிர பக்தி என்பதற்கு பொருத்தமானதாய் இருக்கின்றதா? பாருங்கள். எந்த பக்தி பாட்டும் சங்கீத பிரதானியத்திலும், இலக்கண இலக்கிய பிரதானியத்திலும், வேஷடபிரதானியத்திலும் சடங்குப்பிரதானியத்திலும், இருக்கின்றதேதவிர உண்மைபிரதானியத்தில் சிறிதாவது இருக்கின்றதா? பாருங்கள். இந்த மாதிரிவேஷமுறையில் இவ்வளவு சிறு குழந்தைப்பருவத்தில் இருந்தே புகுத்தப்பட்ட இந்தபக்திக்கு எதாவது ஒருதுரும்பளவு யோக்கியதையாவது இவர்களது பிற்கால வாழ்வில் உண்டாகிறதா என்று யோசித்துப்பாருங்கள்.

மற்றும் இதிலிருந்து அக்குழந்தைகளுக்கு ஒரு பித்தலாட்டத்தையும் நாணயக்குறைவையும் பக்தி என்னும்பேரால் புகட்டினவர்களானோமா? இல்லையா? என்று யோசித்துப்பாருங்கள்.

பெண்கள்.

அன்றியும் இந்தமாதிரியான மதம கலந்தகல்வியானாலும்சேஷத்தன்மையானாலும் நமதுபெண்கள்நிலையும் மிகவும் மோசமாகிவிடுகின்றது. அவர்கள் மதத்தையும் பக்தியையும் வாழ்க்கையில் பிரமாதப்படுத்தி அதனால் பெண்சமூகம் முன்னேறவே மார்க்கம் இல்லாமல் செய்துகொள்ளுகின்றார்கள். பெண்களை இன்றையதினம் ஒருஉபாத்தியாயராகவாவது இருக்கக்கூடிய நிலைக்கு கொண்டுவந்தது மதமும் பக்தியும் அல்லவே அல்ல. ஆனால் மதமும் பக்தியுந்தான் அவர்களை இதுவரை அடிமைகளாக்கி வைத்திருந்தது. அவையெல்லாம் மாறி அவர்களுக்கு சிறிதளவாவது சுதந்திரமேற்படக் காரணம் மதத்தை அலட்சியம் செய்து செய்யப்பட்ட சீர்திருத்த பகுத்தறிவு உணர்ச்சியல்லவா? அப்படிப்பட்ட பெண்மக்கள் இப்போது சிறிது விடுதலை பெற்று உபாத்தியாயரான பிறகு தங்கள் அடிமைத்தனத்திற்கு காரணமாய் இருந்த மதத்தை பிள்ளைகளுக்கு கல்வியுடன் புகுத்துவார்களானால் அவர்களை மத சம்பிரதாயத்தில் ஈடுபடுத்துவார்களேயானல் இவர்களிடம் நமது பிள்ளைகளை ஒப்புவிக்கலாமா? என்பது பயமாகவே இருக்கின்றது.

இப்பெண்கள் கண்மூடித்தனமாய் மதத்தில் ஆழ்ந்து கல்வியோடு அதை கலக்கி குழப்புவதிலிருந்து அவர்கள் மறுபடியும் அடிப்படவும், சட்டிசாண்டவுமான உலகத்திற்கு போக ஆசைப்படுகின்றார்கள் என்றுதான் விளங்குகின்றது. இனி பிள்ளைகளுக்கு கல்வி போதிக்கும் வேலை முழுவதும் பெண்களுக்கே கொடுக்க வேண்டும் என்று எண்ணிய என்போன்றவர்கள், மனதெல்லாம் பெண் உபாத்தியாயர்கள் நிலைமையைப்பார்த்த பிறகு மனம் பயப்படுகின்றது.

ஆகவே, பெண் உபாத்தியாயர்கள் பகுத்தறிவுக்கு மதிப்பு கொடுக்கவேண்டுமேயொழிய ஆண் உபாத்தியாயர்களை பின்பற்றக்கூடாது என்று கேட்டுக்கொள்ளுகிறோம். இல்லாதவரை தங்களைப்பழயதொழிலுக்காவதுபோய்விடவேண்டும். குழந்தைகளை கெடுத்து விடக்கூடாது என்றும் கேட்டுக்கொள்ளுகின்றேன்.

தேசீயம்.

தவிர இந்த லக்ஷ்த்தில் உள்ள கல்வியோடு இப்போது வரவர தேச பக்தி என்பதாக ஒன்று புகட்டப்பட்டு வருகின்றது. இது அறிவு வளர்ச்சிக்கு மற்றொரு ஆபத்தான காரியமாகும். கடவுள் பக்தி, மத பக்தி ஆகியவைகளைப் போலவே இந்த தேச பக்தியும், மனிதனின் அறிவு வளர்ச்சியை நாசமாக்கி விடுகின்றது. அதிலும் நமது நாட்டு தேசபக்தியோ நினைப்பதற்கே பயங்கரமானதாய் இருக்கின்றது. தேசபக்தியும், தேசியமும் பழமையைப்பார்த்துக் கொண்டு பின்னால் போகப்பார்க்கின்றதே தவிர முன்புறம் திரும்பிப்பார்ப்பதில்லை, முற்போக்கில் கவலை கொள்வதில்லை. தேசியத்திற்கும் புதியதுக்கும் ஜென்மப்பகையாய் இருந்து வருகின்றது. தேசியம் என்றாலே பழமை என்றே கருதப்பட்டு விட்டது. புதுமை என்றாலே தேசத்துரோகம் என்றாய் விட்டது.

ஆகவே, கல்வி என்று பேர் வைத்து அதன் சாக்கில் மதத்தை போதித்து தேசியம் என்ற உணர்ச்சியையும் அதன் மூலமாகவே ஏற்றிவிட்டால் குரங்குக்கு கள்வார்த்தது போல் தான் ஆகுமே தவிர அறிவு பகுத்தறிவுக்கும், ஆராய்ச்சிக்கும், முற்போக்குக்கும், சுதந்திரத்துக்கும் இடமே இல்லாமல் போய்விடும். இந்தக் காரணம் தான் உலகத்தில் இந்தியாவுக்கு மாத்திரம் கீழ்படியில் முதல் ஸ்தானம் கிடைத்திருக்கின்றது.

முடிவுரை.

ஆகவே, கல்வி கற்பிப்பதைவிட கல்வியின் லக்ஷியத்தையும், போதனையின் தன்மையையும் மாற்ற வேண்டியது இந்தியாவுக்கு மிகவும் அவசியமானதாகும், என்பதே எனது அபிப்பிராயம். நண்பர்களே! ஏதோ கல்வி என்னும் தலைப்பின் கீழ் எனக்குப்பட்ட, நான் சரியென்று கருதிய சில விஷயங்களை தங்களுக்கு விண்ணப்பித்துக் கொண்டேன். இவற்றை நன்றாய் ஆலோசிபார்க்கவேண்டுமாயும், அதாவது சரி என்று பட்டால் மாத்திரம் எடுத்துக்கொள்ளும் படியாகவும் தப்பாயிருந்தால் தயவுசெய்து உடனே மறந்து விடுங்கள் என்றும் கேட்டுக்கொள்ளுகின்றேன்.

(தலைவர் திரு இராமநாதன் முடிவுரை அடுத்தவாரம் வெளிவரும்)

பொதுக் கூட்டம்.

27 9 31 ஞாயிற்றுக் கிழமை மாலை 5-மணிக்கு சென்னை புத்த சங்கத்தில் திரு. பி. எல். நரசு அவர்கள் தலைமையில ஒரு கூட்டம் நடைபெறும அதுசமயம் திரு. கே. ஆர். சாமி அவர்கள் பைபிள் என்பதுபற்றி பேசுவாரென ஒரு நிருபர் எழுதுகிறார்.

பெண் தேவை.

கவர்ன்மெண்ட் உத்தியோகத்தில் மாதம 65-ரூபாய் சம்பாதிப்பவரும், நாயுடு வகுப்பைச்சேர்ந்தவரும், கலியாணமாகாதவரும 25 வயதுடையவருமான ஒரு வாலிபருக்கு, நல்ல கல்வியறிவும, அழகும், சொல்ப ஆஸ்தியும் உடைய ஒரு பெண் தேவை. பெண் 20-வயதும் அதற்குட்பட்டவராயும் இருக்கவேண்டும். எக்குலமாயினும் விதவையாயினும் சம்மதமே. கடிதங்கள் ரகசியமாக வைக்கப்படும்.

திருமணம 'சுயமரியாதை' முறையில் நடைபெறும்.

K. P. C/o குடி அரசு

தமிழ்நாட்டு மாதர் மகாநாடு.

நிறைவேறிய தீர்மானங்கள்.

ஈரோட்டில் 11, 12, 13-9-31 தேதிகளில் நடைபெற்ற நவஜவான் பாரதசபை மகாநாட்டின் ஆதரவில் நடைபெற்ற மாதர் மகாநாட்டின் தீர்மானங்கள்:—

1. பூர்ண ஸ்வராஜியமே இந்தியாவின் முடிவான லட்சியமென்பதையும், பூரண விடுதலையின் சாராம்சத்தை அடையுமுன் இந்தியர்கள் திருப்தி அடைய முடியாதென்றும் இம்மகாநாடு நினைக்கிறது.

2. மஹாத்மா காந்தியடிகளிடம் இம்மகாநாடு பரிபூரண நம்பிக்கை வைத்திருக்கிறது. வட்டமேஜை மகாநாட்டில் அவர் வெற்றி பெற வேண்டுமெனக் கோருகிறது.

3. இம்மாகாணத்திலுள்ள எல்லா சிறுமிகளுக்கும் கட்டாய இலவச ஆரம்பக்கல்வியை அரசாங்கம் கொடுக்கவேண்டுமென இம்மகாநாடு தீர்மானிக்கிறது.

4. எல்லாப்பள்ளிகளிலும், கைத்தொழில் பயிற்சி கொடுக்க வசதியை உண்டாக்கவேண்டுமென்றும், ஒவ்வொருவரையும் நூல் நூற்கவும் கதர் உடுத்தச்செய்யவும் தீர்மானிக்கிறது.

5. ஒவ்வொரு பெண் பாடசாலையிலும் தேகப்பயிற்சி கொடுக்கப்படவேண்டுமென்றும் ஒவ்வொரு பெண்ணும் தற்காப்பு முறைகளில் பயிற்றுவிக்கப்பட வேண்டுமென்றும் தீர்மானிக்கிறது.

6. சாரதா சட்டத்தை நடைமுறையில் கொணரவேண்டுமென்று சொல்வதோடுகூட மணமக்கள் இருவருடைய சம்மதமுமில்லாது மணம் புரிவது தப்பு என்பதை இம்மகாநாடு வற்புறுத்துகிறது

7. பலதாரமணத்தை இம்மகாநாடு கண்டிப்பதோடுகூட அதற்கேற்ற பிரசாரத்தை நடத்தவேண்டுமென்றும் தீர்மானிக்கிறது.

8. பெண்களுக்கு சமமான நகரவாழ்வு உரிமையாகிய ஓட்டுரிமையும், சட்ட சபைகளிலும் ஸ்தலஸ்தாபனங்களிலும் அதிகமான பிரதிநிதித்துவமும் கொடுக்கவேண்டுமென இம்மகாநாடு தீர்மானிக்கிறது.

9. ஹிந்துக்களுடைய கோவிலிலுள்ள தேவதாசி அமைப்பு அழித்து அவர்களுக்காகப் பாதுகாப்பு விடுதிகள் ஒவ்வொரு ஜில்லாவின் முக்கிய நகரங்களில் ஏற்படுத்தவேண்டுமெனத் தீர்மானிக்கிறது.

10. சமூக சேவை செய்யும் பெண்களுக்குச்சரியான பயிற்சி தருவதற்கு சரியான சமூகம் கலாநிலையங்கள் ஏற்படுத்த வேண்டுமெனத் தீர்மானிக்கிறது

11. மருத்துவ சிசு சம்ரட்சணை வேலைகளுக்குத்தகுதியான நிலையங்கள் அமைக்கவேண்டுமென்றும் வைத்தியத்தில் தேர்ந்த பெண்மணிகளை அத்தகைய வேலைகளுக்கு வைத்திய இலாகா உத்தியோகஸ்தர்களாக நியமிக்க வேண்டுமென்றும் இம்மகாநாடு தீர்மானிக்கிறது.

12. சிசுக்களுக்குப் பாதகம் விளைவிப்பவர்களை விசாரித்துதண்டிப்பதற்காக ஒவ்வொரு ஜில்லா தலைநகரத்திலும் ஓர் நியாயசபை நிர்மாணிக்க வேண்டுமெனவும், அவைகளில் தகுதிக்சேற்பப்பெண்களும் இடம் பெறவேண்டுமெனவும் இம்மகாநாடு தீர்மானிக்கிறது.

13. அவசியமான இடங்களில், தாய் நாட்டின் விடுதலைக்காகவும் கிராமச்சீர்திருத்தத்திலும், மதுபானத்தையும் அன்னிய ஆடை கடைகளையும் மறியல் செய்வதிலும் லாகிரி வஸ்துக்கள் விற்பனைகளைத்தடை செய்வதிலும் தீண்டாமையை ஒழிப்பதிலும் பெண்களும் ஈடுபட்டு உழைக்கவேண்டுமென்று இம்மகாநாடு தீர்மானிக்கிறது.

14. பெண்களுக்கும் பிதுரார்ஜித சொத்தில் ஆண்களுக்குள்ள சம உரிமையும், புருஷனுடைய சொத்தை அவனுக்குப்பின் அனுபவிக்கும் உரிமையும் கிடைக்கக்கூடியவகையில் ஹிந்து லாவைத் திருத்தி அமைக்கவேண்டுமென்று இம்மகாநாடு வற்புறுத்துகிறது.

15. குடும்பச்செலவுகளிலும் கலியாணத்திலும் அதைப்போன்ற பல விசேஷச்சடங்குகளிலும் பெண்கள் சிக்கனத்தோடு செலவு செய்ய வேண்டுமென இம்மகாநாடு தீர்மானிக்கிறது.

16 சீமைத்துணிகளை அறவே பஹிஷ்கரிக்கவேண்டி, வாரச்சந்தைகளில் மறியல் செய்வது அத்தியாவசியமானதென்றும், பெண்பாலர்களனைவோரும் ஷை சந்தை மறியல்களை ஆங்காங்கு நடத்தத் தூண்டுவதாகவும் இந்த மகாநாடு தீர்மானிக்கிறது.

சாரதா சட்டத்திற்கு அழிவா?

வைதீகர்கள் கூக்குரல்.

காந்தியின் குட்டித்தலைவர்கள் இதற்கென்ன பரிகாரஞ்செய்கிறார்கள்?

இந்திய நாட்டின் கண் வாழும் மக்களே! ‘வைதீகம்’ செய்யும் கொடுமைகளை பிறந்த நாள் முதல் இறக்கும் வரை கண்கூடாகக் காணும் மானிடர்களே! நம்மை ஆதிக்கத்தில் ஆழ்த்திவைத்திருக்கும் கொடுமைகளை கண்ணுற்றும், போதாக்குறைக்குப் பிராமணர்கட்குத் தாசராய் அடிமைகொண்டு சுற்றித்திரியும் தலைவர்களே! காந்தியின் குட்டித்தலைவர்கள் என்று சொல்லி, ஊர் ஊராய் பிரசங்கம் செய்யும் ராஜகோபாலாச்சாரியின் அடிச்சுவட்டை பின்பற்றும் தலைவர்களே! அடியேன் கீழே கொடுக்கும் உரையை நன்றாய்க்கவனித்துசுயமரியாதைக்காரர்கள் சொல்வது உண்மையா-பொய்யா என்று ஆராய்ந்து அதன்பின் வசைப்புராணம் தொடங்குவதை ஆரம்பியுங்கள். கூலிக்கு உண்மையையும், மானத்தையும் விற்கும் பேர்வழிகளைக்கொண்டு, பத்திரிகை நிரப்பவேண்டி, விபாசம் எழுதும் சாம்பிராணிகளே! கவனியுங்கள்! மந்தப்புத்தியை அகற்றி சொந்தப்புத்தியை கொண்டு பார்த்தால் அடியேன் சொல்லுவது உண்மை என்பது நன்கு புலப்படும்; இனி நாம் எடுத்துக்கொண்ட விஷயத்தை ஆராய்வோம்.

தென்னிந்திய நாட்டிலே தஞ்சை, திருச்சினாபள்ளி ஜில்லாக்களின் இந்திய சட்டசபை அங்கத்தினரான திருவாளர் வைதீகம் கிருஷ்ணமாச்சாரியார் இந்தியா சட்டசபையில் சாரதா மசோதாவிற்குபங்கம் விளைவிக்கமுயற்சி செய்து வருவதாகப் பத்திரிகைகள் மூலம் காணக்கிடக்கின்றது; ஐயோ! சிசுமணத்தால் பெண்மணிகள் அல்லற்படுவதை கண்ணுற்பார்த்தவர்கள் அறியக்கூடும், இக்கொடுமைகள் மேற்ஜாதி மக்களென்று பறைசாற்றும் பார்ப்பனர் ஜாதியில் கிடைப்பதைக் கிருஷணமாச்சாரியார் பார்க்கவில்லை? ‘கண்ணிருந்தும் குருடனிடத்தில் படும் கஷ்டம் தெரிந்தும், அதனை மற்றவர்கள், அல்லற்டுவதை கண்டு தக்கவழி கண்டுபிடித்து வெகு ஆண்டுகளாய் அமுலில் கிடந்த மசோதாவை நன்னிலைமைக்குக் கொண்டு வந்த திரு. ஹரிவிலாஸ சாரதா அவர்கள் செய்த சாரதா சட்டத்திற்கு அழிவுதேட புறப்பட்ட வைதீகப்பித்தரே! பார்ப்பனர் ஏஜண்டே! நமது ஆசாரப்படி செய்யாது, சட்டசபையில் மெம்பராக வீற்றிருக்கும் மமதைகொண்ட வைதீகரே! எமது ஆர்பாட்டம் எத்தனை நாளைக்கு நடைபெறும், அதோடு நில்லாது, நமது கோஷ்டிகளையும் தூண்டிவிட்டு, ஊர் ஊராகப் பிரசங்கம் புரியச்சொல்லி சாரதா சட்டத்தை அழிக்கப்பார்ப்பது உங்கட்கு சுத்த ருமமா? தான் தான் உயர்குலத்தில் உதித்தோமென்ற சொல்லிற்குப் பயனோ? என்னவிந்தை! என்ன கொடுமை!! பார்ப்பனர்களே! முப்பத்துமுக்கோடி இந்திய மக்களில் சிலராகிய தாங்கள் யாவரையும் அடக்கி ஆள எத்தனித்த காலம்மலையேறிப்போய்விட்டது, ஜெகசால புரட்டு மாய்ந்ததென்பதை அறியுங்கள். புத்துணர்ச்சி பெற்ற மக்களுண்டென்பதை நன்கு நிதானப் புத்தியுடனிருந்து யோஜித்து நாங்கள் சொல்வது உண்மை என்பதை அறிந்து கொள்ளுங்கள்.

நாங்கள்தான் தேசத்தலைவர்கள், சுயராஜ்யமின்றி வாழ்வது கூடாதென்று பறைசாற்றும் தொண்டர்களே, சாரதா சட்டம் குலைய கெடுக்கும் பார்ப்பனர்களை என்ன செய்தீர்கள், பத்திரிகைகளில் பாரத நாட்டிற்குப் பாடுபடுவதாக வரைந்துகொண்டு, அங்கு நடக்கும் கொடுமைகளை கவனஞ்செலுத்தாது- கூலிக்கு ஆசிரியராய் அமர்ந்து ‘பத்திராதிபர்’ என்ற மமதையால் எழுதிவிட்டால் போதுமா? புத்தியின்றி வாழும் மானிடர்கள் போன்று போக்கு இடம் கொடுத்து, பார்ப்பனர்கள் செய்யும் சாரதா மசோதாவிற்குத் தடைசெய்யும் திரு. கிருஷ்ணமாச்சாரியார் கூட்டத்திற்குத் தக்க சவுக்கடிகொடுக்கவேண்டாமா? அப்படிக்கில்லாது நான்தான் காந்தியின் குட்டித்தலைவர், என்சொற்படிதான் நடக்கவேண்டும், தேசமே எனது ஆட்சி, ஆங்கிலேயர் இந்நாட்டை விட்டு ஓடவேண்டும், சுயராஜ்யம் எங்கள் கையில் விரைவில் ஒப்படைக்க வேண்டும், இல்லாவிட்டால் லண்டன் சென்று போராடுவோம், என்றெல்லாம் மோ சொல்லும் எந்தாய் நாட்டில் வாழும் தேசபக்தர்களே! காந்தியின் பேரைச் சொல்லிக் கொண்டு, நகர்நாராய் பணஞ்சே

திருச்சி ஜில்லா காட்டுப்புத்தூர் தாழ்த்தப்பட்டவர்கள்

சுயமரியாதை மகாநாடு.

12—9—31௳ சனிக்கிழமை காட்டுப்புத்தூர் தாழ்த்தப்பட்டவர்களின் முதலாவது சுயமரியாதை மகாநாடு கூடிற்று. ஷெயூர் யூனியன் போர்டு தலைவர் ஜனாப் அப்துல் ரஹிமான் சாஹிப் அவர்களைத் தலைமை வகிக்கும்படி திரு. பிச்சைக்கார மூப்பனார் அவர்களால் பிரேரபிக்கப்பட்டு திரு. வேம்படி மூப்பனார் அவர்களால் ஆமோதிக்கப்பட்டு தலைவர் ஜனாப் அப்துல் ரஹிமான் சாஹிப் அவர்கள் அக்கிராசனம் அமர்ந்தார். தலைவர் கட்டளைப்படி சேலம் ஜில்லா துறையூர் திரு. ஆர். வரதப்பன் அவர்கள் எழுந்து தீண்டாமை, சுயராஜ்யம் என்பதுபற்றி பேசும்பொழுது தீண்டாமை என்பது சுயநலம் பிடித்த பார்ப்பனர்களால் உண்டாக்கப்பட்ட அக்கிரமக் கொள்கை யென்றும், தீண்டாமையொழிந்தால் பார்ப்பனர்கள் ஒரு வேலையும் செய்யாமல் பெருந் தொந்தியை வளர்க்க முடியாதென்றும், இயற்கைப் பகைகொண்ட பார்ப்பனர்கள் சமயம் நேரும்போதெல்லாம் கடவுளின் அவதாரமென்று ஒரு சாமர்த்தியத் தந்திரங் கற்ற மனிதனுக்குப் பட்டஞ்சூட்டி ஏமாற்றிவருகிறபடி இப்பொழுதும் தங்கள் ஆதிக்கத்திற்கு அனுகூலமான வருணாச்சிரமப் பித்து ஏறிய ஒருவரை மகாத்மாவென்றும், கடவுளின் 11-வது அவதாரமென்றும், கற்பனைக்கதைகட்டி ராமராஜ்யம் வாங்கிவர லண்டனுக்கு அனுப்பியிருக்கிறார்கள் என்றும், ராமராஜ்யம் வந்தால் பார்ப்பனர்கள் கொழுத்தும், மற்றவர்கள் பார்ப்பனர்களின் அடிமைகளாகவும் வாழவேண்டி ஏற்படுமென்றும் ஆனால் சுயமரியாதைத் தேடும் இக்காலத்தில் அதுவெல்லாம் செல்லாது என்றும் கேட்போர் மனமுருகப் பேசி முடித்தார்.

பின், சேலஞ்ஜில்லா கோக்கலை திரு. எஸ். மாரிமுத்து அவர்கள் ஆதிதிராவிடர் முன்னேற்றம் என்பதுபற்றிப் பேசும்பொழுது தாழ்த்தப்பட்ட மக்கள் ஜாதி ஆணவம்பிடித்த இந்துமதத்தில் இருக்கும்வரையில் திரு.காந்தியும் அவரது சிஷ்யர்களும் வருணாசிரம அதர்மத்தைச் சொலிக்கொண்டே இருப்பார்களென்றும் ஆதலால் நாம் இஸ்லாம் மதத்தில் சேரவேண்டுமென்றும் பேசினார்.

திரு. நடராஜபிள்ளை அவர்கள் பேசுகையில் ஸ்தல ஸ்தாபன ஆட்சியும் பார்ப்பனர்கள் அக்கிரமமும் என்பதுபற்றி தெளிவாய் விளக்கினார்.

கனம் அக்கிராசனரவர்கள் எழுந்து முடிவுரை கூறும்போது நிகழ்த்திய சொற்பொழிவாவது:

கனவான்களே! இப்போது நமது நாட்டில் வருணாச்சிரமப் பித்துக்கொண்ட திரு.காந்தியும், அவரது சிஷ்யர்களும் பூரண சுயராஜ்யம் கேட்பது சுயநலம் பிடித்த பார்ப்பனர்களின் நன்மைக்காகவே யென்றும், இவர்கள் கைக்கு அவர்கள் கேட்கும் சுயராஜியம் வந்தால் சுயமரியாதை இழந்துகிடக்கும் முஸ்லீம்கள், 'சூத்திரர்கள்,' 'தீண்டாதார்' முதலியவர்களுக்கு அதிக நெருக்கடி ஏற்படும் ஆதலால் அவர்களது சுயராஜியம் வருவதற்கு முன் சமூக விடுதலையாகிய சுயமரியாதையைப் பெற்றுக்கொள்ள வழி தேடவேண்டுமென்றும், அதற்கு இதுபோன்ற மகாநாடுகள் சிறந்த கருவியென்றும் காந்தி யென்பவர் இந்தியாவிலுள்ள வைதீகர்களுக்கு ஆதிக்கமும், மற்றவர்களுக்குப் பாதகமும் தேடிக்கொண்டு வருகிறார் என்றும், இப்போது காந்தி வட்டமேஜை மகாநாட்டிற்கு ராமராஜியம் வாங்கிவரச் செல்வது, பிராமணர்களின் தரகர் என்ற முறையில செல்லுகிறாரே தவிர ஏழைமக்களின் நன்மையை நாடிப்போவதாக நினைக்கக்கூடாதென்றும் காங்கிரஸ், கதர், காந்தி, சுயராஜியம் என்பது பார்ப்பனர்களும், அவரது சிஷ்யர்களுக்கும் அடிமைகளுக்கும் வயிறுவளர்க்க ஏற்பட்ட ஒரு போலி இயக்கமென்று திட்டமாகச்சொல்வேன் என்றும், சிறு தொகையினர்களுக்குக் தனித் தொகுதி முறையில் திரு. காந்தியும் அவரது சீடர்களும் மண்ணைப்போட நினைப்பது சுயநல வெறியின் மகத்துவம் என்றும் நமது வகுப்புப் பிரிவினைகள் ஒழியும்வரை நாம் தனித் தொகுதிக்குப் பாடுபட வேண்டுமென்றும் இதற்கு சுயமரியாதை இயக்கமே சிறந்த மார்க்கமென்றும், சுயமரியாதை இயக்கத்தலைவர்கள் திரு. இராமசாமியார் முதலிய தலைவர்களுக்கு நன்றி செலுத்தவதோடு குடிஅரசு, சண்டமாருதம், குமரன், தமிழன், புதுவை முரசு முதலிய பத்திரிகைகளையும் ஆதரிக்கவேண்டுமென்றும் இனிமையாகவும் புதிய உணர்ச்சி உண்டாகும்படியாகவும் கேட்போர் மனமுருகப் பேசிமுடித்தார்.

தீர்மானங்கள்:

1. தஞ்சைஜில்லா ஆதிதிராவிடர்களின் வீடுகள் தீக்கிரையாகி சொத்துக்களை நஷ்டம் செய்த காங்கிரஸ் காரர்களின் செய்கையை இந்தக்கூட்டம் கண்டிக்கிறது.

2. சுயமரியாதை வாலிபகமிட்டித்தேர்ந்தெடுக்கத்தீர்மானம்.

3. இந்துக்களுக்குத்தலைவர், பிரதிநிதி காந்தி ஒருவரே என்றிருப்பதை நாங்கள் கண்டிப்பதோடு, ஆதிதிராவிடர்கள் என்பவராகிய எங்களை தனியாகப் பிரித்துவிடுமாறும், எங்களுக்குத் தனித்தொகுதியே அவசியம் என்றும் இக்கூட்டம் தீர்மானிக்கிறது

பின் திருவேப்படி மூப்பனாரவர்களால் தலைவரவர்களுக்கு மாலை சூட்டப்பெற்று வந்தனோபசாரத்துடன் 'காந்தீயம் ஒழிக! ராமராஜியம் அழிக!! சுயமரியாதைக்கு ஜே!! இராமசாமிக்கு ஜே!!! தலைவர் ஜனாப் அப்துல் ரஹிமான் சாகிப் அவர்களுக்கு ஜே!!!! என்றகோஷத்துடன் கூட்டம் இனிதுமுடிவுபெற்றது.

கரித்து அதற்குத் தலைவர் நாமதாரனென்று சுற்றித்திரியும் மணிகளே! உலகமக்கட்கு அதாவது சிசுக்கட்கு உபசாரமாய் நடைமுறையில் இருந்துவரும் பசோதாவிற்கு உலைவைக்கப் பார்க்கிறீர்களே இதற்கென்ன தேசத்தலைவர்கள் செய்கிறார்களென்பதே எமது கேள்வியன்றோ! இதற்கும் ஒன்றும் பரிகாரம் தேடாது மௌனஞ் சாதிப்பது தேசத்துரோகமில்லையா? பார்ப்பனர் அடிமைத்தனத்தில் சிக்கி வாழும் பார்ப்பனரல்லாத தேசபக்தர்களே! சுயமரியாதைக் காரனாகிய எம்மைக் கண்டு நீங்கள் ஆத்திரப்படலாம், பத்திரிகை முழுதும் எழுதலாம், ஆனால், நாங்கள் உண்மையை உள்ளபடியே சொல்வோம், தக்கவிடை அளித்தாலும் பதிலுரை கொடுக்கவும் தயாரென்பதை சித்தத்துடன் தெரிவித்துள்ளேன்.

பார்ப்பனரல்லாத வாலிபர்களே! சுயமரியாதைத் தலைவர்களே! வாலிபர்களே! சட்டசபையில் கொண்டுபோகத் தயாராயிருக்கும் திரு. கிருஷ்ணமாச்சாரியாரின் இளம் மணஞ்செய்துகொள்ளலாமென்று தகக முகாந்திரத்துடன்சொல்லும் திட்டத்திற்குப் பயனளிக்காது பாடுபட முன்வாருங்கள், பார்ப்போம், பார்ப்போம், பார்ப்பனர்கள் அட்டகாசத்தைப் பார்ப்போம், பாரினில் தலை எடுக்காது ஆழ்த்தி வைப்போம், இனியும் விட்டுக்கொடுக்காது தலைகுனியும்படி செய்ய வேண்டுமாய் சுயமரியாதை வீரர்களை கேட்டுக்கொண்டு எனது கட்டுரையை முடித்துக்கொள்ளுகிறேன்.

வைதீகம் வீழ்க!

சாரதா சட்டம் நிலை பெறுக!

சுயமரியாதைத் தொண்டன்.

பரோடாவில் கல்யாண ரத்து.

இனியாவது புத்திவருமா?

பரோடா சமஸ்தானத்தில் பெண்கள் கல்யாண ரத்துக்கு அதாவது கல்யாணம் செய்து கொண்ட தம்பதிகள் தங்களுக்குள் ஒத்துவாராத பக்ஷத்தில் கல்யாணத்தை ரத்து செய்து கொள்ளச் சட்டசபையில் ஒரு சட்டம் கொண்டு வந்து நிறைவேற்றிக் கொண்ட சங்கதி யாவருமறிந்ததேயாகும்.

இப்போது அச்சட்டம் அமுலில் வருவதற்குமகாராஜா உத்திரவு கொடுத்து விட்டார். ஆனதால் இந்தவாரம் முதற்கொண்டு அமுலுக்கு வந்து விட்டது. நமது இந்திய சட்டசபை அங்கத்தினர்களுக்கு இனியாவது புத்தி வருமா? விசாலாக்ஷி.

முத்துப்பேட்டையில் காலரா.

முத்துப் பேட்டையிலும் அதைச்சுற்றியுள்ள தம்பிக்கோட்டை, சுந்தரம், ஜாம்புவானோடை முதலிய கிராமங்களிலும் வாந்திபேதி அதிதீவிரமாய் பரவிவருகிறது.

முதல் முதல் திருப்பாலக்குடியிலிருந்து திரும்பியவர் மூலம் பரவியதாய் தெரிகிறது.

ஆற்று நீரைப்பருகுவதால் அதிகம் உண்டாவதாய் நம்பப்படுகிறது.

முத்துப்பேட்டையில் உற்சவம் நடந்து கொண்டிருப்பதால் அதிகம் பரவுவதற்கு ஹேதுவுண்டாயிருக்கிறது. ஆனதால்சுகாதார அதிகாரிகள் கவனிப்பார்களாக, என ஒரு நிருபர் எழுதுகிறார்.

ஜா முத்தையா
லக அறக்கட்டளை

விருதுநகர்

சேந்திக்குமார்—மீனாக்ஷி பெண் பாடசாலை கல் நாட்டுவிழா.

விருதுநகர் சுயமரியாதை இயக்கத்தலைவரும், பிரபல வியாபாரியுமான திரு எம். எஸ். பி. செந்திக்குமாரர் அவர்கள் முனிசிபாலிடியின் சார்பாக ஆரம்பிக்கப்போகும் பெண்பாடசாலை கல் நாட்டுவிழா 13 9-31ந் தேதி ஜில்லாக்கலெக்டர் எச். ஸீ. ஷீல்டு துரை அவர்களால் நடத்தப்பட்டது. அதுசமயம் சிவகாசி சப்கலெக்டர் திரு பி. எஸ். ராமசாமி அய்யர் ஐ. சி. எஸ்., அவர்களும் வந்திருந்தார்கள்

பிரிவுபசாரப்பத்திரம்.

சிவகாசி சப்கலெக்டர் திரு பி. எஸ் ராமசாமி அய்யர் சிவகாசி டிவிஷனை விட்டு மாறிச்செல்வதை முன்னிட்டு விருதுநகர் பொது ஜனங்களின் சார்பாக திரு வி. வி. இராமசாமி அவர்கள் பிரிவுபசாரப்பத்திரம் ஒன்று ஆங்கிலத்தில் வாசித்துக்கொடுத்தார். அதற்கு சப்கலெக்டர் அவர்கள் பதிலளித்தபின் மத்தியான விருந்துடன் கூட்டம் கலைந்தது.

மாலைவிருந்து,

அன்று மாலை 5-மணிக்கு திரு செந்திக்குமாரர் அவர்கள் தனது இல்லத்தில் ஜில்லாக்கலெக்டர் ஷீல்டு துரை அவர்களுக்கு ஒரு தேனீர்விருந்து நடத்திவைத்தார். அதற்கு சப்கலெக்டர் திரு பி. எஸ். ராமசாமி அய்யர் உட்பட சுமார் 200 உத்தியோகஸ்தர்கள்வரை விஜயம் செய்திருந்தார்களென ஒருநிருபர் அறிவிக்கிறார்.

காரைக்கால்.

சுயமரியாதைத் திருமணம்.

காரைக்கால் சலவைத் தொழிலாளர் திரு. நடேசன் அவர்கள் குமாரர் திரு. லக்ஷமணன் அவர்களுக்கும், தேரிழந்தூர் திரு. நடேசன் அவர்கள் குமாரத்தி திருமதி தனபாக்கியம் அவர்களுக்கும் காரைக்கால் தேச ஊழியர் சங்கத்தலைவர் திரு. சிவசுப்பிரமணியர் அவர்கள் தலைமையில் தாங்கை சலவைத்தொழிலாளர் சங்கத்தலைவர் திரு. எ. எஸ். நாராயணசாமி அவர்களால் 14-9-31ல் எவ்வித அர்த்தமற்ற சடங்குகளின்றி சுத்த சுயமரியாதை முறையில் நடத்திவைக்கப்பட்டதென ஒருநிருபர் எழுதுகிறார்.

குறிப்பு:— இத்திருமணத்தை முன்னிட்டு மணமக்களால் நமக்கு அனுப்பப்பட்ட நன்கொடை ரூபாய் ஒன்று வரப்பெற்றோம். ப-ர்.

நத்தம் முஸ்லீம் சங்கம்

அபிராமம்.

16-9-31ந் தேதி மாலை 4-30 மணிக்கு நமது நத்தம் முஸ்லீம் சங்க ஹாலில் ஆலி ஜனப் வி. மீ. அப்துல் ரஹ்மான் அம்பலம் (மர்ஹூம்) அவர்கள் பேரால் கத்தம் ஓதி பேரீச்சம்பழம் வழங்கப்பட்டது என காரியதரிசி எழுதுகிறார்.

சீர்திருத்த திருமணம்.

விருதுநகர் திரு வைத்திலிங்க நாடார் குமாரர் அருணாசலம் அவர்களுக்கும் திரு பொன்னப்பநாடார் அவர்கள் குமாரத்தி திருமதி சின்னத்தாய் அம்மாளுக்கும் சீர்திருத்த முறையில் திரு வி. வி. இராமசாமி அவர்களால் 14-9-31 தேதி நடத்திவைக்கப்பட்டது எனஒரு நிருபர் எழுதுகிறார்.

முத்துராமலிங்கபுரத்தில் ஜாதி ஆணவத் தாண்டவம்.

இவ்வூரில் சிலநாட்களுக்கு முன் காலஞ்சென்ற திரு. தாத்தமரெட்டியார் அவர்களின் இறுதிச்சடங்கன்று நடந்த விருந்தில் திரு செல்லமாச்சாரி என்பவர் கலந்து கொண்டதற்காக இவ்வூரிலுள்ள சிலர் ஷை செல்லமாச்சாரியாரையும் ஆசாரியை கலந்து கொண்டதற்கனுமதித்த காலஞ்சென்ற திரு தாத்தம ரெட்டியார் பந்துக்களையும் வரவழைத்து பல இழிமொழிகளால் துன்புறுத்தி ஒவ்வொருவருக்கும் முறையே ஐந்து ரூபாய் வீதம் அபராதம் விதித்தாரென பகுத்தறிவாளர் எழுதுகிறார்.

வருந்துகிறோம்.

சென்னை மவுண்ட் ரோட்டு போஸ்டுமாஸ்டராயிருந்து உபகாரச்சம்பளம் பெற்று வந்த திரு. எ. கிருஷ்ணசாமி நாயுடு அவர்கள் 12-9-31தேதி காலஞ்சென்றதை அறிந்து மிகவருந்துகிறோம் அன்னாரின் குடும்பத்திற்குநமது அனுதாபத்தைதெரிவித்துகொள்ளுகிறோம். ப-ர்.

மரணம்.

சேலம் ஜில்லா வைச்சேர்ந்த அரூர் எச். வி. வேடிசெட்டியாரின் இளையகுமாரரும் மூன்று மாதத்திற்கு முன் கல்யாணமான 22 வயதுள்ள வி. குஞ்சிதபாதமவர்கள் மூன்று நாள் ஜுரத்தினால் 16-9-31ல் திடீரென உயிர் துரந்தாரென ஒரு நிருபர் எழுதுகிறார்.

கணவன் தேவை.

பெண்ணின் யோக்கியதை;— 16 வயதுள்ள அழகியபெண், தமிழ் நன்றாய் எழுதப்படிக்கத் தெரியும், சங்கீதத்தில் இராகம் பல்லவி பாடக்கூடிய ஞானமுண்டு, நல்ல குணமும் உயர்ந்த நடையும் அளவுக்கு மீறிய ஒழுக்கமும் உடையது- விவாகமில்லாக்கன்னிப்பெண். புருஷனுக்கு இருக்கவேண்டிய யோக்கியதை:- வாலிபராகவும், கல்வி அறிவுஉடையவராகவும், தகுந்த செல்வமுடையவராகவும், அழகியதோற்றமும், வியாதிஇல்லாத சரீரமுடையவராகவும் இருக்க வேண்டும். பெண்ணின் தாய் தந்தையர்களுக்கு பெண்ணின் கல்விச்செலவும், சங்கீதம்பயிற்றுவதற்குப்பிடித்த செலவும் கொடுக்கவேண்டியிருக்கும்.

சுயமரியாதை
C/o "குடி அரசு" ஈரோடு.

திருப்பூர் டி. மு. கோர்ட்டு.

O S. No. 1667 of 1930.
E. P. R. No. 1851 of 1931.

பல்லடத்திலிருக்கும் அரு. ராம. வெ. வெள்ளையஞ் செட்டியார் by ஏஜண்டு நாராயண பிள்ளை—வாதி.

ஷை தாலூகா காட்டூர் கிராமம் சின்னக்காட்டூரிலிருந்து இப்போது அண்டாரன்கிலிருக்கும் நல்ல தம்பிக்கவுண்டன் மகன் கருப்பகவுண்டன் 1 ஷையூரில் ஷை 1ம் பிரதிவாதியின் மகன் நாச்சப்ப கவுண்டன் 2—பிரதிவாதிகள்.

இதனால் ஷை பிரதிவாதிகளுக்குத் தெரிவிப்பதாவது,

ஷை நெம்பர் வாதியானவர் பிரதிவாதிகள் பேரில் ஷை கோர்ட்டில் பெற்றிருக்கும் அடவு ரிக்கிரிப்படி அடவு சொத்துக்களை ஏலத்துக்குக் கொண்டுவந்து இஸ்தியாரில கண்ட சொத்துக்களை விற்பனைக்காக மனு செய்து கொண்டிருப்பதால் ஏதாவது ஆட்க்ஷேபணையிருந்தால் அதை ஷை கோர்ட்டில் 1-10-31 தேதி காலை 11 மணிக்கு ஆஜராகி தெரிவித்துக் கொள்ளவேண்டியது. தவறினால் ஒரு கட்சியாய் உத்திரவு ஏற்படுமென்பதை அறியவும்.

திருப்பூர், 19—9—31. S. ராஜம் அய்யர், வாதி வக்கீல்.

சத்தியாக்கிரகமா? சண்டித்தனமா?

மேற்கண்ட 6-9-31ந் தேதி குடி அரசில் வெளியான "சத்தியாக்கிரகமா சண்டித்தனமா" என்ற தலையங்கத்தை புத்தகருபமாக வெளியிட்டிருக்கிறோம். இதை வினியோகிக்க விருப்புள்ள சுயமரியாதை அன்பர்கள் முன் பணமனுப்பிப் பெற்றுக்கொள்ள வேண்டுகிறோம்.

100 புஸ்தகம் விலை 0-12-0

1 ரூ. ஸ்டாம்பு அனுப்பினால் 100 புஸ்தகம் புக் போஸ்டில் அனுப்பப்படும்

மானேஜர்,
குடி அரசு, ஈரோடு.

மனைவி தேவை.

மலேயா நாட்டில் வசிக்கும் ஒரு பிரபல கனவானின் வாழ்க்கைத்துணைக்கு ஒரு பெண் தேவை. அக்கனவானின் யோக்கியதைகளாவன:-வயது 55.ஜாதி வேளாளர், யோக்கியதை ஆங்கிலம் கற்றவர். பென்ஷன் மாதம் மாதம் 1-க்கு பல நூறு ரூபாய் வருகின்றது. இதுதவிர மற்றபடியான தகுந்த பெருமையும் சொத்தும் உடையவர். நல்லதிடசரீரமும் அழகிய தோற்றமும் உடையவர். நல்ல குணமும் ஒழுக்கமும் உடையவர்.

பெண்ணுக்கு இருக்கவேண்டிய யோக்கியதைகளாவன வயது 30 முதல் 40க்குட்பட்டதாய் இருக்கவேண்டும். ஜாதி வேளாளர், நாயுடு, ரெட்டி, முதலியார், கவுண்டர், பிள்ளை ஆகிய ஜாதியார்களாய் இருந்தால் நலம். யோக்கியதை-தமிழ் கல்வி கற்றிருந்தால் போதும். தன்மை விதவையானாலும் குற்றமில்லை. நல்ல சரீரக்கட்டுடன் வியாதியில்லாமல் இருத்தல் வேண்டும். இஷ்டமுள்ளவர்கள் முழுவிபரத்துடன் தங்கள் உருவப்படத்துடன் எழுதுக. மலேயா.

C/o "குடி அரசு" ஈரோடு.

பெண்கள் தேவை.

விதவை, ஏழை, யாவரும், எக்குலத்திலும் தெரிவிக்கலாம்.

A. C/o
குடி அரசு, ஈரோடு.

ரோஜா முத்தையா ஆராய்ச்சி நூலக அறக்கட்டளை

(9ம் பக்கத் தொடர்ச்சி)

...டைய குணத்தையும், ஒழுக்கத்தையும் ஆங்கிலக்கல்வி நிர்மூலமாக்கி அவர்களது பழைமையை இழிவுபடுத்துவதாகவுங்கூப்பாடு போடவேண்டியவர்களாகி விட்டார்கள்.

தேசீயம்.

சாதாரணமாகவே தேசியமென்பது இந்நாட்டில் பழமையெல்லாம் மிக மேன்மையானதென்று வானமளாவப்பாராட்டி அவைகள் மறுபடியும் புனருத்தாரணம் செய்யப்படவேணுமென்று சொல்லுவதும் புதுமையெல்லாம் கெட்டது என்று யோசனையில்லாமல் கண்மூடித்தனமாய் கண்டித்து வெறுத்துத்தள்ளுவதுமான காரியங்கள்தான் தேசியமாய் இருந்து வந்தது.

இம்மாதிரியானபழைய மூடப்பழக்கவழக்கங்களை கிருஸ்துவ பாதிரிகள் தாக்கி கண்டிக்க ஆரம்பித்ததில் இருந்து அவை முன்னிலும் அதிகமாக பாராட்டி பிரசாரம் செய்யப்பட்டு இப்போது அவைகளை மக்கள் குரங்குப்பிடியாய் பிடித்துக்கொண்டிருக்கும்படியாக செய்துவிட்டது. சாதாரணமாய் மக்களுக்கு நியாயம் போதித்து நிலைநிறுத்தமுடியாத அனேகவித குருட்டு நம்பிக்கைகளுக்கும், பழக்க வழக்கத்திற்கும் "தத்துவார்த்த"ங்கள் சொல்லி சமாதானம் செய்யப் பார்ப்பதும் அதற்கும் இசையாத விஷயங்களில் போலி சைன்ஸ் பேசிச் சரிப்படுத்தப்பார்க்கும் வேலையில் ஈடுபடவேண்டியவர்களாகி விட்டார்கள். இந்தக்காரணங்களாலேயே பழமை விரும்பிகளான பிடிவாதக்காரர்களும், வைதிகர்களும் மத சம்பந்தமானதும் பழமைகளை ஆதரிக்கும் தேசிய சம்பந்தமானதுமான கல்வியையே புகட்டவேண்டுமென்று கூப்பாடுபோட ஆரம்பித்து வந்தார்கள்.

இக்கூப்பாடுகளின் பயனாகவே வடக்கே பஞ்சாப்மாகாணத்தில் தயானந்தர் ஆங்கிலோவேடிக்காலேஜு—என்பதாக ஒன்றை லாகூரில் தோற்றுவித்தார்கள். பிறகு இந்தக்கொள்கைகளையே அடிப்படையாகக் கொண்டபிர்ம்மஞான சங்கத்தலைவர் திருமதி பெசண்டம்மையாரால் காசியில் செண்ட்ரல் இந்து காலேஜ் என்றதொருகலாசாலையும் முகம்மதிய ஆங்கிலோ ஓரியண்டல் காலேஜ் என்பதாக முகமதியர்களால் அலிகாரில் ஒரு கலாசாலையும் ஏற்படுத்தப்பட்டு இக்கொள்கைப்படி நடைபெற்றுவரத்தொடங்கின. இவை மாத்திரமல்லாமல் புதிய அரசியல் உணர்ச்சி என்பதின் பயனாகவும் பல தேசீயப்பள்ளிக்கூடங்களும் ஏற்படத்தொடங்கின.

மற்றும் விளம்பர மடையாத பல பள்ளிக்கூடங்களும் மத தர்மஸ்தாபனங்களை ஒட்டிய பல பள்ளிக்கூடங்களும் இந்தியாவின் பல பாகங்களில் ஸ்தாபிக்கப்பட்டன. தற்கால கல்வி முறை எப்படியிருந்த போதிலும் அதன் பயன் எப்படி இருந்தாலும் கல்வியோடு கூட மதக்கல்வியும் போதிக்கப்படவேண்டுமென்பது மாத்திரமே அவர்களது முக்கிய நோக்கமாயிருந்தது.

ஆகவே இந்த நிலையில்பொது ஜனங்களிடமிருந்து பள்ளிக்கூடங்களில் மதத்திற்காக வென்று ஒரு தனிவகுப்பு ஏற்படுத்த வேண்டும் என்கின்ற ஒரு தேவை கிளம்பியது. இந்தப்படி ஏற்பட்டதானது கிறிஸ்துவ பாதிரிகள் பள்ளிக்கூடத்தில் நடந்துவந்த நடைமுறைகளுக்கும் கஷ்டம் விளைவிப்பதாய் இருந்தது.

ஏனெனில் அவற்றில் படிக்கும் மாணவர்கள் அனேகமாய் எல்லோரும் கிறிஸ்துவரல்லாதார்களாகவே இருப்பதால் கிறிஸ்துவர்கள் பள்ளிக்கூடங்களில் வேறு மதங்களுக்கு வகுப்புகள் ஏற்படுத்துவது இஷ்டமில்லாத காரியமாயிருந்தது. பாதிரிமார்கள் முதலில் இந்தக் கொள்கையை ஆக்ஷேபித்தார்களாயினும் பிறகு இதற்கு ஒருவாறு இணங்கித்தீரவேண்டியவர்களாகி விட்டார்கள். அதாவது எந்த இடத்திலாவது வேறு பள்ளிக்கூடங்களில்லாமல் தனியாக பாதிரிகள் பள்ளிக்கூடம் மாத்திரம் இருந்தால் அந்த இடங்களில் இந்துமத வகுப்புக்கும் பள்ளிக்கூடம் ஏற்படுத்தவேண்டியதாயிற்று மாண்டேகு செம்ஸ்போர்டு சீர்திருத்தத்தின் பயனாய் கல்வி இலாகா ஜனப்பிரதிநிதி என்கின்ற மந்திரிகளுக்கு மாற்றப்பட்டு விட்டதால் சில சமயங்களில் மதப்படிப்பைப்பற்றி சட்டசபைகளிலும் வாதங்கள் கிளம்ப ஆரம்பித்தன. இதன் பயனாய் பொதுக்கல்வி ஸ்தாபனங்களில் அவரவர்கள் இஷ்டப்பட்டால் மாத்திரம் தனிப்பட்ட கூட்டத்தார்களால் மதக்கல்வி போதிப்பதற்கு இடம் கொடுக்கப்பட்டன. என்றாலும் இந்த சௌகரியத்தை அவர்கள் சரியானபடி உபயோகித்துக் கொண்டதாகத்தெரியவில்லை என்பதோடு அதிகாரிகளாலேயே பள்ளிக்கூடங்களில் மதக்கல்வி போதிக்கவேண்டுமென்றும் சொல்லப்பட்டு விட்டன.

மதக்கல்வி என்றால் என்ன?

ஒருவன் ஆழ்ந்து யோசித்துப்பார்த்தால் மதக்கல்வி என்கின்ற பிரச்சினையே எவ்வளவோ கஷ்டங்களை எதிர்த்து நிற்கவேண்டியவைகளான அர்த்தமற்ற தேசிய வாதிகளின் அளவுக்கு மீறின ஆவேசமேதான் என்பது விளங்கும்.

முதலாவதாக மதசம்பந்தமான கல்வி என்றால் என்ன? கல்விஸ்தாபனங்களில் மாணக்கர்களுக்கு மதக்கல்வியும் கொடுப்பது என்பது சாத்தியமானதா? கொடுக்கலாம் என்றால் எந்தப்பருவத்திலிருந்து எந்த நிலையிலிருந்து மதக்கல்வியை ஆரம்பிப்பது? என்பவைகள் முக்கியமாய் கவனிக்கப்படவேண்டியவைகளாகும்.

வேதாந்த ஞானம் என்று சொல்லப்படும் மத விஷயத்தை 18 வயதுக்கு கீழ்ப்பட்டவர்களுக்கு போதிப்பதானது தகுதியற்றது என்பது யாவராலும் ஒப்புக்கொள்ளக்கூடியதாகும். மத சம்மந்தமான ஏதோ சில விஷயங்களை வேண்டுமானால் சிறு வயதில் சொல்லலாமானாலும் அதுவும் சரியாய் கிரகிக்க அவர்களுக்கு சக்தி போராதகுழந்தைப்பருவ காலத்தில் தான் அதையும் சொல்லவேண்டியிருக்கிறது.

ஒரு குழந்தைக்கு கிராம போன் மாதிரி அர்த்தம் தெரியாது—உண்மையை உணரமுடியாத ஏதோ சில பிரார்த்தனை வார்த்தைகளை மாத்திரம் சப்தஅளவில் வேதம்-கீதைபுராணம்முதலான பக்தி செலுத்தத்தக்க புஸ்தகங்கள் என்பவைகளிலிருந்து சில வற்றை பாடம் செய்யச்செய்யலாம்.

இந்தப்படி வெறும் சப்தத்தை மாத்திரம் தெரிவதில் யாதொரு பலனும் இல்லை என்றும் மற்ற வார்த்தைகளைவிட இதற்கு எவ்வித விசேஷ யோக்கியதையும் இல்லை என்றும் ஒரு முடிவுக்கு வந்த பிறகு இம்மாதிரியான சிறு குழந்தைகள் மூளையில் பலனில்லாமல் பதியவைப்பதினால் ஏற்படும் பலன் என்ன என்பது சுலபத்தில் விளங்கக்கூடியதாய் இல்லை.

மற்றும் ஒரு விதத்தில் மதக்கல்வி என்பதின் நோக்கம் வேதங்களில் பைபிளிலிருந்து சில கதைகள் போதிக்கப்படுவதுபோல் நம் குழந்தைகளுக்கும் புராணங்களில் இருந்தும், ராமயண பாரத முதலிய இதிகாசங்களில் இருந்தும் சில கதைகள் போதிக்கப்படலாம். இந்தக்கதைகளும் பேருக்கு மாத்திரம்தான் புண்ணிய கதைகள் என்று சொல்லப்படுவதாய் இருக்குமே ஒழிய அதன் விஷயங்கள் பெரும்பாலும் பகுத்தறிவுக்கு விரோதமாகவும் மூடநம்பிக்கைக்கு பொக்கிஷமாகவேதான் இருக்கும் என்பதோடு சில சமயங்களில் மனிதர்களின் முற்போக்குக்கு மாறானதுடையதாகவும் இருக்கும். மற்றும் எவ்வளவு மேன்மையான தத்துவம் கொண்டது என்று சொன்னாலும், தெய்வத்தன்மை பொருந்தியது என்று சொல்வதானாலும் அதில் மலிந்து கிடக்கும் இயற்கைக்கு மாறுபட்ட விஷயங்களானது எப்படியும் அக்குழந்தையின் அறிவு வளர்ச்சியை—சிந்தனை சக்தியை கெடுத்தேதீருகின்றன. (தொடரும்)

வாலிப நாடார் ஐக்கிய சங்கம்.

பெருநாழி வாலிப நாடார் ஐக்கிய சங்கத்தின் இரண்டாவது வருடப்பூர்த்திவிழா 27-9-31 ஞாயிற்றுக்கிழமை மாலை 4மணிக்கு இவ்வூர் நாடார் சிங்காரவனத்தில் மதுரை திரு. பா. ம. பாண்டியநாடார் அவர்கள் தலைமையில் நடைபெறும். அவ்வமயம் பல அறிஞர்கள் சொற்பொழிவாற்றுவார்களென ஷை சங்கத்தின் காரியதரிசிகள் அறிவிக்கிறார்கள்.

சுயமரியாதை பிரசாரம்.

திருமங்கலம் தாலூகா சேர்ந்த கட்டாரெட்டி வெட்டி ஆதிதிராவிடச்சேரியில் திரு எம். சொக்கப்பசெட்டியார் அவர்கள் தலைமையில் 12-9-31ந் தேதி சுயமரியாதைக் கூட்டமொன்று நடைபெற்றது. அது சமயம் குன்னத்தூர் திரு என். சங்கய்யா, திரு பி. எஸ். கந்தசாமி, திரு பி. எஸ். சுவாமிதாஸ் ஆகியவர்கள் முறையே பெண்கல்வி, முன்னேற்றம், சுயமரியாதை என்பதுபற்றியும், மறுநாள் (13-9-31) பாப்பிநாயக்கன் பட்டியில் திரு வெள்ளைச்சாமி சேர்வை அவர்கள் தலைமையில் ஷை மூவரும் முறையே, ஜாதிப்பைத்தியம், புராணமூடம், சீர்திருத்தம் என்பதுபற்றி நீண்டசொற்பொழிவாற்றினார்களென ஒரு நிருபர் அறிவிக்கிறார்.

ஆதிதிராவிட மகாஜன சபையின் கிளைச்சங்கம்.

சென்னையைச்சார்ந்த திருவொற்றியூர் தாங்கல் கிராமத்தில் 19-9-31 மாலை 6மணிக்கு சென்னை, ராவ் சாகிப் எம். சி. மதுரைப்பிள்ளை அவர்கள் ஆதிதிராவிட மகாஜன சென்ட்ரல் சபையின் ஆதிதிராவிட வாலிப வாலண்டியர் கிளைச்சங்கமொன்று ஷை தலைவரால் திறந்துவைக்கப்பட்டதென மேற்படி சங்கத்தின் பொதுக்காரியதரிசி அறிவிக்கிறார்.

சுயமரியாதைத்திருமணம்.

இராஜபாளையம் முகம்மதிய மாடல் போர்டு பாடசாலை ஆசிரியர் தோழர் செல்வநாயகம் அவர்களுக்கும், தோழர் செல்வாம்பாள் அவர்களுக்கும் தூத்துக்குடி தோழர் செல்லையா அவர்களின் தலைமையில் 14-9-31காலை சுயமரியாதைத்திருமணம் நடைபெற்றது ஸ்ரீவில்லிபுத்தூர் சுயமரியாதை அன்பர் திரு பால்வண்ணம் அவர்களால் சுயமரியாதைத்திருமணம் என்பதுபற்றி அரிய சொற்பொழிவாற்றப்பட்டதென ஒரு நிருபர் அறிவிக்கிறார்.

முத்துப்பேட்டை.

இவ்வூரில் இந்து—முஸ்லீம்—ஆதிதிராவிடர் மகாநாடு இம்மாத கடைசியில் கூட்டுவதற்கான ஏற்பாடுகள் நடைபெற்று வருகிறதென ஷை மகாநாட்டின் வரவேற்புக்கழகத் தலைவர் அறிவிக்கிறார்.

குடி அரசு புத்தகாலயம்.

கைவல்யம் அல்லது ஞானம். இது கைவல்யசாமியார் கட்டுரைத்தொகுதி. ...	0—8—0
மனு நீதி மருமம் ...	0—2—0
இராமலிங்க சுவாமி பாடல் திரட்டு. ...	0—2—0
சுயமரியாதைத் தாலாட்டு. ...	0—2—0
சோதிடப் புரட்டு. ...	0—2—0
திரு ஈ. வெ ராமசாமியின் சீர்திருத்தமகாநாட்டு சொற்பொழிவு (2-பதிப்பு) ...	0—2—0
சுயமரியாதைப் பாடல்	0—2—0
தர்ம பரீக்ஷை அல்லது புராண ஆபாசம்.	0—3—0
பங்கஜம் அல்லது பார்ப்பனக்கொடுமை	0—4—0
ஞானசூரியன்	0—4—0
இராமாயணத்தின் ஆராய்ச்சி பாலகாண்டம்	0—4—0
ஷை 2-ம் பாகம் அயோத்தியாகாண்டம்	0—8—0
மேயோ கூற்று மெய்யா பொய்யா (2-பதிப்பு)	0—3—0
அகத்தியர் ஆராய்ச்சி ...	0—2—0
கடவுளை நிந்திக்கும் கயவர்கள் யார்? ...	0—2—0
*குறள் ...	0—8—0
* இபற்கைமதம் ...	0—8—0
* சிதம்பர ரகசியம் ...	0—8—0
* சுதந்திரப் போர் அல்லது உப்பள முற்றுகை.	0—4—0
* சுயமரியாதைத்தத்துவகீதங்கள் ...	0—4—0
* பகுத்தறிவே விடுதலை அல்லது ஜீவாத்மா இல்லை—[சித்திரப்படங்களுடன் 100 பக்கங்களுக்கு மேல் கொண்டது] ...	0—6—0
* ஈ. வெ. இராமசாமியின் போட்டோ படம்	0—8—0
* மாதர் சுதந்திரம். ...	0--10--0
* ஆராய்ச்சி அணிகலம்	0--12--0
* சென்னை லோகல் போர்டு ஆக்ட்	2—0—0

* மோட்டார்கார் இயந்திரசாஸ்திரமும் அதன் அனுபோகப் பயிர்ச்சியும் 50படங்களுடன் 200 பக்கங்களடங்கிய பெரிய புத்தகம் விலை ரூ. 2—0—0. ஆர்டருடன் 4 அணா ஸ்டாம்பு அனுப்பவேண்டும்.

* இந்தப்புள்ளி உள்ளபுத்தகங்கள் விற்பனைக்காக நமக்கு அனுப்பப்பட்டவைகள்.

புஸ்தகங்களுக்கு ஸ்டாம்பு வைத்து அனுப்புகின்றவர்கள் புஸ்தக கிரயத்துக்கு மேலாக புஸ்தகம் ஒன்றுக்கு ஒன்றரை அணா ஸ்டாம்பு அனுப்பவேண்டும். 8 அணாவுக்குக் குறைந்த ஆர்டருக்கு வி. பி. அனுப்பப்படமாட்டாது, ஆர்டர்களுக்கு பாதித்தொகையாவது முன்பணம் அனுப்ப வேண்டும்.

'குடி அரசு' 'ரிவோல்ட்' மாலைகள்.

குடி அரசு மாலைகள் கோர்வையாக முதல் வருஷத்திலிருந்து சென்ற வருஷம் வரை 5 வருஷகாலம் வெளியான மலர்களைத் தனித்தனி வருஷமாக பைண்ட் செய்து புஸ்தகமாக வைக்கப்பட்டிருக்கிறது.

ஒவ்வொரு வருஷமாலை கிரயம்	ரூ. 4—0—0
ரிவோல்ட்டு ஒரு வருஷமாலை பைண்ட் செய்தது கிரயம்	ரூ. 4—0—0

ஆர்டருடன் 1 ரூபாய் முன்பணமனுப்பவேண்டும்.

மானேஜர், குடி அரசு புத்தகாலயம்,
ஈரோடு.

ஜோதிமுத்து.

டாக்டர் B. A. எதிராஜுலுவினால் தயாரித்து 31 ஆண்டுகளாக அனுபவித்து கைகண்ட, கோஷாயி மேக எண்ணை (கோஷாயி ஒருவரால் அனுக்கிரகிக்கப்பெற்றது.)

சகோதர, சகோதரிகளே, வெட்டவாய்வு (அஷ்ட) எட்டு விதங்களாக, கர்ப்ப,—விந்து ஸ்தானங்களில் தங்கி, வெளியாகிக்கொண்டிருப்பதை அக்காலங்களில் கண்டித்து நீக்காமல் விட்டு நீடித்து நின்று மேகவாய்வு என்று பெயர் பெற்ற கொடியோன் கபாலத்தில் தங்கி, கபால இடி, குத்தல் நேத்திரத்தில் பார்வை மங்கல், பல குற்றங்களும், நாசி, செவி, தந்தங்கள், கண்டம் இவைகளில் குற்றங்களும், நெஞ்சில் தங்கி, மாரடைப்பு, தமரகவாய்வு, இணைரல், கொக்கிருமல், காசமாகவும், கீல்களில் தங்கி, சூலைகளாகவும் நரம்புகளில் தங்கி முன்-பின் (வீச்சுகள்) பலவித இழுப்புகளாகவும் வயற்றில் தங்கி, சகலவித குன்மங்கள் வாய்வு,ரூதககட்டிகள், பக்க விலா இழுப்பு குத்தல் கெர்ப குற்றங்கள் நித்திரை அற்ற நீர்தாரை ரோகங்கள், மூலங்கள், திமிர், மத மதப்பு, சகலவித மேகங்கள், சிட்டைகள் ரண குஷ்டங்களாகவும், மலப்போக்கு அல்லது சிக்கல் பட்டு ஜெனிக்கும் (விரிம்பிர்ப் பெருகும்) அனந்த வெட்டவாய்வு ரோகிகளும், 3 நேரம் கம், கோஷாயி மேக எண்ணை சாப்பிட்ட 7வது நாளே, எல்லா உபத்திரவத்திலிருந்து விலகி15வது நாள்பாலியதேஜசுடன்,விருத்தரும் பாலிய உணர்ச்சி பெற்றுவருவது பிரத்தியக்ஷம்

யோகாப்பியாசிகளுக்கு சடலத்திலுள்ள தூர்நீர்களை அகற்றி எல்லா அவயவங்களிலும் சுத்த இரத்தத்தை ஊட்டி, அறிவு இடத்தில் புத்தியை நிறுத்தி (ஜோதியாகிய) தன்னை தெரிசிக்க, காயத்தை இருகச்செய்து காக்கும் காயகர்ப்பம். 3 நேரம் உபயோகிக்கும் கோஷாயி மேக எண்ணை கொண்ட சீசா 1க்கு ரூ. 7—0—0. பத்திய விபரம் மருந்துடன். பாக்கிங்தபால் செலவு பிரத்தியேகம். மலாய் வாசிகள் ஆர்டருடன் பணம் அனுப்பவேண்டும்.

கோஷாயி வைத்தியசாலை,
தென்னூர், திருச்சி.

பி. எம். சி. லிங்கத்தின்
சுவாச காச நிவாரணி.

48-வேளை, மருந்தின் விலை 1—4—0
விபரங்களுக்கு எழுதவும்.

மருந்து கிடைக்குமிடம்:—
திருநாவுக்கரசு மெடிகல் ஹால்,
செவ்வாய்பேட்டை, சேலம். தென்னிந்தியா.

மதராஸ், சோல் ஏஜண்டு:—
தாதா & Co., 52 நைனியப்ப நாயகன் தெருவு மதராஸ்

பண்டிதர். உயர்திரு. சாமி சிதம்பரனர் அவர்களியற்றிய
மாதர் சுதந்திரம் அல்லது
பெண் மக்கள் பெருமை.

என்னும் அரிய நூல் விலை அணா 10. (பத்து)
கிடைக்குமிடங்கள்:- "குடி அரசு" புத்தகாலயம். ஈரோடு.
இம்பீரியல் பிரஸ், மாயவரம்.

அயர்லாண்ட் ஆஸ்பத்திரி குதிரைப்பந்தய லாட்டரி
மான்சேஸ்டர் நவம்பர் ஹேண்டிகேப் (நவம்பர் 28—1931)

1-வது பிரைஸ் 30000-பவுன்கள் 2-வது பிரைஸ் 15000-பவுன்கள், 3-வது பிரைஸ் 10000-பவுன்கள் வேறு 200 பிரைஸ்களுமுண்டு. டிக்கட் 1-க்கு ரூ. 7—8—0 டிக்கட்டுக்கு முன்பணத்துடன் முந்துங்கள்!

டிக்கட் கிடைக்குமிடம்:—
எஸ். கே. வரதராஜுலு, ஏஜண்ட், திருச்செங்கோடு S.I.

குடி அரசு வெளிநாட்டு
ஏஜண்டுகள்

சிங்கப்பூர்.

Mhd. Dulfakir & Co.,
34, North Bridge Rd.

India Novel depot
73, Serangoon Road

கோலாலம்பூர்.

The Selanger Stamp Co.,
Market Street.

S. S. Abdulkadir,
South Indian Boookstore,
122, Pitty street, penang

Sorojini Vilas Coffee Club,
85: Paul Street,
Seramban N. S.

The Central stores
61, Jalan Ibrahim,
Johore Bharu.

C. Kandiah,
85, Sultan street, Klang.

S. G. Sami Agency,
3, Jalan roya,
Sungei Pattani
Kedah, F. M S.

சிங்கப்பூரில் குடி அரசு
பதிப்பகப்புஸ்தகங்கள்
கிடைக்குமிடம்.

“முன்னேற்றம்” ஆபீஸ்,
152, சிலிகி ரோட், சிங்கப்பூர்

சுயமரியாதை இயக்கப் பத்திரிகைகள்.

—:0:—

‘குமரன்’

வாரப்பதிப்பு

உள்நாடு வருடசந்தா 5—0—0
வெளிநாடு வருடசந்தா 6—0—0

மாதப்பதிப்பு.

உள்நாடு வருடசந்தா 0—12—0
வெளிநாடுவருடசந்தா 1—0—0

ஆசிரியர்: சோ. முருகப்பா.

விலாசம்:—
மானேஜர், “குமரன்” காரைக்குடி
ராமநாதபுரம் ஜில்லா

‘முன்னேற்றம்’

வாரப்பதிப்பு

சிங்கப்பூரிலிருந்து வெளிவருவது
உள்நாடு சந்தா $. 3—0—0
இந்தியாவுக்கு ரூ. 5—0—0

ஆசிரியர்: கோ. சாரங்கபாணி

விலாசம்:—
மானேஜர், “முன்னேற்றம்”
152 சிலிகிரோட், சிங்கப்பூர்

‘புதுவைமுரசு’

வாரப்பதிப்பு

உள்நாடு வருடசந்தா 3—0—0
வெளிநாடு ” 4—0—0

மானேஜர், “புதுவைமுரசு”
4 லல்லிதொலாந்தால் வீதி
புதுச்சேரி.

‘நாடார் குலமித்திரன்’

வாரப்பதிப்பு

உள்நாடு வருடசந்தா 4—0—0
வெளிநாடு ” 5—0—0

ஆசிரியர்: சு. அ. முத்துநாடார்

விலாசம்:— மானேஜர்,
“நாடார்குல மித்திரன்”
அருப்புக்கோட்டை
ராமநாதபுரம் ஜில்லா.

‘தமிழன்’

வாரப்பதிப்பு

உள்நாடு வருடசந்தா 3—0—0
வெளிநாடு ” 4—0—0

ஆசிரியர்: ஜி. அப்பாதுரையார்

விலாசம்:—
மானேஜர் “தமிழன்”
ஆண்டர்சன் பேட்டை P.O.
கோலார் தங்கவயல் (S. I.)

சுயமரியாதை தலைவர்

போட்டோ படங்கள்.

சுயமரியாதைத்தலைவர் ஈ. வெ. இராமசாமி அவர்களின் போட்டோ படம்

$6\frac{1}{2}$ x $4\frac{3}{4}$ காப்பி 1-க்கு 0—8—0
டஜன் 1-க்கு 6—0—0

$8\frac{1}{2}$ x $6\frac{1}{2}$ காப்பி 1-க்கு
தபால் செலவுடன் ரூ. 1—4—0
வெளிநாட்டுக்கு ” 1—8—0

உள். ஷை டஜன் 1-க்கு
தபால்செலவுடன் ரூ 15—0—0

$6\frac{1}{2}$ x $4\frac{3}{4}$ காப்பி 1-க்கு
வெளிநாட்டுக்கு தபால்
செலவுடன் ரூ. 0—12—0

மற்ற தலைவர்களுடைய படங்களும் கிடைக்கும்.

ஒருகாப்பி வேண்டுவோர் 11 அணா ஸ்டாம்பு அனுப்பவேண்டும். வெளிநாட்டுக்காரர்கள் 12 அணா ஸ்டாம்பு அனுப்ப வேண்டும். ஆர்டருடன் முன்பணமனுப்பவேண்டும்.

பாலு & Co.,
ஓரியண்டல் போட்டோ ஹவுஸ்,
4வது கோர்ட் வீதி, ஈரோடு.

கெந்தக பஸ்பம்.

மேகுஷ்ட ரோகத்திற்கு 52 வருடங்களாக கையாண்டுவந்தது, ஏராளமான சர்ட்டிபிக்கேட்டும், தங்கமெடல்களும் பெற்றது.

இந்த கெந்தக பஸ்பம் மஹான் ராமலிங்க சுவாமியால் உபதேசிக்கப்பட்டது. மேக குஷ்டரோகம், 48 நாளில் சொஸ்தமாகிவிடும். அவுஷதம் மழைகாலத்திலும், வெய்யிற்காலத்திலும் சாப்பிடலாம, அவுஷதம் சாப்பிடும் காலத்தில் எத்தொழிலும் செய்யலாம். இந்த அவுஷதத்தால் குஷ்டரோகம் தீராவிட்டால் பிறகு கடவுள்தான் தீர்க்கவேணும். இந்த அவுஷதத்தால் வியாதி தீராதென்கிற சந்தேகப்பட்டவர்கள் எக்ரிமெண்டு செய்து கொண்டால் அவுஷதம் இனாமாய் அனுப்பப்படும். கீழ்கண்ட விலாசத்திற்கு விபரம் எழுதி தெரிந்துகொள்ளவும்.

48 நாள் சாப்பிடக்கூடிய அனுபான லேகியம், பஸ்பம், தைலம். விலை. ரூபா. 20—0—0

அவுஷதத்திற்கு ஆர்டர் செய்பவர் ரோகத்தின் விபரம் கண்டு எழுதவும். ஏழை ஜனங்கள் நேரில் வந்தால் அவுஷதம் இனாம்.

விலாசம்:—

ஆயுர்வேத வைத்திய பாஸ்கர
V. கலிவராயன்,
நிர்த்தன மங்கலம் போஸ்டு,
(வழி) சிக்கல், தஞ்சாவூர் ஜில்லா.

அரசாங்க இஞ்சினியர்களில் 14 பேர்களாலும், மற்ற
பிறபலர்களாலும் மதிக்கப்பெற்ற
“மோட்டார்கார் இயந்திர சாஸ்திரமும் அதன்
அநுபோகப்பயிற்சி முறையும்”.

50 படங்களுடன் 200 பக்கங்களடங்கிய புஸ்தகம் விலை ரூ. 2. தபால் செலவு வேறு. வெளிநாட்டு ஆடர்களுக்கு முன்பணம் அனுப்ப வேண்டும். ஏஜண்டுகள் தேவை.

மோட்டார் ஸ்கூல் 1916ம் வருஷம் ஸ்தாபிக்கப்பட்டது. இதில் 3 மாதத்தில் மோட்டார் டிரைவிங் அண்டு மெக்கானிசம் கற்றுக்கொடுத்து கவர்ன்மெண்ட் லைசென்ஸும், பாடசாலை சர்டிபிகேட்டு கொடுக்கப்படும்.

தென் இந்தியா மோட்டார் இஞ்ஜினீரிங் ஒர்க்ஸ்,
மைலாப்பூர், சென்னை.

சுயமரியாதைப் பொக்கிஷம்

எனும்

புதுவைமுரசு விசேஷ அநுபந்தம்.

இதில், சுயமரியாதை இயக்க அறிஞர், தலைவர், அனைவர் ஆப்டோன் படங்கள், அரியகட்டுரைகள், விகடங்கள், கிண்டல்கள், கவிகள் அடங்கியிருக்கின்றன. பத்திரிகைகள் அனைத்தும் நமது அநுபந்தத்தைப்பற்றித் தெரிவித்துள்ள நல்லபிப்பிராயங்களையும் வாசகர் அறிவர். 130 பக்கங்கள் கொண்டது விலை ஆறே அணா.

3 காப்பிகளுக்கு குறைந்த ஆர்டருக்கு வி. பி. யில் அனுப்ப முடியாது. ஒரு காப்பி வேண்டுவோர் 7-அணா ஸ்டாம்பு அனுப்புக,

மானேஜர்,
புதுவை முரசு,
புதுச்சேரி, F. இந்தியா.

உண்மை விளக்கம் பதிப்பகத்தில் அச்சிட்டு [illegible] ஈ. வெ. ராமசாமியால் வெளியிடப்பட்டது